518

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

518
4-56

10 OCT 1956

JL
211, N53 UM
N56.4.7
197668

சரும வியாதிகளுக்கு
சிராய்ப்புகள், வெட்டுகள், படை, சொரி, கரப்பான், கட்டிகள், கடி, விஷக்கடி, சதைத் தடிப்பு, முகப்பரு போன்ற இதர சரும உபாதைகளுக்கு
எக்ஸிமா
கட்டிகள்
பருக்கள்
வெட்டுக்காயம் புண்கள்
OINTMENT
Germex
CHLOROPHYLL
ஜெர்மெக்ஸ்
குளோரோபில் கலந்தது
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பார்மசூடிகல்ஸ் லிட்., மதராஸ்-1

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
OCT 1956
MADRAS
518
4-

பண்டிகை நாட்களிலும்

மற்றும் எல்லா நாட்களிலும்

துஷார்

வனஸ்பதி



ASP-T1-10/54

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்.,
கர்னூல், தென் இந்தியா

For

QUALITY DIAMONDS
EXQUISITE JEWELLERY
ARTISTIC SILVER WARES



M/s. T. GOVINDARAJULU NAIDU
DIAMOND MERCHANTS & JEWELLERS
28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone: 4818 **T.G.N.** Grams: "ALANKAR"

நவம்பர் ரிலீஸ்



பிரமோதா பிலிம்ஸ்...

ஹரிச்சந்திரா

...தமிழ்...

சிவாஜி கணேசன்.........ஹரிச்சந்திரா
ஜி. வரலக்ஷ்மி..................சந்திரமதி
T.S.பாலய்யா....................வீரபாகு
M.N.நம்பியார்..............விஸ்வாமித்திரர்
தங்கவேலு ....நக்ஷத்திரேயன்

வி.கே.ராமசாமி ....காலகண்டன்
முஸ்தபா.........................சத்தியகீர்த்தி
தேவர் ....காசிராஜன்
முத்துலக்ஷ்மி.....................காலகண்டி
மாஸ்டர் ஆநந்த்................லோகிதாஸன்

குசலகுமாரி E.V.சரோஜா

ஸ்டூடியோ
பிரகாஷ்

டைரக்ஷன்
பிரகாஷ்ராவ்

எமது
தீபாவளி வாழ்த்துக்கள்!
நான்கு
நன்மணிகள்
ZAMA
INHALER
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA
RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
அமர்கோஸ்
அசல் குளுகோஸ் பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 - - - சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"



எனது இனப்பெயர்—தமிழன்
எனது கொள்கை—சமதர்மம்
எனது தாய்நாடு — தமிழ்நாடு
எனது குடும்பம்—இந்திய சமுதாயம்
எனது கோரிக்கை—தமிழரசு
எனது பண்பு—தெய்வீகக் கலாசாரம்
எனது சமரசநெறி—சர்வதேச சகோதரத்துவம்

துணை ஆசிரியர்:
பூவை எஸ். ஆறுமுகம்

செடி 4 மலர் 7	நவம்பர், 56	துன்முகி ஞு ஐப்பசி மீ

பொருளடக்கம்

தமிழரசு உதயம் (தலையங்கம்) 9
ஏன் இந்த கவர்னர்? 10
வ. உ. சி. நினைவு நாள் 11
தம்பிக்கு (கடிதம்) 12
உங்களுடன் ஒரு கணம் 14
இலக்கியப் பட்டி மண்டபம் 15
'கங்கா ஸ்னானம் ஆச்சா?' 19
நாமக்கல் கவிஞர் (பேட்டி) 20
விளம்பரம் 28
திருநாள் (கவிதை) 32
வேண்டும் (கவிதை) 33
அன்புத் தீபாவளி (பாப்பா உமா) 34
ஒற்றை வளையல் (நாடகம்) 35
ஏன் இந்தப் புனைபெயர்? 43
உள்ளமும் உருவமும் 45
வாடா விளக்கு (தொடர்கதை) 51
காந்தி பொன்மொழி 58
கூண்டோடு கைலாசம் 56
நான் விரும்பும் எழுத்தாளர் 65
என்று காண்பேன்? 69
ஜாதி ரோஜா (தொடர் கதை) 77
தத்துவம் 83
அட்டைப்படப் பரிசு 84

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

ஆயிரத்தில் ஒன்று
அருமையானது என்று
புகழ் பெற்றது

புஹாரி ஹோட்டல்

- மாமிச உணவு, மரக்கறி உணவு வகைகள் தயாரிப்பதில் ஈடு இணையற்றது "புஹாரி"
- சுத்தம், சுகாதாரம், சுமுகமான சேவைக்கு பெயர் பெற்றது "புஹாரி"
- மாடிப்பூங்கா; விசாலமான, வசதி மிகுந்த டைனிங் ஹால்; ஏர்-கண்டிஷன்ட் ரூம்கள் என, அவகாசமாக அமர்ந்து ஆனந்தமாக உணவருந்த இடவசதிகள் நிறைந்தது 'புஹாரி'

புஹாரி பிரியாணிகள் விசேஷமானவை

197668

ஆராம்
புஹாரி ஹோட்டல்

... வுண்ட் ரோடு,
மதராஸ்-2.
போன்: 85972

246, சைனு பஜார்.
மதராஸ்-1.
போன்: 55540

மெரீனு ரெஸ்டெரன்ட்: போன்: 86844

தமிழரசு உதயம்

ஆம்; புதிய தமிழரசு உதயமாகிவிட்டது; பல ஆண்டுகளாக நாம் கண்டு வந்த கனவு இன்று நனவாகி விட்டது; தமிழகத்தின் சரித்திரத்திலே இன்று ஒரு புனித நாள்—இன்ப நாள். இந்த நவம்பர் முதல் தேதியைத் தமிழர்கள் மறக்கவே முடியாது.

பல போராட்டங்களை முன்னோடவிட்டுப் பிறந்திருக்கிறது இந்தத் தமிழ் ராஜ்யம்; சில உயிர்களைக் காணிக்கை வைத்து நாம் இந்தத் தமிழரசைப் பெற்றிருக்கிறோம். புதிய தமிழரசின் உதயத்தினால் பலன் பெறுபவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள்; புகழ் பெறுபவர்களும் அவர்களே. ஆனால், இன்றையத் தமிழகம் இப்படிப்பட்ட நிலையில் உயர, உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து அல்லும் பகலும் உழைத்தவர்கள் தமிழரசுக் கழகத்தினர் என்பதை நம் ஆட்சியினர் நினைக்கத் தவறினாலும், பொதுமக்கள் — நம் தமிழ் அன்பர்கள் நினைக்கத் தவறவே மாட்டார்கள். மலர்ந்திருக்கும் புதிய தமிழரசு, தலைவர் ம. பொ. சி. அவர்களின் நாட்டுப் பணிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற நவம்பர் முதல் நாள் விழாவை நம் தமிழ் ராஜ்யத்தில் அரசாங்க விழாவாக—தமிழ் விழாவாகக் கொண்டாட வேண்டியது சென்னை ஆட்சியினரின் தலையாய கடமையல்லவா? ஆனால், ஆட்சி பீடத்திலுள்ள மந்திரிகள் அனைவரும் மற்ற ராஜ்யங்கள் கொண்டாடும் விழாக்களில் கலந்து கொள்ளப் பறந்து சென்றிருக்கிறார்கள். இத்தகைய விந்தையான நிலையைப் பற்றிப் பிறர் அறிந்தால், ஏன் கைகொட்டிச் சிரிக்க மாட்டார்கள்? ஆனால், மந்திரிகளின் மனச்சாட்சி கைகொட்டிச் சிரிப்பதைப் பொறுத்துக் கொள்ளத் தைரியம் இன்றி, அவர்களெல்லாம் தமிழகத்தைத் துறந்து பறந்து சென்றுவிட்டார்கள் என்ற ரகசியத்தைத் தமிழ் மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

தென் குமரி கிடைத்துவிட்டது. வட எல்லை மீட்கப்பட வேண்டும்.

'நீலத்திரைக் கடலோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு!'

என்று அமரகவி பாரதியார் தீர்க்க தரிசனத்துடன் பாடிய பாட்டு முழுமை அடைய வேண்டும். வடஎல்லைப் போராட்டம் தமிழ் மக்களின் உரிமைப் போர்; அறப்போர். அறம் வென்றுதான் தீரும். நம் பூரணத் தமிழரசில் இந்த வெற்றி விழாவை—வட எல்லை மீட்சி விழாவை விரைவிலேயே கொண்டாடத்தான் போகிறோம்.

நம் அருமைத் தாயகத்திற்கு 'தமிழ் நாடு' என்று, 'வந்து போவோர்' பெயரிட்டால்தான் உண்டா? அதுதான் 'தமிழ் நாடு' என்று தானாகவே அமைந்து விட்டதே! இதோ, தமிழரசு உதயத்தைக் கொண்டாடுங்கள்.

ஏன் இந்தக் கவர்னர்?

திரு ஸ்ரீ பிரகாசா அவர்கள் கொலு வீற்றிருந்த கவர்னர் பதவிப் பீடம் இப்பொழுது காலியாக இருக்கிறது. அந்த இடத்தை நிரப்ப, தமிழரல்லாத எந்த வடநாட்டார் வரவிருக்கிறார் என்பதை நம்முடைய மத்திய ஆட்சியினர் இன்னமும் பரம ரகசியமாகவே வைத்திருக்கிறார்கள்.

ஆங்கிலேயர்களின் ஆட்சி முறையில் அறிமுகப் படுத்தப் பட்ட இந்தக் கவர்னர் பதவி, இப்போது நம் அரசியலமைப்பு முறைக்குத் தேவையே இல்லை. தேவையில்லாத இப்பதவிக்கு ஏறத்தாழப் பல லட்ச ரூபாய்களை ஆண்டுதோறும் வாரி இறைத்து விரயப்படுத்துவதென்பது அர்த்த மற்ற செலவாகும்.

ஆகவே, தற்காலிகமாகக் காலியாகக் காட்சியளிக்கும் இந்த கவர்னர் ஆசனம், நிரந்தரமாகவே காலியாக இருக்கவேண்டும். புதிய தமிழ் ராஜ்யம் உருவாகும் இந் நேரத்தில், இந்தப் புதிய மாற்றத்தைச் செயல் வடிவில் நிறைவேற்றித் தங்களுடைய சொந்த அதிகாரங்களை வலுப்படுத்திக் கொள்ளுவதில் சென்னை அரசினர் விழிப்புடன் இருக்கவேண்டும். பத்து லட்ச ரூபாய் சேமிக்கப் படுவதன் மூலம், பொது மக்களுடைய வரிப்பளுவும் ஓரளவு குறைய வழி பிறக்குமல்லவா?

கவிமணி வாழ்கிறார்!

கடந்த மாதத்தின் இடைப் பகுதியில் தமிழ் வழங்கும் பகுதிகளில் எல்லாம் கவிமணி விழா கொண்டாடப்பட்டது. 'தமிழகம் தனியரசாகத் திகழ வேண்டும்; தமிழ் மொழி ஆட்சி மொழியாக ஆகவேண்டும்' என்று அடிக்கடி சொல்லி வந்த நாஞ்சிற் புலவர், 'தமிழகத்தின் எல்லை வடவேங் கடம்; தென்குமரி' எனவும் பிரகடனம் செய்து வந்தார். திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகள் தாயகத்துடன் இணைய வேண்டுமென்று கனவு கண்டு வந்தவர் நம் குமரிமுனைக் கவிமன்னன். அவர் அன்று கண்ட கனவு, இன்று இன்ப நனவாகி விட்டது. தமிழ் கூறும் நல்லுலகிற்கு அவரது ஆசி என்றும் உண்டு.

திரு சஞ்சீவி ரெட்டிக்கு ஓர் எச்சரிக்கை

திருத்தணியில் அறப்போர் நடத்தும் தமிழரசுக் கழகத் தொண்டர்களை ஆந்திர அரசாங்கம் கொடுமையான முறையில் நடத்தி வருவதாகச் செய்திகள் விளக்குகின்றன. உரிமையைக் கோரும் தமிழர்களின் நியாயத்தைச் சிந்தித்து உணர முடியாத ஆந்திரம், சட்டத்தின் பாதுகாப்பில் நின்று விளையாடி வருகிறது. 'ஒழுங்கையும் அமைதியையும் நிலைநிறுத்துவதற்காகப் போலீஸ்காரர்கள் அவசியமான சில நடவடிக்கைகளை எடுத்திருக்கக் கூடும்' என்று பதில் சொல்லியிருக்கிறார் திரு ரெட்டி. இம்மாதிரியான பொறுப்பிழந்த – நியாய வரம்பைத் தாண்டிவிட்ட பதில் மறுமுறையும் அவரது சட்டத்திலிருந்து பிறக்குமேயானால், ஆந்திர சட்டசபைக் காங்கிரஸ் தலைவராக வெற்றி பெற்றிருக்கும் திரு சஞ்சீவி ரெட்டியின் பெயர் தமிழ் நாட்டில் ஒரு துரோகச் சின்னமாக நிலை நாட்டப்படும் கட்டம் வெகு தூரத்தில் இருக்காது.

முதற் பலி

வணக்கத்திற்குரிய திரு சங்கரலிங்கனுர் தம்முடைய பெயருக்கு அமரத்வம் கொடுத்து விட்டுப் புகழுடம்பு எய்திவிட்டார். அரசியலாருக்கு அவர் விடுத்துச் சென்ற பன்னிரண்டு கோரிக்கைகளுக்கும் அவரது தியாகம் ஓர் அடையாளக் குறிப்பு. இந்த முதற் பலியிலேனும் சென்னை ஆட்சி பீடம் கண் திறந்து, 'தமிழ் நாடு' என்ற பெயர் தமிழகமெங்கும் இன முழக்கம் புரிய வழிவகை செய்யுமென்று நம்புகின்ருேம்.

அஞ்சலி செய்கிருேம்

வட எல்லைச் சத்தியாக்ரகத்தில் பங்கு பெற்றுக் கைது செய்யப்பட்ட தமிழரசுக்கழகத் தொண்டர் திரு மாணிக்கம் அவர்கள் திடீரென்று மரணமடைந்து விட்ட துயரச் செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிருேம். இந்தத் தியாகி இறக்கும் பொழுதுகூட, 'ம. பொ. சி.! ...ம. பொ. சி!...'' என்று உச்சரித்துக் கொண்டே உயிர் நீத்தாரென்ருல், நம் தலைவர் பால் அவர் கொண்டிருந்த பக்திக்கு ஈடேது, இணையேது?

அன்பர் மாணிக்கம் அவர்களுக்கு எங்களுடைய அஞ்சலிகளைக் காணிக்கை வைக்கின்ருேம்.

வ. உ. சி. நினைவு நாள்

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு முதல் முழக்கம் செய்த கட்டபொம்மன் 'கொள்ளைக்காரன்' என்று அவதூருகப் பேசிய துரோக பரம்பரையைச் சேர்ந்த ஓர் அப்பாவியைச் சட்ட சபையில் தமிழ் அன்பர்கள் படுத்திய பாட்டைச் செய்தித் தாள்கள் அம்பலப் படுத்தின. தன் குற்றச்சாட்டை அந்த நிமிஷமே வாபஸ் வாங்கியது ஒன்றே போதும், வீரத் தியாகியின் பேரில் தமிழ் மக்கள் கொண்டிருக்கும் பக்தியை எடுத்துக் காட்ட! கட்டபொம்மன்விழாவையும் வ. உ. சி. விழாவையும் தமிழ் மண்ணுக்கு அறிமுகப்படுத்தி வைத்த பெருமை தலைவர் திரு ம.பொ.சி. அவர்களைச் சாரும். இது நாடறிந்த உண்மை.

''வந்தே மாதரம் என்று உயிர் போம் வரை வாழ்த்துவோம்; முடி தாழ்த்துவோம்,'' என்று குரல் தந்த கப்பலோட்டிய தமிழனின் விழா நாளது நவம்பர் 18-ம் நாள் வருகிறது. நன்றி மறவாத தமிழகம் இந் நினைவு நாளைச் சீரிய முறையில் கொண்டாட வேண்டும்.



குழந்தைக் கவிஞர் திரு **அழ. வள்ளியப்பா** அவர்கள் எழுதிய **'மலரும் உள்ளம்'** என்ற நூல் மத்திய அரசினரின் பரிசைப் பெற்றிருக்கிறது.

பேசிப் பழகு

"அன்புள்ள தம்பி!

'பண்புள்ள அண்ணு! அண்மையில் நீங்கள் பேசிய கூட்டங்களைத் தொடர்ந்து கேட்டு வந்தேன். எழுச்சி மிக்க உங்கள் வீர உரைகளைக் கேட்டு, அவற்றில் பொதிந்திருந்த கருத்துரைகளை எண்ணிக் களிப்படைந்தேன்!' என்ற உன்னுடைய ஆர்வமிக்க கடிதம் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். அதில் என்னைப் பற்றிய புகழுரைகள் இருந்தன. இனி வரும் கடிதங்களில் உன்னைப் பற்றிய புகழுரைகள் அடங்க வேண்டும். அத்தகைய கடிதங்கள் என் கரங்களிலே கிடைக்கும் போதுதான். நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைவேன்.

ஆம், தம்பி! நமது தமிழகம் செய்த தவப்பயனுக தமிழன்னை மாசு மருவற்ற மாணிக்கமான ம. பொ. சி-யை ஈன்றெடுத்திருக்கிருள். இந்தத் தமிழகம் உயர, எத்தனையோ அரும் பெரும் திட்டங்களை அவர் தந்திருக்கிருர்; இன்னும் தரப் போகிருர். அவைகளை மக்கள் முன்னே வைக்க நீயும் ஒரு பேச்சாளனுக மாற வேண்டும். உன் போன்ற எத்தனையோ தம்பிகளுக்குப் பேச ஆர்வம் இருக்கிறது; அவையிலே எழுந்து நின்றவுடன், அடக்கத்தின் காரணமாகவோ, அல்லது இதயத்தில் ஏற்படும் அச்சத்திஞலோ அவைகளை தேவையான நேரத்தில்தான் கையாள வேண்டும். அத்துடன் நீ பேசும் பொழுது அழகுத் தமிழில் பேச வேண்டும்; அடுக்குத் தமிழில் பேச வேண்டும்; படபட வென்று பேச வேண்டும் என்று எண்ணிஞல், நீ பேச நினைத்ததையெல்லாம் பேச முடியாமல், ஆரம்பத்திலேயே திணறி விடுவாய். போகப் போக, உன் தன்னம்பிக்கை வளர வளர, ஒரு விஷயத்தைப் பற்றிய விவரங்களை நன்ருகப் புரிந்து கொண்ட பிறகு, இயற்கையாகவே உன்னையும் மீறி உன் சொற்பொழிவு சிறப்புப் பெற்றுவிடும்.

உதாரணமாக, இன்றைய எல்லைப் பிரச்சினை. ஆந்திர ஆதிக்கத்தில் நம்முடைய சத்யாக்கிரகிகளைக் கைது செய்தார்கள். ஒரு ரூபாய் அபராதமாம்; அதைக் கட்டத் தவறிஞல் ஆறு வாரச் சிறைத் தண்டனையாம்! ஐயகோ! இத்தகைய அநீதிகளை வேறெந்த நாட்டிலாவது பார்த்திருக்கிருயா, தம்பி? இதைப் பற்றியும் பேசு.

காலமெல்லாம் யார் யார் நாட்டை ஆளுகிருர்களோ அவர்கள் பக்கமெல்லாம் சாய்ந்து நாட்டு மக்களைக் காட்டிக் கொடுப்பதையே தொழிலாகக் கொண்டு வருவதோடு, நமது எல்லை வீரர்களையும், சிறையிலே மாண்டு போன மாணிக்கம் போன்ற வீரர்களையும் இன்று துணிவோடு குறைத்துப் பேசும் ராமசாமி நாயக்கரின் இழி குணத்தைப் பற்றிப் பேசு.

எல்லைக் கமிஷன் அனுப்புகிறேன் என்று மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னே உறுதி தந்த பஞ்ச சீலத்தின் பாதுகாவலர்–ஆசியாவின் ஜோதி – அண்ணல் மகாத்மாவின் வாரிசு – என்றெல்லாம் மற்ற மாகாணங்களைவிட அதிகமாகப் பாராட்டிய நமக்கு சர்வாதிகாரியின் போக்கில் சென்று கொண்டிருக்கும் நேரு தந்த வாக்குறுதி காற்றிலே பறந்த காரணத்திஞலும், அதற்குப் பின்னே, நமது அமைச்சர்களும் அதைப் பற்றி அசட்டையாக இருந்த காரணத்தாலும் இன்று எத்தனையோ வீரத்தியாகிகள் ஆந்திரச்சிறையிலும், இங்கும் வாடுகி

ரூர்கள். நம் இனச் சகோதரர்கள் அனுபவிக்கும் துன்பங்களை அவையிலே அவனியறியப் பேசு.

அமையப்போகும் தமிழாட்சியில் ஆட்சி மொழி தமிழானல் மட்டும் போதாது; எல்லாத்துறையிலும் அறிவாற்றல் இருந்தும், ஆங்கிலம் தெரியவில்லையே என்ற ஏக்கநிலை ஒழியவேண்டும். சொந்த நாட்டிலே அவன் தாய்மொழியைப் புரிந்திருந்தால், தன் தொழிலறிவிற்குப் போதுமென்ற நிலை உண்டாக வேண்டும். பல ஆண்டு அனுபவம் இருந்தும், ஊதிய உயர்வைத் தவிர, உத்தியோக உயர்வு கிடைக்காமல் கஷ்டப்படுகிறனே, அவன் கவலை தீரப் பேசு.

எந்த நாட்டிலும் காண முடியாத இலக்கியச் செல்வங்கள் நம் நாட்டிலே இருக்கின்றன. நீ முன்னே அவைகளைப் படித்து அன்பும் அறமும் பண்பும் பயனும் பெற்று, அவற்றின் சுவைகளை மற்றவர்களுக்குச் சொல்லு. ஒவ்வொரு நாளிலும் இரண்டு திருக்குறளை மனப்பாடம் செய்து கொள். பின்னே அவைகளின் சுவையைச் சொல்லி மற்றவர்களைப் பழகச் சொல். ராமலிங்கனர் அன்பைப் படி; அன்பின் மூலமாக நீ காணும் ஆண்டவனை மற்றவர்களுக்குக் காட்டு. பாரதியாரின் கவிதைகளைப் பார். அதிலே காணும் நாட்டுக்குத் தேவையான திட்டங்களையும், வாழ்விற்குத் தேவையான பற்பல முன்னேற்றக் கருத்துக்களையும் புரியப் படித்து அறிந்து கொள். அதன் புதுமையைப் புதிய கண்ணோட்டத்தோடு மற்றவர்களுக்குக் காட்டு.

இன்றைய புதிய காங்கிரஸ்காரர்கள் காந்தியத்தைப் புரிந்து கொள்ளாமல், உலக உத்தமர் மகாத்மா சொல்லிய திட்டங்களையே செயலாற்றும்படி கேட்டால், சுட்டுக் கொல்லுகிறர்கள். அந்தத் துப்பாக்கிகளுக்கு இரையாகிய வீரர்களின் குடும்பங்கள் வீதியிலே வேதனையடைந்து அனதைகளாக அல்லல் படுவதையும், தம்முடைய ஆதிக்க வாழ்வு அழிந்து போகக் கூடாதேயென்று அவர்கள் செய்யும் அக்கிரமங்களையும் அச்சமில்லாமல் அழுத்தம் திருத்தமாகச் சொல். நாடு விடுதலை அடைய, ஆங்கில ஆதிக்கத்தின் பயங்கரச் சூழ்நிலையிலும், தியாகத் தீயிலே இறங்கி, புழுதியிலே கலந்துவிட்ட அந்தப் புனிதர்களின் குடும்பத்தினர் பட்டினியால் பதை பதைத்துச் சாகிறூர்கள். அப்படி அவர்கள் வந்து புனர் வாழ்வு கேட்டால், 'போங்கள் மீண்டும் சிறைக்கு!' என்று தள்ளுகிறர்கள். இவைகளை நீ பேச புலமை தேவையில்லை. இவையெல்லாம் உனக்குத் தெரிந்த செய்திகளே!

பாரதத்திலுள்ள மற்ற மற்ற மாகாணங்களில் தன் இனத்திற்கு ஆபத்து என்று எண்ணினல், எந்தக் கழகமானலும் சரி, கட்சியானலும் சரி, சங்கமானலும் சரி, சமஷ்டியானலும் சரி, அந்தப் பொதுப் பிரச்சினைக்குப் பொங்கி எழுகிறூர்கள் — ஒரே குரலுடன். கொள்கை மாறுபாடுகளையோ, கருத்து வேறுபாடுகளையோ கவனிப்பதில்லை. நம் நாட்டில் கழகத் தொண்டன் மாண்டுபோனலும் சரி, சித்திரவதை செய்யப்பட்டாலும் சரி, இங்கு அதைப் பற்றியெல்லாம் யாருமே பேச மாட்டார்கள். இனியும் நாம் இப்படியே சென்றுகொண்டிருந்தால், எதிர்காலத்தில் நம்முடைய நிலை என்னகும் என்பதைப் பற்றிப் பணிவோடு பேசி, நம்மிடையே ஒற்றுமை உருவாவதற்கு உயிரான அந்த ஒற்றுமையின் சக்தியை மற்றவர்கள் புரிந்து கொள்ளும்படி பேசு. நீ அப்படி மேடையிலே பேசினல் மட்டும் போதாது. முதலிலே நீ அவர்களிடம் நட்பு கொண்டு பழகி, மற்றவர்களுக்கு வழி காட்டு.

இப்படி இன்னும் எத்தனையோ பலபல பொருள்களைப்பற்றி நீ பேசப் பழகிக் கொள்ளலாம். நான் கூறியது போன்று, இதற்கெல்லாம் ஆராய்ச்சியின் அறிவு தேவை என்றெண்ணி அயர்ந்து விடாதே. முயற்சி செய்தால், முடியாதது ஒன்றும் இல்லை.

அன்புள்ள தமையன்.''

உங்களுடன் ஒரு கணம்...

'தெய்வம் அன்பென வரும் தீபாவளி!' என்று கவிதை புனைந்திருக்கிறார் நம் நாமக்கல் கவிஞர் அவர்கள். நாம் தெய்வநம்பிக்கை கொண்டவர்கள். இன்று தீபாவளிப் புனித நாள்; தீப மங்கள ஜோதி வடிவான ஆண்டவனைத் தொழும் தெய்வத் திருநாள்.

'உமா' வாசகர்களுக்கும், 'உமா'வின் பால் நல்லெண்ணம் வைத்து உற்சாகம் பொங்க எங்களுடன் ஒத்துழைத்து வரும் விற்பனையாளர்களுக்கும், 'உமா'வின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட எழுத்தாளர் – ஆசிரியர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் எங்களுடைய தீபாவளி வாழ்த்துக்கள்!

இந்த 'உமா' தீபாவளி இதழ். உங்களுக்கு நன்கு அறிமுகமான எழுத்தாளர்களின் கருத்துரைகளை வெவ்வேறு வடிவில் சேகரம் செய்து தந்திருக்கின்றோம்.

'இலக்கியப் பட்டி மண்ட'பத்தைப் பாராட்டி எழுதியிருக்கும் அன்பர்களுக்கு எங்களது நன்றி என்றும் உண்டு.

ஓவிய மன்னர் திரு மாதவன் அவர்கள் கலைத்திறனுடன் உருவாக்கியுள்ள இவ்விதழின் பேசும் பொற் சித்திரம் உங்களிடம் பேசும்—நீங்கள் கலைக் கண்களுடனும் இலக்கிய நெஞ்சத்துடனும் கூர்ந்து நோக்கினால். ஒரே ஒரு வரி விளக்கம் போதும். வெற்றி பெறுபவர்களுக்கு டிசம்பர் இதழ் 'உமா' பரிசளிக்கப்படும்.

அடுத்த இதழ் வழக்கம் போலவே சிறப்பான முறையில், 'உமா இலக்கிய முத்திரை'யுடன் வெளிவரும்.

ஆமாம்; பொங்கல் மலர் வேலைகள் ஆரம்பமாகி விட்டன. விற்பனையாளர்கள் தங்களுக்குத் தேவையான பிரதிகளுக்கு டிசம்பர் முதல் வாரத்திற்குள் எங்கள் விநியோக இலாகாவிற்குத் தெரிவித்துவிட வேண்டும். வணக்கம்.

ஆசிரியர்.



உமா பொங்கல் மலர்

கண்ணையும் கருத்தையும் கவரும் கலையழகுடன் தயாராகிறது.

விலை அணா எட்டு

பெண்டிர் நிலை

ஆ. ரா. இந்திரா

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னல் நடந்த சம்பவம். சங்கப் பாடல் ஒன்று இதைத் தருகிறது.

தமிழ் நாட்டினை ஒட்டிப் பரந்து கிடந்த ஒரு பாலைவனம். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் ஒரே மணற்பரப்பு. எங்கும் நிழல் இல்லை. கொடுமையான வெய்யில்.

வயதான கிழவி ஒருத்தி இந்த வனத்தில் நடந்து செல்கிருள். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் எதையோ தேடித் தேடி அலைந்து, ஒளியிழந்த கண்களோடு நடந்து நடந்து, நடக்க முடியாமல் தள்ளாடுகிருள். அவளுக்கு எதிரே, இதோ, அந்தணர் சிலர் பாலைவன வெப்பத்தைப் பொருட்படுத்தாதவர் போல வருகின்றனர். ''வீட்டிற்குள் – வெறுந்தரையில் – ஓரடி எடுத்து வைக்காத என் செல்வத் திருமகள் இந்தப் பாலைவனக் கொதிப்பை எப்படி மிதித்தாளோ! ஆனல் இந்த அந்தணர்– அவர்கள் புலனடக்கத்தின் பயனல்தானே, என்னவோ – இந்த வெப்பத்தை லட்சியம் செய்ததாகவே தெரியவில்லையே!'' – இப்படி ஓடுகிறது கிழவியின் சிந்தனை. இதை அவர்களிடம் கேட்டும் விடுகிருள்.

''உங்களுக்கு இந்த வெப்பம் பொருந்திய காட்டில் நடமாடுவது

இப்பகுதியில் பங்கு பெற வேண்டி நாங்கள் அனுப்பிய அழைப்பை உவகையோடு ஏற்றுக்கொண்ட தமிழன்பர்கள்: பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனர்; சிலம்புச் செல்வர் ம. பொ. சி; பேராசிரியர் அ. சீநிவாசராகவன்; 'கலைமகள்' ஆசிரியர், செந்தமிழ்ச் செல்வர் கி. வா. ஜகந்நாதன்; பன்மொழிப்புலர் கா. அப்பாத்துரை; பேராசிரியை ஆ. ரா. இந்திரா; 'ஈழகேசரி' ஆசிரியர் இராஜ அரியரத்தினம்; அண்ணமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்; 'கலைக்கதிர்' போ. குருசாமி. கடந்த அக்டோபர் இதழில் பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள் எழுதிய 'அறம்' வெளியாகியிருந்தது. இவ்விதழ் 'பெண்டிர் நிலை' பற்றிக் கூறுகிறது. இதன் பிற்பகுதி அடுத்த இதழில் நிறைவு பெறும். திருமதி ஆ. ரா. இந்திரா அவர்கள், எத்திராஜ் பெண்கள் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பேராசிரியை. எம். ஏ. பட்டம் பெற்றவர்; சஞ்சிகைகள் இவருடைய பெயரை அஞ்சல் செய்து வருகின்றன. இலக்கிய மேடைகள் இவருடைய பெயரை ஒலிபரப்பி வருகின்றன.

எவ்வளவு இயல்பாயிருக்கிறது! வெம்மையைத் தாங்குவதே உங்கள் ஒழுக்கமோ?.... நானே.... ஆனல், என் மகளோ?... என் மகள் ஒருத்தியும், இன்னெருத்தி மகன் ஒருவனுமாக இருவர் – எப்படித்தான் அவர்கள் வேறு ஒருவரும் அறியாமல் தங்கள் நட்பைத் தாங்களே வளர்த்தார்களோ!– அவர்கள் இருவர் இந்த வழியில், கொதிப்பு நிறைந்த இதே வழியில் எதிர்ப்பட்டார்களா? நீங்கள் கண்டீர்களா?

"…. …. …. …. …. …. அந்தணிர்
வெவ் இடைச் செலல்மாலை ஒழுக்கத்திர்!
இவ்இடை
என் மகள் ஒருத்தியும் பிறள் மகன்
ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்
அன்னர் இருவரைக் காணிரோ பெரும!"

இப்போது நமக்கு விஷயம் விளங்குகிறது. பெண்ணெருத்தி – நல்ல குடியில் பிறந்த பெண்ணெருத்தி–தன் உள்ளத்தைக் கவர்ந்த தலைவனை மணக்க விரும்பினள். பெற்றோரும், உற்றாரும் இதை ஆதரிக்கவில்லை. ஒருவரும் அறியாமல் தலைவனும், தலைவியும் தாங்கள் பிறந்து வளர்ந்த தாயகத்தை விட்டு, உலகப் பரப்பில் தனிமையாய் – இருவரும் சேர்ந்து – அடியெடுத்து வைக்கின்றனர். கடக்க முடியாத பாலைகளிலும் நடக்க முற்படுகின்றனர், தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள. அவர்கள் அன்பு வானினும் உயர்ந்தது; கடலை விட ஆழமானது; உலகத்தைவிட மிகப் பெரிது. இந்தப் பெருமித சக்தி, பாலை வெம்மையைத் தாங்கும் பொறுமையைத் தராதா? பொறுமையா? இல்லை, வெம்மையைத் தாங்கும் இன்பத்தை அல்லவா அது கொடுக்கும்? அன்றைய சமுதாய வாழ்க்கையில் எத்தனை பேர் இந்த அனுபவத்தைப் பெற்றார்களோ? புலவனுடைய இலட்சிய உலகத்தில் பலர் அனுபவித்ததாக இந்தக் காட்சி சித்திரிக்கப்படுகிறது. ஆனல், இத்தகைய உடன்போக்கை எண்ணிச் சாம்புகிருள், மற்றெரு பெண்–தலைவியின் செவிலித்தாய். வீட்டை விட்டு வெளியேறிய பெண் திலகம் எந்த வழியாகத் தன் பயணத்தை நடத்தினளோ, அதே பாலை வழியில், பாவம், இவளும் சென்று மகளைத் தேடுகின்ருள். வெய்யிலில் மகள் என்ன வருந்தினளோ என்று எண்ணி, நைந்த உள்ளத்தோடு, வழிப்போக்கர்களாக எதிர்ப்பட்ட அந்தணர்களுடன் இவள் நடத்திய பேச்சைச் சற்றுமுன் கேட்டோம்.

செவிலித் தாய்க்கு மகள் பிரிந்து சென்றது புதுமை அனுபவம். ஆனல், அந்தணர்களுக்கோ தலைவனும், தலைவியும் ஒன்றுசேர்ந்து வாழ்க்கை நடத்த முற்பட்டது மிகப் பழக்கமான செய்தி. அவர்கள் எத்தனையோ இளங் காதலர்களைக் கண்டவர்கள். "காதலர்கள் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்பதை உணர்ந்தவர்கள். "காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கை கொடுப்ப"தில் தான் மாதர் அறம் நாளுக்கு நாள் புதுமையும், பொலிவும், நிறைவும் அடைகின்றது என்னும் முடிவுக்கு வந்தவர்கள். கிழவியின் வேதனை – மகளைப் பிரிந்த துயரம்– அவர்களுக்கு அறத்தோடு பொருந்தியதாகத் தோன்றவில்லை. மக்களைப் பெற்றவர் எப்பொழுதும் தாங்களே அதன் பயனை அடைந்து கொண்டிருக்க முடியுமா என நினைக்கிருர்கள்.

மணம் வீசும் சந்தனம் மலையில் தான் பிறக்கின்றது. ஆனல், மலையே அதைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா? மற்றவர் அணிந்து, அதன் மணத்தை அனுபவிக்கும் பொழுதல்லவா அதன் வாழ்வும் நிறைவு பெறும்; அதைப் பெற்ற மலையும் பெருமை யடையும்! கடலிலே பிறந்த முத்து, கடலுக்குள்ளேயே ஆழ்ந்து கிடந்தால் ஒளி பெறுவது எப்போது? யாழின் தந்திகளின் இயக்கத்தால் பிறக்கும் இசை நாதம், கேட்டு இன்பமடைபவனல் அல்லவா பெருமையடைகின்றது! யாழுக்கும் அத

ஞல்தானே பெருமை? இப்படித் தான் ஒரு பெண்ணின் வாழ்க்கையும். மனமொத்த கணவனைக் கைப்பிடித்து இல்லறத் தலைவியாக மாறுவதே அவள் பெருமை. இதை, அனுபவம் நிறைந்த இந்தக் கிழவி தெரிந்து கொள்ளவில்லையே! இந்த உண்மையைக் கிழவிக்கு நினைவுபடுத்த முற்படுகிருர்கள் அந்தணர்கள். "உங்கள் மகளைப் பார்க்காமல் என்ன, பார்த்தோம்" என்று தொடங்குகிருர்கள்:

"காணேம் அல்லேம், கண்டனம்,
வனத்திடை;
ஆண் எழில் அண்ணலோடு அருஞ்சுரம்
முன்னிய
மாண் இழை மடவரல் தாயிர் நீர் போறிர்;
பலஉறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு
அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம்
என் செய்யும்!
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு
அனையளே.
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு
அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதான்
என்செய்யும்!
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு
அனையளே.
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்குஅல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதான்
என்செய்யும்!
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு
அனையளே!

எனவே, வருந்தவேண்டாம். அவள் சென்ற பாதை சிறந்த பாதை. அவள் கற்புக்குத்தான் ஒரு அளவு உண்டா? தன்னைவிட, தன் பெற்ருேரை விட, சிறந்தவனுகத் தான் தேர்ந்தெடுத்த தலைவனை வழிபட்டு, அவன் வழியிலே சென்ருள். இதுதானே பெண்கள் நடந்து செல்லவேண்டிய தருமப் பாதை?

எனவாங்கு,
இறந்த கற்பினட்கு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீச் சென்றனள்
அறம் தலை பிரியா ஆறும் மற்று அதுவே."
—(கலித்தொகை-9)

இந்த நூற்ருண்டில் நம்மில் சிலர் ஒருவேளை இந்தக் கருத்தை மறுக்கலாம். ஆனல் பழந்தமிழ் இலக்கியங்கள் பெண்களைப் பற்றிப் பேசுகின்றபோது, குறிப்பாகவும் நேரிடையாகவும் தருகின்ற செய்தி இது.

(அடுத்த இதழில் முடியும்)

Telegrams: "ARROWS" Telephone: 4706

USE ALWAYS

P. S. R. BRAND

GINGELLY OIL, CASTOR OIL, MUSTARD OIL

(Scientifically Prepared for Internal and External Use)

ARROWS COCOANUT OIL, JOTHI CASTOR OIL (Regd.)

(BEST QUALITIES)

ஜோதி சிற்ருமணக்கு எண்ணெய்

(உத்தரவாதமுள்ளது)

எல்லாவித எண்ணெய் வகைகளும் சுத்தமாகக் கிடைக்கும்

P. S. RATHINASABAPATHY CHETTY

No. 15, ANNA PILLAI ST. :: MADRAS-1.

PRESIDENT VEGETABLE hair oil
RATHOD TRADING CO
MADRAS 1
PRESIDENT BORATED TALCUM POWDER
RATHOD TRADING CO
PRESIDENT SNOW
பிரசிடெண்ட்
வெஜிடபில்
ஹேர் ஆயில்
ஸ்னோ
டால்கம் பவுடர்
மணத்திலும் குணத்திலும்
சிறந்தது.
RATHOD TRADING CO., MADRAS-1.
murli

"கங்கா ஸ்னானம் ஆச்சா?"

'ரஜனா'

காதலன்-காதலி

(புது முறை ஜோடி)

அவன் : உஷா உஷா....! கங்கா ஸ்னானம் ஆச்சா? இதோ, இங்கே என்னைப் பாரேன்!

அவள் : ஓ....! உங்களுக்கும் கங்கா ஸ்னானம் ஆகிவிட்டதல்லவா....?

அவன்: இதோ, என் கையிலிருக்கும் மத்தாப்பைப் பார்த்தாயா?.... உன் சிரிப்பின் ஒளி போலவே இருக்குதில்லையா ....?

அவள்: ஏன், இந்தப் பாம்பு வாணம் மட்டும் என்னவாம்?... உங்கள் தலைக் கிராப்பு மாதிரி வளைந்து வளைந்து செல்கிறது. பார்த்தீர்களா....!

அவன் : அது கிடக்கட்டும். அந்த நீல ஜார்ஜெட் உன் தங்க மேனிக்கு என்ன மாய்ப் பொருந்தியிருக்கிறது தெரியுமா....?

அவள்: உங்க ரோஸ் லினன் புஷ்கோட்டு.... ஐயோ, என் கண்ணே பட்டுவிடப்போகிறது...!

அவன் : ம்... அடுத்த தடவை யாவது நமக்குத் தலை தீபாவளியாக இருக்குமா, உஷா...?

*

கணவன் — மனைவி

(தலை தீபாவளிக்காரர்கள்)

கணவன் : சரோ, சரோ, நான் தீபாவளிக்கு எப்படியோ இங்கு வந்து விட்டதில் உனக்கு ரொம்பத் திருப்திதானே?

மனைவி : (குறும்பாக) இல்லையே, ரொம்ப அதிருப்தி. இந்த மாதிரி இரைந்து சிரிக்காதீர்கள்.

கணவன்: பார்த்தியா, இந்தக் குஞ்சாலாடு உன் பேச்சுக்கு முன்னாலே எனக்குக் கசப்பாகத் தோன்றுகிறது.

மனைவி: (வெட்கமாக) போதுமே உங்க வருணனையும், நீங்களும்!

கணவன் : நான் மட்டும் என் கையிலிருந்த பணத்தைக் கொண்டு 'ரிஸ்ட்-வாட்ச்' வாங்கி, உன் அப்பா வாங்கித் தந்தார் என்று சொல்லாமே இருந்தேனா, எங்க அப்பா என்னை இங்கே வர விட்டிருப்பாரா...?

மனைவி: அல்லது, இந்த இனிமை தான் எனக்குக் கிட்டியிருக்குமா? நீங்கள் என் மனித தெய்வம்....!

*

பின்னாலிருந்து இரு குரல்கள்

குரல்: 1 அப்பா, வெடிக்காத பட்டாசையெல்லாம் என்னப்பா செய்யட்டும்?......நெருப்பிலே போடட்டுமா...?

குரல்: 2 அம்மோவ், மைசூர்ப் பாகைக் கடித்தவுடனே பல் ஒன்று விழுந்துவிட்டது? அம்மா...ஓ...ஓ!

தந்தை-தாய்: அப்பப்பா......! இந்தத் தீபாவளி யாருக்கு வேண்டியிருக்கிறது...?

*

பேரன்—பேரன் மனைவி

ஜோடிக் குரல்: தாத்தா, பாட்டி! என்ன, கங்கா ஸ்னானம் ஆச்சா...? தீபாவளி நமஸ்காரம் செய்ய வந்திருக்கோம்....!

தாத்தா-பாட்டி: அப்படியா...! ரொம்ப சந்தோஷம்... பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழுங்கோ....! ★

நாமக்கல்

'பாண்டியா, நீ புலவனடா!'

ஈ. ஹெச். எல்லியட் துரை யென்றால், அப்பொழுது கோயமுத்தூர் பிராஞ்ச் ஸ்கூலில் எல்லோருக்குமே சிம்மசொப்பனம்— ஆமாம், வாத்தியார்களுக்கும் மாணவர்களுக்கும் சேர்த்துதான். காரணம், அவர் ஆங்கிலேயர் என்பதல்ல; அவர் அந்தப் பள்ளியின் பிரின்ஸிபால். வாரத்தில் ஒருநாள் மூன்றாவது பாரத்தில் நாற்பது நிமிஷங்கள் வரை அவருடைய 'தலை' ஊசலாடிக் கொண்டிருக்கும். 'நாகரிகப் பழக்க வழக்கங்கள்' என்ற பொருளைப் பற்றி பையன்கள் அன்றைக்குக் கட்டுரை எழுத வேண்டும் – ஆங்கிலத்தில். பாவம், மண்டையைப் போட்டு உருட்டிக்கொண்டார்கள். பிறகு வெள்ளைக் காகிதத்தை எவ்வளவு கறுப்பாக்க முடியுமோ, அவ்வளவு அழகாகக் கறுப்பாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரே ஒரு பையன் மாத்திரம் வியாசம் எழுதவில்லை; துரையை மனக் காமிராவில் படம்பிடித்துச் சிந்தையில் இருத்தி, பின்னர் பென்சில் வழியே சித்திர நோட்டுப் புத்தகத்தில் வரையலானான். கிறுக்குவதும் அழிப்பதும், பிறகு சிந்திப்பதுமாக இருந்த அவன், கடைசியாக துரையிடம் அகப்பட்டுக் கொண்டான். ஹெட்மாஸ்டருடைய உருவத்தை கேலிச்சித்திரமாக வரைந்ததற்குப் பரிசாக பிரம்படி வாங்கிய அந்தக் கைகள் இரண்டும் கண்ணீரைச் சிந்தின. ஆனால் இந்தத் துரையோ, சிறுவனின் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு, பதினெட்டு காரட் தங்கம் கொண்ட தன்னுடைய அழகான தங்கப் பென்சிலை சம்மானமாகத் தந்தார். 'டிராயிங்கை விடாமல் பழகு; பாடங்களையும் நன்றாகப் படி' என்ற புத்திமதி; வியாசம் எழுதுவதற்குத் துணை புரியும் நூல்; வேத நூல் – இவையும் துரையின் பரிசில்கள்தாம்.

இந்தச் சுட்டிப் பயலின் அப்பா தம்முடைய போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர் உடுப்புக்களை இவனிடம் கொடுத்துக் கண்ணாரக் கண்டு மனமார வாழ்த்த ஆசைப்பட்டார்; ஆனால், பையன் ஏனோ அப்படி ஆசைப்படவில்லை. நாமக்கல் தாலுகா கச்சேரியில் குமாஸ்தாவாகப் பணியாற்றவேணும் ஆசைப்படும்படி வேண்டினார் தந்தை. 'சரி' என்று மகன் சொன்ன சொல் மூன்று மாதங்கள் வரை 'காலாவதி' ஆகாமல் இருந்தது. பிறகு, வாத்தியாராக வேஷம் புனைந்தான். அதுவும் முன்போல மூன்றே மூன்று மாதங்களுக்குத்தான்!

சித்திரம் அந்தப் பையனைப் பைத்தியமாக அடித்தது. அவனுடைய சித்திரங்களினால் பைத்தியமானவர்கள் சிம்ஸன் என்ற எஞ்சினீயர் துரை; செட்டிமார் நாட்டுப் பிரமுகர்கள், ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்.

1906-ல் வங்கப் பிரிவினை நடந்தது; 'வந்தேமாதர' கோஷம் புறப்பட்டது. பையன் தேசபக்தனாகிச் சிறை புகுந்தான். பாட ஆரம்பித்தான். "திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது; காந்தி விதைத்த விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது," என்ற ராஜாஜியின் புகழ்மாலை கிடைத்தது. இந்த மணத்தின் சூழலிலே நம் 'பையனை' காந்தியக் கவிஞராகக் கண்டோம்; ஆஸ்தான கவிஞராகவும் கௌரவித்தது தமிழ்மண்.

கவிஞர்

‘கத்தியின்றி ரத்தமின்றி......!’

‘‘திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது; காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது,’’ என்று திரு ராஜாஜி முன்னம் கூறியிருக்கிறார்கள் அல்லவா? அப்படியென்றால் தாங்கள் ஒரு கவிஞராக ஆனது, காந்தியடிகள் அரசியலிலே ஒரு புதுப் பாதையைக் கடைப்பிடித்ததால் ஏற்பட்ட தற்செயலான ஒரு திருப்பம்தானா?

இதற்குச் சரியான விடை சொல்லத் தகுந்தவர் ராஜாஜி அவர்களே. ஆனாலும் அவர் எந்தக் கருத்தில் இப்படிச் சொல்லியிருக்கிறார் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். இந்திய நாடு அந்நியர்களின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற தேசபக்தி ஆவேசத்தை பாமர மக்களிடை திலகர் பெருமான்தான் முதன் முதல் உண்டாக்கினவர். திலகருக்கும் முன்னால் வெறும் மிதவாதப் பேச்சுகள்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த மிதவாதப் பேச்சுகள் பயனற்றவை என்ற புரட்சி எண்ணத்தை உண்டாக்கினவர் திலகர் பெருமான்தான். அதற்குத் தகுந்த மாதிரி, பாரதியார் தேசபக்தி ஆவேசம் மூட்டக் கூடிய பாடல்களைப் பாடினார். அதைக் குறிக்கத்தான் நான்,

‘‘படித்தறியா மிக ஏழைக் கிழவனேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பானாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக்
கொட்டி
தோளைமிகுந்த கந்தலுடை சுருக்கிக்கட்டி
எடுத்தெறிய வேண்டும் இந்த அடிமை
வாழ்வை
இப்பொழுதே இக்கணமே என்றென்
றார்த்து
அடித்துரைத்து ஆவேசம் கொள்வா
னென்றால்
அப்பாட்டின் மகிமை சொல்ல யாரே
வல்லார் ?’’

என்று பாடினேன். இதை எண்ணித்தான், ‘திலகருடைய தேச பக்தி ஆவேசத்தைப் பாரதியார் பாட்டாகப் பாடினார்’ என்று திரு ராஜாஜி அவர்கள் குறித்திருக்க வேண்டும்.

காந்தியடிகள் சுதந்தரப் போராட்டத்தை ஆரம்பித்த காலத்தில் அதை வரவேற்றுப் பாரதியார் காந்தி பஞ்சகம் பாடினார். அதன் பிறகு பாரதி மறைந்து விட்டார். காந்திய இயக்கம் தீவிரமாக நடக்கும் போது அதைப் பற்றிப் பாட்டுகள் பாடித்தர ‘பாரதியார் இல்லையே’ என்று ஏங்கிய நான் காந்தியடிகளுடைய சாத்வீக இயக்கத்துக்குத் தகுந்தபடியான பாடல்களைப் பாடினேன். அந்தப் பாடல்கள், அப்போதைக்கப்போது திரு. வி. க. அவர்கள் வெளியிட்டு வந்த ‘தேசபக்த’னில் வெளியிடப்பட்டன. பத்திரிகைகளில் அவற்றைப் பார்த்த ராஜாஜி அவர்கள் உடனுக்குடன் அந்தப் பாட்டுகள் காந்திய இயக்கத்துக்கு மிகவும் பொருத்தமுள்ளனவாக இருப்பதாகப் பாராட்டி எனக்குக் கடிதம் எழுதுவார்கள். திருச்சிராப்பள்ளி டாக்டர் ராஜன் அவர்கள் வீட்டிலிருந்து ராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாக்கிரகம் செய்ய வேதாரண்யத்திற்குப்போனபோது, என்னுடைய ‘கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது’ என்ற பாட்டுதான் வழிநடைப் பாட்டாக இருந்தது. தஞ்சாவூரில் ராஜாஜி அவர்களும், அவருடன் சென்ற தொண்டர்களும் ‘தாரன்’ என்ற

பேட்டிக் கட்டுரை:

பூவை எஸ். ஆறுமுகம்

ஆங்கிலேய ஜில்லா கலெக்டரால் பல துன்பங்களுக்கு ஆளான பின், உணவு கிடைத்து ஒரு சத்திரத்தில் சற்று ஓய்ந்திருந்த நேரத்தில், எனக்கு ஒரு கடிதம் எழுதினர். அந்தக் கடிதத்தில், "ஆசீர்வாதம். உங்களுடைய 'கத்தியின்றி ரத்தமின்றி' என்ற பாட்டு மிகவும் நன்ருக அமைந்திருக்கிறது. காந்தி சத்தியாக்ரகத்திற்கு வேண்டிய பாட்டுகளை எழுதித்தர பாரதியார் இல்லாமற் போனுரே என்று நான் எண்ணியதுண்டு. அந்தக் குறையை நீங்கள் நீக்கி விடுவீர்கள் என்றே நம்புகிறேன்," என்று எழுதினர்கள். அதை ஒட்டித்தான் "காந்தி தூவிய வித்து நாமக்கல் கவிஞராகத் தோன்றியது" என்று அவர் சொல்லியிருக்க வேண்டுமென்பது என் அனுமானம். நான் இளம் பிராயத்திலிருந்தே கவிகள் பாடிக்கொண்டு வந்திருக்கிறேன். ஆனுல் என்னுடைய 'கத்தியின்றி ரத்தமின்றி' பாட்டிற்குப் பிறகு தான் தமிழ் மக்கள் என்னை ஒரு கவிஞனென்று சொல்ல ஆரம்பித்தார்கள்.

பாரதி, கவிமணி, டி. கே. சி, ராஜாஜி, கல்கி, இவர்களின் தொடர்பில் தங்களிடையே நிலவியிருக்கும் மறக்கமுடியாத பசுமை நினைவுகளை அறிய ஆவல்.

பாரதி அவர்களை 1918-ம் வருடத்தில் ஒரே ஒரு முறை சந்தித்தேன். அப்போது நான் பாடியிருந்த பாடல்களில் ஒன்றைக் கேட்டு, "பாண்டியா, எங்கே இன்னொரு முறை அந்தப் பாட்டைப் பாடு" என்ருர். நான் மறுபடியும் பாடினேன். அதைக் கேட்டு, 'கலகல'வென்று சிரித்து "பாண்டியா! நீ புலவனடா புலவன்! இப்படிப் பாட்டுகள் பாடு!" என்று வாழ்த்தினர்.

கவிமணி அவர்கள் என்மீது பேரன்புடையவர். என் கவிதைகளைப் பல முறை பாராட்டியிருக்கிருர். நாஞ்சில் நாட்டில் எனக்குப் பல இடங்களில் சிறப்புகள் நடத்தப்பட்டன. அவற்றில் சில நிகழ்ச்சிகட்கு கவிமணி அவர்களே தலைமை வகித்தார்கள். அவருடைய திருமணியில் எனக்கு விருந்தளித்தார். அடிக்கடி எனக்கும் அவருக்கும் கடிதப் போக்கு வரவுகள் உண்டு. அவரைப் பற்றி மறக்க முடியாத ஒரு விஷயம் பின் வருமாறு.

நான் இயற்றிய 'திருக்குறள் புது உரை'யை அவருக்கு அனுப்பி அவருடைய அணிந்துரை கேட்டிருந்தேன். என் புது உரையில் பல இடங்களில் பரிமேலழகருடைய உரையை நான் மறுத்திருப்பதைப் பாராட்டினுலும், சில இடங்களில் என்னுடைய மறுப்பை ஒத்துக் கொள்ளவில்லை. குறிப்பாக 'தவம்' என்ற அதிகாரத்திற்கு பரிமேலழகர் செய்திருக்கிற உரை முற்றிலும் தவருனது என்று நான் அதை மாற்றி யிருப்பதை ஆட்சேபித்தார். இது விஷயமாக எனக்கும் அவருக்கும் இடையில் பல கடிதங்கள் மூலமாகக் கருத்துவேற்றுமைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அவருடைய ஆட்சேபனைகளையெல்லாம் தனித்தனியே ஆராய்ந்து, தக்க ஆதாரங்களுடன் நீண்ட ஒரு கடிதம் எழுதினேன். கடைசியாக அவர் "ஆம். தாங்கள் சொல்லுவதுதான் சரி என்று இப்போது எனக்குப் புலனுகிறது," என்ற கருத்தடங்கிய நீண்டதொரு கடிதம் எழுதி, அத்துடன் அணிந்துரைக்காக மூன்று வெண்பாக்களை அனுப்பி, அவற்றுள் எதை வேண்டுமானுலும் கொள்ளுங்கள் என்றும் எழுதினர். ஆனுல் நான் அந்த மூன்று வெண்பாக்களையும் அச்சிட்டு இருக்கிறேன்.

திரு டி. கே. சி. அவர்கட்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவரைப் பற்றிய மறக்க முடியாத ஒரு நினைவு பின்வருமாறு:

எனது நண்பர் திரு சின்ன அண்ணமலை அவர்கள், தம்முடைய வீட்டில் டி. கே. சி. அவர்கட்கு ஒரு விருந்து நடத்தினர். அப்போது நான் திரு. சின்ன அண்ணமலை அவர்கள் வீட்டில் தங்கியிருந்

தேன். விருந்துண்டபின், விருந்தினர்கள் சல்லாபித்துக் கொண்டிருந்தபோது டி.கே.சி. அவர்கள் கம்பராமாயணத்தில் சில பாடல்களை விளக்கினர். அதன் பிறகு திரு சின்ன அண்ணாமலை என்னுடைய பாடல்கள் சிலவற்றைப் பாடினர். அதற்குப் பின், ரசிகமணி என்னைப் பார்த்து ''உங்கள் பாட்டுக்கள் பிரசித்தி பெற்று விட்டன. ஆனல் உங்களுடைய வசன நடை எவ்வளவு சிறப்பானது என்பதை அனுபவித்தவர்கள் எல்லாரும் உணர்ந்திருப்பார்கள். உங்களுடைய 'என் கதை'யை நான் படித்தபோது மிக்க இன்பமடைந்தேன். நான் ஆங்கிலத்திலும் தமிழிலும் அநேக சுயசரிதங்களைப் படித்திருக்கிறேன். பெரும்பாலும் சுயசரித்திரங்கள் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையிலும் தொடர்ந்து படிக்கத் தூண்டுவதில்லை. ஆனல் உங்களுடைய சுயசரிதம் படிக்க ஆரம்பித்தது முதல் கடைசி வரையில் கீழே வைக்க மனம் வரவில்லை. ஒரு நாவல் போல் இருக்கின்றது,'' என்று புகழ்ந்தார். இந்தப் பாராட்டுதலை நான் என்றும் மறக்க முடியாது.

1915-ல் நாமக்கல்லில் நான் சித்திர வித்வானாகத் தொழில் செய்து கொண்டிருந்தேன். நாமக்கல் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக நான் கோகலே அவர்கள் படம் ஒன்றைப் பெரிய அளவில் வரைந்து கொடுத்திருந்தேன். அந்தப் படத் திறப்பு விழா நடத்தினவர் ராஜாஜி அவர்கள். அந்த விழாவில் பாடுவதற்காக கோகலே அவர்களைப் பற்றி நானே சில கவிகள் இயற்றித் தந்தேன். அவற்றைப் பாடக் கேட்ட ராஜாஜி அவர்கள் அந்தப் பாட்டு 'யார் பாடியது' என்று கேட்டு என்னை மிகவும் பாராட்டினர். அன்று முதல் எனக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

அவரைப் பற்றிய பசுமையான நினைவுகள் பலவற்றுள் அடியில் வருவது ஒன்று: 1920-ம் வருஷத்தில் கல்கத்தாவில் கூடிய விசேஷ காங்கிரசிற்கு சென்னையிலிருந்து புறப்பட்ட 'கிலாபத் ஸ்பெஷல்' என்ற ரயில் வண்டியில் ராஜாஜி, விஜயராகவாச்சாரியார், சிதம்பரம் பிள்ளை, ஜார்ஜ் ஜோஸப் முதலான பல தலைவர்களும் நானும் சென்றோம். அந்த ரயில் வண்டி நடுவில் ஒரு பெரிய ஜங்க்ஷனில் ஒரு மணி நேரத்திற்கு மேல் நிறுத்தப்பட்டது. வண்டியில் இருந்த இளைஞர்கள் பலரும் சிதம்பரம் பிள்ளை அவர்களும், ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று 'ஏன் இந்த வண்டி இவ்வளவு நேரம் நிறுத்தப்பட்டிருக்கிறது?' எனக் கேட்டார்கள். பின்னல் 'மெயில்' வண்டி வந்துகொண்டிருப்பதாகவும் அதை முன்னல் விட்ட பின்புதான் 'ஸ்பெஷல்' வண்டி புறப்படும் என்று ஸ்டேஷன் மாஸ்டர் சொன்னர். ஒரு மணி நேரத்திற்குப் பின்னல் வரும் வண்டியை முன்னல் விடுவது மிகவும் அநியாயம் என்று வாதாடினர். ஸ்டேஷன் மாஸ்டர் தமக்கு வந்துள்ள உத்தரவு அப்படியென்றும், அதன்படி நடந்து கொள்வதுதான் தம்முடைய கடமை யென்றும் சொல்லி விட்டார். உடனே சிதம்பரம் பிள்ளையவர்களும், அவருடன் இருந்த இளைஞர்களும் கோபங்கொண்டு, மெயில் வண்டியை முன்னல் விடாமல் தண்டவாளத்தில் உட்கார்ந்து கொண்டு மறியல் செய்வதெனத் தீர்மானித்தார்கள். அதனல் மிகுந்த பரபரப்பு உண்டாயிற்று. பலபேர் சொல்லியும் சிதம்பரம் பிள்ளை அவர்கள் தம்முடைய தீர்மானத்தை விட்டுக் கொடுக்கவில்லை. சிதம்பரம் பிள்ளையும் அவருடைய சகாக்களும் காந்தியடிகளினுடைய சாத்விக இயக்கத்தை எதிர்க்க வேண்டுமென்றே கல்கத்தா காங்கிரஸிற்கு வந்தவர்கள். சேலம் விஜயராகவாச்சாரியார் அவர்களும் அதே கருத்து உடையவர். திலகர் பெருமான் அப்போது இல்லை. அவர் இருந்தால் காந்தியத் திட்டத்திற்கு இடங் கொடுக்கமாட்டார் என்ற எண்ணத்தில்தான் விஜயராகவாச்சாரி, சிதம்பரம் பிள்ளை முத

> ஆரம்பித்த காரியத்தை மகத்தான கஷ்டங்கள் நேரிட்டாலும், விடாமல் செய்து முடிப்பது, நன்மைகளையே ஆபரணங்களாகக் கொண்ட மகான்களுடைய தத்துவம்.
>
> — பஞ்சதந்திரம்

லியவர்கள் திலகருக்குப் பிரதிநிதிகள்போல் காந்தீயத் திட்டத்தை எதிர்த்தவர்கள். சிதம்பரம்பிள்ளை 'மெயில்' வண்டிக்கு முன்னால் தண்டவாளத்தில் உட்கார்ந்து மறியல் செய்ய வேண்டுமென்று சொன்னதை, விஜயராகவாச்சாரியாரும் ஆதரித்தார். விஜயராகவாச்சாரி சொன்னால்தான் சிதம்பரம் பிள்ளை கேட்பார். விஜயராகவாச்சாரியாரை நெருங்கி, சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லும்படி வற்புறுத்த மற்றவர்களால் முடியவில்லை. ஆனால் ராஜகோபாலாச்சாரியார், விஜயராகவாச்சாரியோடு பேசி அதைச் சாதித்தார். உடனே விஜயராகவாச்சாரியார், சிதம்பரம் பிள்ளையை அழைத்து, தண்டவாளத்தின் முன்னால் மறியல் செய்ய வேண்டாம் எனச் சொன்னார். அதன் பிறகுதான் சிதம்பரம் பிள்ளை தமது நோக்கத்தைக் கைவிட்டார்.

கல்கி அவர்கள் எனக்கு மிகப் பெரிய உபகாரி. அவரைப்பற்றிய எல்லா நினைவுகளும் மறக்க முடியாத பசுமை நினைவுகள்தாம். எட்டையபுரத்தில் பாரதிமண்டபம் கட்டிய பிறகு அங்கே நடந்த முதல் பாரதி விழாவிற்கு நான் தலைமை வகிக்க வேண்டுமென்று கல்கி அவர்கள் விரும்பினார். நான் தயங்கினேன். அவர் மீண்டும் வற்புறுத்தி எழுதிய கடிதங்களுக்காக ஒப்புக்கொண்டேன். அவர் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசினாலும் அதில் மிகவும் கண்ணியமான நகைச்சுவை கலந்திருக்கும். பாரதி மண்டபத்தில், ஒரு பாரதி சிலை வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிலை பாரதியாருடைய அடையாளங்களுக்கு ஒத்ததாக இல்லை. அந்தச் சிலையின் அடியில் 'சுப்ரமண்ய பாரதியார்' என்று பெயர் வெட்டப்பட்டிருந்தது. அந்தச் சிலையைத் திறந்து வைத்த கல்கி அவர்கள், "இது பாரதியாருடைய சிலை; இது பாரதியாருடையது அல்ல என்று யாரும் சொல்லிவிடக் கூடாது என்று மிகவும் முன்யோசனையுடன் கீழே பெயர் வெட்டியிருக்கிற சிற்பியை நாம் பாராட்ட வேண்டும்," என்று அவர் சொன்னபோது சபையில் மிகப் பெரிய சிரிப்பொலி உண்டானது.

தமிழ் இலக்கியத்தின் நிகழ் காலம், வருங்காலம் பற்றித் தங்களுடைய எண்ணம், கனவு, முடிவு என்னென்ன?

தமிழிலக்கியத்துக்கு மறுமலர்ச்சி ஆரம்பமாகியிருக்கிறது. பழைய தமிழிலக்கியங்களின் பண்புகளை ஒட்டி மக்கள் எழுதவும் பேசவும் முற்பட்டிருக்கிறார்கள். முடிவு எப்படியிருக்குமென்று யாராலும் சொல்ல முடியாது. ஆனால் தமிழ் நாடு, திருக்குறள் வகுத்துக்கொடுத்திருக்கும் வாழ்க்கையைப் பின்பற்றி, குடும்பத்திலும், சமுதாயத்திலும், அரசியலிலும் திருக்குறளறிவே சட்டமாகக் கருதப்பட வேண்டுமென்பது என்னுடைய கனவு. காந்தீய வாழ்க்கையை 2000 ஆண்டுகட்கு முன்னாலேயே திருக்குறள் வடித்துக் கொடுத்திருக்கிறது. அதையொட்டிய இலக்கியங்கள் பெருக வேண்டும்.

சட்டசபையில் தாங்கள் ஓர் அங்கத்தினராக நியமனம் பெற்றிருக்கும் இப்புதிய அலுவலிலே, தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் தாங்கள் செய்யவிருக்கும் பணி எத்தகையது?

சட்டசபையில் ஓர் அங்கத்தினன் ஆவேன் என்று நான் கனவிலும் கருதியதில்லை. என்னை ஓர் அரசியல் நிபுணனாக எப்போதுமே நான் எண்ணிக் கொண்டதில்லை. அரசியல் போராட்டங்களில் பங்கு

கொண்டதும் காந்தீய தத்துவத்தைக் கருதியேயன்றி வேறல்ல. திடீரென்று ஒரு நாள் திரு காமராஜ் அவர்கள் என்னைச் சந்தித்து, "உங்களை மேல் சபைக்கு ஒரு அங்கத்தினராக நியமனம் செய்யச் சிபாரிசு செய்திருக்கிறேன். அதை ஒப்புக் கொள்ளுங்கள்" என்றார். அவருடைய அன்பை மறுக்க முடியாமல் ஒப்புக் கொண்டேன். காந்தீயத்தைத் தமிழில் பாடிய புலவன் என்று இந்தப் பெருமை செய்யப்பட்டது என்று கருதுகிறேன். இந்தத் துறை எனக்கு மிகவும் புதியதாகையால், இதில் தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் எத்தகைய பணிகளை எப்படிச் செய்வது என்பது பற்றி இப்பொழுது ஒன்றும் சொல்ல இயலாது. ஆனால் சமயம் வாய்த்த போதெல்லாம் தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் நன்மை வரக் கூடியவற்றை செய்ய முயல்வேன்.

தாங்கள் ஆஸ்தான கவிஞராக இருக்கையில், தாங்கள் மறக்க முடியாத அளவில் உணர்ந்த—உணரும் நிகழ்ச்சி ஒன்றை அறிய ஆசை.

நான் ஆஸ்தான கவிஞனாக இருக்கையில் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி ஒன்றுமில்லை. 'ஆஸ்தான கவிஞன்' என்ற பெயரும் வருடத்திற்கு ஆயிரம் ரூபாய் சன்மானம் என்பதும், ஐந்து வருடங்கள் மட்டும் இருந்தது தவிர, வேறு நிகழ்ச்சிக்கு இடமே இருக்கவில்லை. ஒரு விஷயம் மட்டும் நினைவிலிருக்கிறது. அப்போது பாகிஸ்தான் பிரதம மந்திரியாக இருந்த லியாகத் அலிகான் அவர்களுக்கும் நேருஜி அவர்களுக்கும் ஒரு அரசியல் உடன்படிக்கை ஏற்பட்டது. அது அங்கே நடந்த கலவரங்களுக்கு சம்பந்தப்பட்டது. அந்த உடன்படிக்கையின் அம்சங்களைப் பற்றித்தமிழ்நாட்டு கிராமங்களில் பாடக்கூடியதாக எளிய நடையில் பாட்டுகள் இயற்றித் தரவேண்டும் என்று சென்னை அரசாங்க விளம்பர இலாகாவிலிருந்து என்னைக் கேட்டார்கள். 'பாகிஸ்தானில் நடந்த கலவரங்களைப் பற்றி ஏற்பட்ட உடன்படிக்கையைப் பற்றி தமிழ் நாட்டுக் கிராமங்களில் பாடவேண்டிய அவசியம் இல்லை' என்று நான் மறுத்து விட்டேன்.

> தொடக்கத்திலேயே பெரிய திட்டங்களைப் போட்டுக் கொண்டு கிளம்ப வேண்டாம். நிதானமாக ஆரம்பியுங்கள். மேலும் மேலும் நிதானமாக முன்னேறுங்கள்.
>
> —விவேகானந்தர்.

'உமா' பற்றிய உங்கள் கருத்து யாது? 'உமா' மூலம் தமிழகத்துக்குத் தாங்கள் கூறும் செய்திகள் எவை?

'உமா' தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் மிக நல்ல சேவை செய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்துடன் நடத்தப்பட்டு வருவதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதன் எதிர்காலம் இன்னும் பிரகாசமாக இருக்கவேண்டுமென்று நான் மனமார வாழ்த்துகின்றேன்.

'உமா' மூலமாக தமிழர்களுக்கு நான் சொல்லக்கூடிய செய்தியெல்லாம் இதுதான்:

'தமிழன் என்றொரு இனமுண்டு;
தனியே அவர்க்கொரு குணமுண்டு;
அமிழ்தம் அவனுடை மொழியாகும்;
அன்பே அவனது வழியாகும்!'

'திருவள்ளுவர் திடுக்கிடுவார்!'

உலகப் புகழ்பெற்ற அமெரிக்கக் கவி வால்ட் விட்மன், 'கவிஞன்' என்ற சொல்லுக்குத் தரும் விளக்கம் இது: 'உள்ளத்தை வெளிப்படையாக, சிந்தனைகளுக்குக் கட்டுப்படாமல், தைரியமாகச் சொல்பவனே கவிஞன். அவன், எதுகை

மோனையின் அடிமையல்லன்; சொல்லிற்கும் யாப்பிற்கும், இலக்கணத்திற்குங்கூட அடிமையல்லன்; அவன் அவற்றின் தலைவன்; கருத்தின் முதல்வன்; அவன் ஒரு சிருஷ்டிகர்த்தா.'

கவிஞனிடமிருந்து இலக்கணப் புத்தகத்தைப் பிரித்துவிட அல்லது பறித்துவிட விரும்பும், அல்லது எதிர்பார்க்கும் சிலர் இல்லாமல் இல்லை; ஷேக்ஸ்பியர், வால்ட் விட்மின் போன்ற அயல் நாட்டுப் பெயர்களுடன் தமிழ்க் கவிஞர்களின் பெயர்கள் சிலவும் இந்தப் பட்டியலில் சேருகின்றன. நாமக்கல் கவிஞரிடம் இலக்கணத்தைத் தைரியமாக எதிர்பார்க்கலாம்; எதிர்பார்க்கிறோம்.

'கத்தியின்றி, ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது!'

அன்றையச் சுதந்திரப்போராட்டத்திலே அன்புப் புரட்சி செய்த பாட்டு இது; விடுதலை வேட்கை கொண்டிருந்த மக்களுக்கு வீர உணர்ச்சி பாய்ச்சிய வரிகள் இவை. இலட்சக் கணக்கான தொண்டர்கள் எங்கும் இதையே பாடிக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்தார்கள். நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளையை ஒரு கவிஞராகத் தமிழுலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த பெருமை பூண்டதும் இந்தப் பாடலேதான்!

'இராமலிங்கம் பிள்ளையின் பாடல்கள் சிற்சில சமயங்களில் தேசியக்கவி சக்கரவர்த்தி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாருடைய பாடல்களைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றன.'

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் 22–10–22-ல் கொடுத்த முன்னுரையின் ஒரு பகுதி இது.

'அமரனாகி நம்மைக் காக்கும் அண்ணல் காந்தி ஐயனைப்' பற்றிப் பாடிய பாக்கள் இவரை 'காந்தீயக் கவிஞரா'கப் பெருமைப்படுத்தின.

'சத்தியமே மந்திரமாய் சாந்த மொன்றே
தந்திரமாய் சமயம் தந்த
உத்தமனும் காந்திமுனி உச்சரித்த
சாத்விகத்தை உறுதி கொள்வோம்.'

இதயத்தளத்திலே உணர்ச்சி அலைகள் அடிநாதமிடும் இவை போன்ற எத்தனையோ வரிகளைக் கவிஞரது 'பேனா' உருவாக்கியுள்ளது. 'பாழ்பட்டுக் கிடந்ததாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி' மகானுக்கு நிரம்பவும் பிடித்த 'வைஷ்ணவ ஜனதோ' என்னும் இந்திப் பிரார்த்தனைப் பாடலுக்கு, நம் கவிஞர் 'வைஷ்ணவன் என்போன்....' என்று தமிழ் வடிவம் தந்திருக்கின்றார்.

'சிறு கந்தை பக்கிரான காந்தி எனும் பெரியார்' ஜோதிவடிவான தருணம், 'ஜோதி மறைந்து கொண்டதே!' என்று விம்மியழுத கவிஞர், தன் இதயத்தில் மண்டிக் கிடந்த சோக வெள்ளத்தை பக்தி வெள்ளமாகமாற்றி, 'காந்தியரே, தொழுகின்றோம்' என்ற அமர வரிகளை இயற்றினார்.

'தன்கதை' (autobiagraphy) நூல்கள் தமிழில் மிகக் குறைவு. திரு. தி. சே. சௌ. ராஜன் அவர்கள் எழுதிய 'நினைவு அலைகள்' என்ற நூலுக்கு அடுத்து வைத்து எண்ணப்படும் அளவுக்குச் சிறப்பாக அமைந்திருக்கிறது 'வே. இரா' வின் 'என் கதை'.

''ஆம்; திருவள்ளுவர் இப்போது இங்கு வருவாரானால் திடுக்கிட்டுத் திகைத்துப் போவார்; அவர் அரும் பாடு பட்டு எழுதி வைத்துப் போன குறள்களுக்குப் பலபேர் பலவிதமாகத் தம்முடைய மனம் போனபடி யெல்லாம் உரை சொல்வதைப் பார்த்தால், திகைக்காமல்– திடுக்கிடாமல், வேறு என்ன செய்வார்?''

'திருவள்ளுவர் திடுக்கிடுவார்!' என்ற நூலில், நாமக்கல் கவிஞர் மேற்கண்ட வரிகளுடன் தம்முடைய வாதத்தைத் தக்க ஆதாரங்களுடன் ஆராய்ந்திருக்கின்றார்.

கவிஞர் பாடியிருப்பதுபோன்று 'அறிவின் கடலைக் கடந்த அமிர்

தமாம் திருக்குறள்' பாக்களுக்கு, பரிமேலழகர் பல இடங்களில் பொருந்தாத உரை செய்திருக்கிருர் என்பதைத் தகுந்த மேற்கோள்களுடன் விளக்கியிருக்கிருர் கவிஞர். இந்நூலின் தலைப்பு: 'திருவள்ளுவரும் பரிமேலழகரும்'.

நுண்ணிய ஆராய்ச்சியுடன் திரு பிள்ளை அவர்கள் திருக்குறளுக்குப் புதிய உரையொன்றைச் சமைத்திருக்கிருர். இவரது புது உரையைப் பாராட்டி, 13-5-55-ல் கோவையில் இவருக்குப் பொன்னுடை போர்த்துப் பண முடிப்பினையும் வழங்கினர்கள். இவ் விழா முன்னுள் கவர்னர் திரு ஸ்ரீபிரகாசா தலைமையில் நடந்தது.

கவிஞரின் கருத்தை எதிர்த்து, மாறுபட்ட கருத்துக்கள் வழங்கினவர்கள் பலர். என்ருலும், வள்ளுவருடைய உள்ளத்தை உண்மையாக உணர்ந்தவர் நம் கவிஞர் என்பது பெரும்பாலோரின் ஏகோபித்த முடிவு.

'உரை என் முன்னிலையில் படிக்கப்பட்டது. கவிஞரை ஈன்ற மணி வயிற்றின் தவமே தவம். புது உரை, பழைமைக்கு முரண்படாதது; புதுமைக்கு அரண் செய்வது; காலத்துக்கு ஏற்றது. அதன் கண் காந்திய மணம் கமழ்கின்றது. அந்த மணம் தமிழ் நாட்டை ஓம்பும்,' என்று தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் பாராட்டியிருக்கிருர்.

கவிஞர், மூடப் பழக்க வழக்கங்களை எதிர்ப்பவர்; பக்தி வளர்ப்பதில் அக்கறை கொண்டவர். தமிழன் என்ருல் அவருக்குத் தனி ஈடுபாடு; 'தமிழன் என்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா!' என்று வீரமுழக்கம் புரிவார்; தமிழ் நாடு என்ருல் அவருக்கு உயிர். 'அநியாயம் எண்ணுத' தமிழ் நாட்டை வாழ்த்தும் முறையைக் கேட்கின்றீர்களா?

'வீரத்தில் நிறைவான தமிழ்நாடு வாழ்க!
வித்தைக்கு உறைவான தமிழ்நாடு வாழ்க!'

கவிஞர், பெரிய புரட்சிக்காரர்; 'புரட்சி என்ற சொல்லின் பொருளிலும் புரட்சி வேண்டும்!' என்று அறைகூவிப் பாடி, 'வான்மையின் அன்பால் வருகிற நலமே புரட்சி வாய்ந்தனவாம்!' என்று அன்புப் புரட்சி பண்ணுபவர். 'மாமன் மகள்' என்ற நாடகத்தில், 'புரட்சி வேண்டும்; ஆம்; புரட்சி வந்தாலன்றி நாட்டில் பசியும் நோயும் பஞ்சமும் போகாது' என்று 'சுந்தரம்' என்னும் பாத்திரமாக மாறிப் பேசுகிருர்.

'மலைக்கள்ளன்' என்ற நவீனம் இவரது கற்பனைச் செறிவுக்கு நல்ல உதாரணம். திரையிலும் கள்ளன் நிழலாடினன்.

'அன்பே இன்பம்; அதுவே தெய்வம்!' என்று உபதேசம் செய்கிருர், 'அவளும் அவனும்' என்னும் காவியக் கதையில்.

'தமிழ் மொழியும் தமிழரசும்' இவருடைய இதய ஒலியைப் பிரகடனம் செய்யும்.

கவிஞரின் சிந்தனை, தமிழ் மக்களுக்குத் தந்த இலக்கியப் பரிசுகளில் சில: 'தமிழ்த்தேன்', 'நாமக்கல் கவிஞர் கீர்த்தனங்கள்', 'சங்கொலி', 'இசைத் தமிழ்', 'வள்ளுவரின் உள்ளம்' 'இலக்கிய இன்பம்.'

புதிய நோக்கு, சிந்திக்கத்தக்க கருத்து, போற்றத் தகுந்த நீதி, எளிய நடை, சுலபமாகப் புரிந்து கொள்ளத்தக்க பதங்கள், எளிதில் அறியமுடியும் சந்தம், பொதுமக்கள் விரும்பும் மெட்டு — நான் காணும் கவிஞரின் சிறப்புக்களில் குறிப்பிடத்தக்கவை இவை.

ஓவியராக, பேச்சாளராக, தேச பக்தராக, தியாகியாக, கவிஞராக, கட்டுரையாளராக—இப்படி ஒவ்வொரு துறையிலும் தன்னைப்புகுத்திக் கொண்டு 'வெற்றி முழக்கம்' செய்த கவிஞர், இப்போது ஒவ்வொரு துறைப்பட்ட பெரும்பாலான மக்களின் இலக்கிய நெஞ்சங்களிலும் புகுந்து வாழ்த்துக்கள் பெற்று வருகின்ருர்.

வணக்கத்திற்கு உரிய கவியுள்ளத்திற்கு என்னுடைய நன்றி. ★

'குல்குல் வாலா லாகூர் சில்க் எம்போரியம்' பட்டணத்தில் அப்படி ஒன்றும் பெரிய ஜவுளிக்கடை இல்லை. ஆனால் சிறிய கடையும் இல்லை. நடுத்தரம்.

கடைவாசலில் நின்று, 'உள்ளே நுழையலாமா, வேண்டாமா' என்று தயங்குவதுபோல் நின்ற அம் மூன்று நவநாகரிக யுவதிகளை அந்தக்கடைமுதலாளி தொப்பைக்கார சேட்ஜி தலையை நீட்டிக் கூப்பிட்டார்:

"வாங்கோ மேடம், வாங்கோ, வாங்கோ!....இந்தாப்பா, இவங்களுக்கு என்ன வேணும், கவனி.... ஸாரிஸ் வேணுமா?–ஜார்ஜட், நைலான், ஷிபான், பனாரஸ், காஞ்சிபுரம்,....சோளி பீஸ் வேணுமா?– அமெரிக்கன் வாயில், ஜப்பான் சில்க், பாம்பே லான்....!"

கடைக்குள்ளே கூட்டம் இல்லை. வேலை செய்யும் ஆட்கள் நாலைந்து பேர் துணிகளை அடுக்கி ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தனர். பெண்கள் உள்ளே நுழைந்தவுடன் அனைவரும் வியாபாரத்திற்குத் தயாராக நின்றார்கள்.

மூன்று பேரில் முதன்மையாக விளங்கிய சரோஜ், "ஸாரியைப் பார்க்கலாமா?" என்று ஒரு ஓரமாகப் போனாள். "நீயும் வந்து 'செலக்ட்' பண்ணுரங்கம்" என்று தன் தோழிகளில் ஒருத்தியைக் கூப்பிட்டாள்.

இருவரும் 'செலக்ட்' பண்ணினார்கள். மூன்றாவதாக இருந்த குமுதம் வேடிக்கை பார்த்தாள்.

"எவ்வளவிலே உங்களுக்கு வேணும்? ஜார்ஜட், நைலான் போதுமா? பட்டுப்புடவை பார்க்கிறீங்களா?"

புடவைகளின் பக்கம் நின்றவன் கொஞ்சம் வயதான, அனுபவமுள்ள பேர்வழி. கச்சிதமாக விற்

பனையை முடித்துச் சீக்கிரம் அனுப்பப் பார்த்தான்.

“எவ்வளவானா என்ன? பணந்தானா பிரமாதம்? மனசுக்குப் பிடிச்சிருக்கணும்,” என்றாள் சரோஜ்.

சரோஜ் புடவைகளைப்பொறுக்குகின்ற சாக்கில் அந்தப் பகுதியையே தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டாள். அத்துடன் நிற்கவில்லை. ஒவ்வொரு புடவையாக எடுத்துத் தன் மேல் சார்த்திக் கொண்டு பக்கத்துக் கண்ணாடியில் தன்னை அழகு பார்த்தாள்.

முதல்புடவை ரத்தச் சிவப்பில் ஊதாக்கரை, பிறகு மஞ்சளும் கருப்பும், அடுத்தாற்போல் ஐந்து வர்ணக்கலவையில் நைலான்—ஒவ்வொன்றையும் மேலே போட்டுப் பார்த்து திருப்தி இல்லாதவள் போல் உதட்டில் ஒரு விதமான நெளிவுடன் தூக்கி எறிந்தாள்.

வயோதிக விற்பனையாளனுக்கு மட்டிலும் இந்தக் காட்சி அருவருப்பையும் எரிச்சலையும் தந்தது. மற்ற இளவட்டங்கள் வாயில் ஈ நுழைவது தெரியாமல் இதை ரசித்தார்கள். முதலாளி சேட்ஜியும் மற்றவர்கள் கவனிக்காதபடி ஓரக்கண்ணால் சரோஜைக் கவனித்தார்.

ரங்கம் பத்தே நிமிஷங்களில் தன் வேலையை முடித்து விட்டாள். புடவைகளின் நிறத்தைக் கண்டு அவள் ஏமாறவில்லை. தரம் தெரிந்தவள்; புடவைகள் வாங்கித்

விளம்பரம

‘அகிலன்’

தேர்ச்சி பெற்றவள். பத்துப் புடவைகளை எடுத்து சரோவின் பக்கம் தள்ளிவிட்டாள்.

''இந்தா சரோஜ், சீக்கிரம் பார்த்து எடு. பிடிக்கவில்லையானல் வேறு கடை பார்க்கலாம்,'' என்ருள்.

குமுதத்திற்குக் கால் கடுத்தது. பக்கத்துப் பெஞ்சியில் முகத்தைச் சுளித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்தாள்.

சேட்ஜி கல்லாவிலிருந்தபடியே குரல் கொடுத்தார்: ''மெதுவாப் பார்த்து எடுக்கட்டும் மேடம். கலர் 'மேட்சாக' வேண்டாமா? இன்னும் ஸாரீஸ் எடுத்துப் போடச் சொல்லட்டுமா?''

சரோஜாவின் உடம்புக்கு எந்தக் கலருமே 'மேட்ச்' ஆகத்தான் செய்தது. அவள் தேகம் எலுமிச்சம் பழ நிறம். அவளுக்குப் பெரிய பெரிய கண்கள், எடுப்பான மூக்கு. உயரமாகவும் உடற் கட்டுடனும் தளதள வென்றிருந்தாள். இரட்டைப் பின்னலில் ஒன்று முதுகிலும் மற்ருென்று மார்பிலும் புரண்டன. ஏழ்மையோ, 'பாஷனே' தெரியவில்லை; கழுத்தில் மலிவான போலி முத்துமாலை, காதில் அதே முத்துத் தோடு. அவள் முகத்தில்–பார்க்கும் பார்வையில்–பேசும் குரலில்–உதட்டின் அசைவுகளில்–கவர்ச்சி தெறித்துச் சிந்தியது. தவிர, தன்னை நன்ருக விளம்பரம் செய்து கொள்ளும் ரகசியத்தையும் அவள் தெளிவாய்த் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாள்.

''ஏன் மேடம், வீட்டுக்கு வேண்டுமானல் நாலு ரகம் எடுத்துக்கொண்டு போய் டிரஸ் பண்ணிப் பார்த்து செலக்ட் பண்ணுங்கள். பையனை அனுப்பட்டுமா?''

''வேண்டாம்,'' என்ருள் சரோஜ்.

வயோதிக வேலையாளுக்கு மட்டும் எரிச்சல் தாங்கவில்லை. ''இங்கேயே டிரஸ் பண்ணிக்காமல் இருந்தால் போதும்,'' என்று முணு முணுத்தான்.

''சீக்கிரம் வா, சரோஜ்!'' என்ருள் ரங்கம்.

ரங்கமும் உயரம்தான்; ஆனல் ஒல்லி, மாநிறம். அஜந்தாக் கொண்டையும் அதற்கேற்ற அலங்காரமும் செய்து கொண்டிருந்தாள். பணக்காரத் தன்மையின் மிடுக்கு, கண்டிப்பு, அலட்சியம் அவள் குரலில் ஒலித்தது.

குமுதம் குட்டை, கறுப்பு. ஆனல் களை துலங்கும் அழகான முகம். இந்த விவகாரம் எதிலுமே பட்டுக் கொள்ளாதவள் போல் அவள் கொட்டாவி விட்டாள்.

இதற்குள் கடைக்குள் சில இளைஞர்கள் நுழைந்தார்கள். மாணவர்களாக இருக்கலாம்; புதிதாக உத்தியோகங்களில் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். வெள்ளை சள்ளை, வேடிக்கைப் பேச்சு, விளையாட்டுப் பார்வை, குறும்புத்தனம் எல்லாம் அவர்களிடம் இருந்தன.

சரோஜாவின் செய்கை அவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றியது. சாடை மாடையாகக் கேலிப் பேச்சுக்களும் தொடர்ந்தன. இதையெல்லாம் சேட்ஜியும் கவனித்தார். திடீரென்று கல்லாவிலிருந்து வந்து, அவரும் மறைமுகமாக அந்தக் கேலியில் கலந்து கொண்டார். அத்துடன் நிற்கவில்லை. அவர்களுக்கு முன்னல் உயர் ரகத் துணிகளை எடுத்துப் போட்டு, அவர்கள் வாங்க விரும்பாத ரகத்தையெல்லாம் சாதுரியமாய் அவர்கள் தலையில் வைத்துக் கட்டினர்.

பெண்களுக்கு முன்னல் பேரம் பேசலாமா? வாங்குவதில் கஞ்சத்தனம் செய்யலாமா? ஆண்பிள்ளைகளின் கௌரவத்திற்கு அதைப் போல் குறைச்சல் ஏது?

முட்டாள்கள்! வாய்ச் சவடால் பேசி விட்டு வகையாக சேட்ஜியிடம் மாட்டிக் கொண்டார்கள்!

ஐந்து பத்துக்கு வாங்க வந்தார் களோ, என்னவோ? அறுபது சொச்சத்துக்கு மூட்டை கட்டி, தூசி படிந்து கிடந்த பழைய 'ஸ்டாக்'கை துப்புரவு செய்தார் முதலாளி.

அடுத்தாற்போல் சில ஆண்கள் வந்தார்கள். அவர்களுக்கும் இதே கதிதான். வந்து போனவர்களில் ஒருவராவது சரோஜாவைப் பார்க்காமல் இல்லை. சிலர் நேரடியாகப் பார்த்தார்கள்; சிலர் திருட்டுத் தனமாகப் பார்த்தார்கள். இவ்வளவு தான் வித்தியாசம். ஒரு முறை பார்த்தவர்களை மறுமுறை பார்க்கச் செய்தது அவளிடம் இருந்த கவர்ச்சி.

இந்தக் கவர்ச்சியை சுறுசுறுப்பாகத் தம் விற்பனைக்குப் பயன்படுத்தினர் சேட்ஜி. ஏமாறப் பிறந்த கூட்டம் ஏமாறியது.

அரை மணி நேரத்துக்கு மேல் ஆகியது.

முகத்தைச் சுளித்துக் கொண்டு, ''வாங்கள் போகலாம் அடுத்த கடைக்கு!'' என்ருள் சரோஜ்.

வேலைக்காரப் பையன்கள் ஒருவர் தோளை ஒருவர் இடித்துக் கொண்டனர். விஷமச் சிரிப்பை முதலாளிக்காக அடக்க வேண்டியிருந்தது.

''அவ மூஞ்சியைப் பார்த்த போதே எனக்குச் சந்தேகம். வியாபாரத்துக்கா வந்தா அவ? இதெல்லாம் விளையாட்டு, அவங்களுக்குப் பொழுது போக்கு!'' என்று கத்தினன் அந்த வயோதிக வேலையாள்.

மடித்து வைக்க வேண்டியது அவன் பொறுப்புத் தானே?

முதலாளி குறுக்கிட்டார்:

''இந்தாப்பா, வியாபாரம்னு நாலுந்தான் இருக்கும். உனக்கு வயசாயிடுச்சு; கோபம் வருது — இவகிட்டயே நான் ஒண்ணில்லே, ஒன்பது சாரீஸ் வித்துக் காண்பிக்கட்டுமா? முதல்லே விட்டுத் தர்ன் பிடிக்கணும். இவ மூலமா உனக்கு 'கஸ்டமர்ஸ்' வர்ராங்களா இல்லையா, பார்!''

சரோஜ் தன் தோழிகளுடன் கடை கடையாய் ஏறி இறங்கினுள். துணிக்கடை மாத்திரமல்ல; நகைக்கடை, ஷாப்கடை, இன்னும் எத்தனையோ கடைகள். அவளும் ஒன்றும் வாங்கவில்லை. தன்தோழிகளையும் வாங்க விடவில்லை. கடைசியில் குமுதாவின் பணத்தைக் கடன் வாங்கி, தனக்கென்று ஒரு முத்து மாலை வாங்கிக் கொண்டாள்.

''ஏன், உன்னிடம் பணம் இல்லையா?''

உதட்டைப்பிதுக்கினுள்சரோஜ்.

''பின்னே, எதற்குக் கடை கடையாய் எங்களைக் கூட்டிக் கொண்டு அலைந்தாய்?''

''பொழுது போகவேண்டாமா?''

திரும்புகிற வழியில் பழைய சேட் கடைப் பக்கமாகவே அவர்கள் வந்தார்கள். ஒன்றும் வாங்காமல் வெறுங்கையுடன் அவள் வருவதை சேட்ஜி கவனித்து விட்டார்.

''மேடம், மேடம், உங்களைத் தான், மேடம்....!''

மேடம் சரோஜ் நின்ருள்.

''அஞ்சு நிமிஷம் வந்துட்டுப் போங்கோ!''

தோழிகள் தெருவில் நின்ருர்கள். சரோஜ் மட்டும் போய் அவரிடம் எதையோ பேசி விட்டுத் திரும்பி வந்தாள். ஐந்து நிமிஷம் என்பது பத்தே நிமிஷத்தில் முடிந்து விட்டது.

''என்ன சொன்னுன் அந்த சேட்?''

''எனக்காக விலை குறைத்துத் தருகிருனும்; வாங்கிக் கொண்டு போகச் சொன்னுன்.''

''நீ என்ன சொன்னுய்?''

''நாளைக்கு வருவதாய்ச் சொன்னேன். கடன் கேட்டால் கூடத் தந்து விடுவான்.''

ஏடெடுத்தேன் பாட்டெழுத: 1

திருநாள்

டி. வி. சுவாமிநாதன்

வானரதம் வருகிறது
வண்ணமகள் திருவுலவ;
தேனுடுத்தே புதுத்தென்றல்
தேரிழுத்து முன்செல்லும்.

மீனினம்தன் கண்ணிமைக்குள்
மிகுத்துவைத்த பூவிதழ்கள்
தானுதிரக் கண்சிமிட்டும்;
தாரணியில் மலர் பொழியும்.



இருமருங்கும் பாதையிலே
ஏற்றிவைத்த பொற்சுடர்கள்
அருளரசி விழிநோக்கால்
அதிக ஒளிப் பொலிவு பெறும்.

நல்லறத்துச் சந்திரனை
நாடிவரும் கலிமகனை
வில்லெடுத்து அம்பெய்தி
விரட்டிவிடும் சக்தியிவள்.

முன்பொருநாள் பொய்மையுடன்
மூண்டபெரும் சமர்நடுவில்
என்புருகக் குழலூதும்
எங்கள்பிரான் அயர்ச்சியுற

தேர்த்தட்டில் தான்நின்று
தேவியிவள் நாணேற்றி,
ஆர்ப்பரித்த நரகன் விழ
அம்புவிட்ட திருநாளை

இன்றிங்கே போற்றிடும் நாம்
இணையற்ற பெண்ணறத்தை
நன்றியுடன் கைதொழுதால்
நாகரிகம் வானளவும்.

மறுநாள் சேட் கடைக்குத் தனியாக வந்து மூன்று புதுப் புடவைகள் வாங்கிக் கொண்டு போனாள் சரோஜ். ரங்கத்திற்கும் குமுதாவுக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை. சரோஜ் சொன்ன விலை ஒன்றும் அப்படிக் குறைந்ததில்லை. ஆனால் புதுமாதிரி ரகங்கள். அன்றைக்குத் தான் பம்பாயிலிருந்து கட்டு வந்ததாம், அவளுக்காக உடைத்துக் கொடுத்தானாம்.

கடனாக வாங்கியிருப்பாள் என்று அவர்களுக்கு எண்ணம்.

அவர்கள் மூவரும் அறைத் தோழிகள். அதைப் போல் பல அறைகள் அந்த விடுதியில் இருந்தன. கல்லூரி மாணவிகள், டைப்பிஸ்டுகள், நர்ஸுகள், பள்ளி ஆசிரியைகள் – இப்படிப் பலர் அங்கே வசித்து வந்தனர். சரோஜ் கல்லூரி மாணவி. தாவர சாஸ்திர ஆராய்ச்சியில் பட்டம் பெறுவதற்காகப் படித்து வந்தாள். அவளுக்கு எத்தனையோ தோழிகள் உண்டு.

சரோஜின் புதுப் புடவைகள் தோழிகளிடம் பரவின. தோழிகள் மூலமாக அவர்களுடைய தோழிகளுக்கும் பரவின. இப்பொழுதெல்லாம் 'குல்குல் வாலா லாகூர் சில்க் எம்போரி'யத்தில் பெண்களின் கூட்டத்திற்குக் குறைவில்லை.

சரோஜின் தலையைக் கண்டவுடன் எல்லா வேலையாட்களும் அங்கே எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். குளிர்பானம் என்ன, காப்பியென்ன, எல்லா உபசாரங்களும் அங்கே நடந்தன. அவளுக்கு மட்டிலுமில்லை; அவளுடன் போகும் பெண்களுக்கும் அதே மரியாதை.

கடைப் பையன்கள் சிலர் முன்னால் விட்டுப் பின்னால் சிரித்தாலும், அவளுடைய வரவு அவர்களுக்கு உற்சாகம் நிறைந்த பொழுது போக்காகவும் தோன்றியது. ஏமாந்த சோணகிரியான சில ஆண் பிள்ளைகளும் அங்கே தான் வாடிக்கையாய்ப் போய்த்

துணி வாங்குவது என்று வைத்துக் கொண்டார்கள்.

ரங்கம் ஒரு நாள் ரகசியமாய்க் குமுதாவைக் கூப்பிட்டு, "இவளுக்கு ஒன்றும் சேட் கடன் கொடுக்கவில்லை. மாதம் ஒரு புடவை வாங்குகிறாளே; இவளுக்கு ஏது இத்தனை பணம்? சும்மா கொடுப்பான் போல் தெரிகிறது!" என்றாள்.

"பிழைக்கத் தெரிந்தவள்!..."

*

ஞாயிற்றுக் கிழமை மாலையில் சரோஜ் எங்கோ கடைத் தெருவில் தனியாகப் போய்க்கொண்டிருந்தாள். பழைய மாடல் ஆஸ்டின் கார் ஒன்று தகர டப்பா மாதிரி உருண்டு வந்து அவள் பக்கத்தில் நின்றது. அதை ஓட்டி வந்த சேட்ஜி கழுத்தை நீட்டி அவளிடம் ஏதோ பேசினார்:

"காரில் ஏறிக் கொள்ளேன், சரோஜ்! எங்காவது சினிமாவுக்குப் போய்க் குஷியாய்ப் பொழுது போக்கலாமே!....வா, முதலில் ஹோட்டலில் காப்பி சாப்பிட்டு விட்டுப் பிறகு தியேட்டருக்குப் போவோம்."

இன்னும் எதையோ அசட்டுத்தனமாய் அந்த சேட்ஜி அவ்ளிடம் உளறினார்.

"இந்தா சேட், கொஞ்சம் நிதானமாப் பேசுங்கோ; புடவை வியாபாரத்தோட உங்க சிநேகம் நிற்கிறதுதான் உங்களுக்கும் மரியாதை, எனக்கும் மரியாதை. உங்க 'லிப்ட்'டும் வேண்டாம்; மண்ணாங் கட்டியும் வேண்டாம். போயிட்டு வாங்க!"

தகர டப்பா மேலே உருண்டு போய்ப் பக்கத்துச் சந்திற்குள் நுழைந்தது. சேட்ஜிக்கு அந்தப் பெண்ணைவிட தாம் கெட்டிக்காரரா, அல்லது அவள் தம்மை விடக் கெட்டிக்காரியா என்பது விளங்கவில்லை. ★

ஏடெடுத்தேன் பாட்டெழுத: 2

வேண்டும்

பெ. தூரன்

ஏழை யில்லா உலகம் வேண்டும்;
இன்பம் கூட்டும் அன்பு வேண்டும்;
பீழை துன்பம் பிணிகள் அறியாப்
பெருமை வாழ்வு தழைய வேண்டும்.

இனிமை தோய்ந்த மொழிகள் வேண்டும்;
எதிலும் அச்சம் தொலைய வேண்டும்;
கனிவு குழையும் பார்வை வேண்டும்;
கருத்தில் என்றும் உயர்வு வேண்டும்.



பூவைப் போன்ற நகையும் வேண்டும்;
பொங்கும் எழிலே பொலிய வேண்டும்;
தேவை ஏக்கம் சிறுமை சேராச்
சீல வாழ்வே வாழ வேண்டும்.

பழமை யென்னும் பாலை பாய்ந்தே
அழித லில்லா அறிவு வேண்டும்;
பழமை யீன்ற பெருமை யெல்லாம்
விழைந்து போற்றும் நிறைவும் வேண்டும்.

கவிதை இன்பம் கலையின் இன்பம்
அவனி யெங்கும் பெருக வேண்டும்;
புவியின் வாழ்வே அமர வாழ்வாய்
போகம் யோகம் இணைதல் வேண்டும்.

யார்க்கும் உடைமை பொதுவில்வேண்டும்
யாதும் ஊரே யாதல் வேண்டும்;
காக்கும் சோதிக் கருணை ஒளியாம்;
கடவுள் அருளே நிலவ வேண்டும்.

பாப்பா உமா :

அன்புத் தீபாவளி

'கார்த்திகை பாலன்'

"ஆமாம்பா, நீ செஞ்சதுதான் சரி. ராஜாத்திப் பொண்ணுடைய அன்பு, உன் பேரிலே திருட்டுப் பட்டத்தைச் சுமத்தினலும் சுமத்திப்பிடும்; நம்ப எசமானர் வீட்டு அம்மாகிட்டே சம்பளத்துக்கு மேலேயே பணம் வாங்கியாச்சு; காலம்பற கோடி வீட்டுப் பாட்டி கிட்டே ஒரு ரூபாய் கடன் வாங்கினேன். ஒனக்கு பலகாரம் செஞ்சிருக்கேன்; வா, சாப்பிட. பட்டாஸ் வாங்கி வந்திருக்கேன். ஆனந்தா, புதுத் துணி மட்டும் வாங்க முடியலே; அடுத்த வருசம் கட்டாயம் வாங்கித் தாரேன், கண்ணே!'' என்ருள் தாய் வள்ளி, விம்மிய வண்ணம்.

அப்பொழுது, வாசலில் பிளஷர் கார் ஒன்று வந்து நின்றது.

ராஜாத்தியைக் காணவில்லை....!

"ராஜாத்தி....'' என்று அலறிக் கொண்டே தலைதெறிக்க வெளியே ஓடிப்போன சிறுவன் ஆனந்தனை ஒரு குரல் தடுத்து நிறுத்தியது— "ஆனந்தா!''

"ராஜாத்தி...!''

"அப்பா, போனமாசம், பெரிய விபத்திலேயிருந்து என்னைக் காப்பாற்றின ஆனந்தனுக்கு இந்தத் துணி ரெண்டையும் கொடுத்திடுறேன். அண்ணச்சிகிட்டே நேத்து ராத்திரி இதைக் கொடுத்தேன். வாங்கமாட்டேன்னு சொல்லிடுச்சு; காலம்பறவும் இது ரெண்டையும் கொடுக்கிறதுக்குத்தான் வந்தேன். ஏம்பா, பணக்காரங் கண்ணு ஏழைங்க ஏன் அப்படி வெறுக்கிருங்க, பயப்படுருங்க, ஒதுங்கிப் போருங்க?'' என்ருள் சிறுமி ராஜாத்தி.

"ராஜாத்தி, ஆனந்தன்பேரிலே உனக்கு இருக்கிற பாசம், அன்பு இதெல்லாம் போதுமே, ஏழைகளை நாம் அலட்சியப் படுத்துவது இல்லை என்கிறதை நிரூபிக்க. நீ என் மகள்; நானும் உன்மாதிரி தான் கண்ணே! நீயும் ஆனந்தனும் வாதம் பண்ணினதை ராத்திரி நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். ஆனந்தன் செய்த மகத்தான உதவியைப் பற்றி நீ முன்பு சொன்னதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, ஆனந்தனுக்குத் தான் இந்தப் பட்டுச் சட்டைகள் இரண்டையும் வாங்கி வந்தேன். காலையில் போய் இவர்கள் இரண்டு பேரையும் அழைத்துவரலாம் என்றிருந்தேன். உன் அம்மாவும் அதுவே சரி என்ருள். வள்ளிக்குக்கூட புதுப்புடவை எடுத்து வைத்திருக்கிருள் உன்தாய். புறப்படு, வள்ளி...கிளம்பு தம்பி!'' என்று ஆனந்தத்துடன் சொன்னர் ராஜாத்தியின் அப்பா.

அந்தப் பணக்காரர் வீட்டில் நடந்த ஏழைகளின் அன்புத் தீபாவளியைப் பற்றித்தான் பூவைமாநகரில் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்! ★

ஒற்றை வளையல்

பூவை எஸ்.
ஆறுமுகம்

பாத்திரங்கள்:

ராமனுதன்

கண்ணம்மா

சேகரன்

அல்லி

★ மூன்று மாதங்களுக்கு முன்னர், சென்னை அகில இந்திய ரேடியோ நிலையத்தில் ஒலிபரப்பப்பட்ட நாடகம் இது. உரிமை பெற்று இப்பொழுது வெளியிட்டிருக்கிறோம். வாய்ப்பு இழந்தவர்களுக்குப் பயன்படும். மெல்லிய நகைச் சுவையும் கதையம்சமும் இணைந்தது.

காட்சி : 1

(சுவர்க் கடிகாரம் பத்து முறை அடிக்கிறது.)

கண்ணம்மா: (பதட்டமான குரலில்) என்ன அத்தான், அப்படியே மலேத்துப்போய் நிற்கிறீங்களே...? சுவர்க் கடிகாரம் உங்க சிந்தனையைத் தன்வசப்படுத்திக் கொண்டுவிட்டதா?

ராமனுதன்: (சிரிப்புடன்) அல்ல, கண்ணம்மா, அல்ல! என் சிந்தனையைத் தூண்டிவிட்டது உன்னுடைய அழகிய வளைக்கரம். வெறிச்சோடிக்கிடக்கும் இந்தக்கைதான் என் சிந்தையைப்பறித்துவிட்டது. வளைக்கரம் என்கிறேன்.... ஆனுல்....!

கண்: (தமாஷாக) ஓஹோ!....பூங்கரத்துக்குப் பொன் வளையல் போடுவதைப் பற்றிச் சொல்றீங்களா?...புரிகிறது....!

ராம: (மெல்லச் சிரித்தபடி) ஆமாம், கண்ணே! பொற் குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்க்க வேண்டாமா?

கண்: (மெல்லிய குரலில்) அப்படியென்ருல், போன மாசம் நான் உங்ககிட்டே சொன்ன விஷயம் ஞாபகம் இருக்குன்னு சொல்லுங்க; என் தாலி பாக்யம்.

ராம: உன்னுடைய வளையல் பிரச்னை என் இதயத்தை மட்டுமல்ல; இந்த மாதச் சம்பளத் தொகையையும் சேர்த்தல்லவா வளைத்து முற்றுகையிட்டுக் கொண்டிருக்கிறது!...அதை எப்படி நான் மறந்துவிடமுடியும், கண்ணம்மா?

கண்: (தணிவாக) உங்கள் பேச்சிலே இரண்டு அர்த்தம் தொனிக்கிறதே?

ராம: (சிரிப்புடன்) உன் சிரிப்பிலே தான் இரண்டு அர்த்தம் எதிரொலி செய்கிறது. அடடே, என் கண்ணம்மாவின் கண்கள் கலங்கி வருகின்றனவே?... சும்மா தமாஷ் பண்ணினேன் — அவ்வளவுதான்! இன்றைக்குச் சம்பள நாளல்லவா? சாயந்திரம் உன்னுடைய கெட்டுப்போன வளையலுக்கு ஜோடி வாங்கி வந்து விடுகிறேன்...! பாரதிக்கு ஒரு கண்ணம்மா கிடைத்தாள்; ஆம்; எனக்கும் ஒரு கண்ணம்மா கிடைத்திருக்கிருள். அவள் பேச்சைத் தட்ட முடியுமா, என்னுல்....?

கண்: (கைதட்டியபடி) பார்த்தீங்களா, அத்தான்?...என்னையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, காப்பியைச் சட்டையில் கொட்டிக் கொள்ளப் பார்த்தீங்களே?... அடடே, மணிபத்தேகால் ஆச்சே? புறப்படுங்கள் அத்தான். ஆபீசுக்கு நேரம் ஆயிடுச்சு....!

ராம: (மகிழ்வுடன்) தேவியின் கட்டளை — இதோ புறப்பட்றேன். ஒரு விஷயம் — கதைகளிலே சம்பளத் தேதியென்ருல்தான் இளந்தம்பதிகள் படம் பார்க்கப் புறப்படுவது வழக்கம்....! அதுபோலவே, நாம் இருவரும் இன்றைக்காவது சினிமாவுக்குப் போனுல்தான் உண்டு. ஆமாம், மறந்துவிடாதே! ஐந்தடித்தவுடன் நான் வளையலும் கையுமாக வந்து சேர்ந்து விடுகிறேன்.

கண்: (தமாஷாக) என்ன அதிசயம் அத்தான் இது? வளையல் கடைசியிலே உங்களுக்குத்தானு? பேஷ்! பேஷ்! அப்படியானுல், பெட்டியில் வச்சிருக்கிற அந்த ஒற்றை வளையலேயும் இப்போதே எடுத்துத் தந்துவிடட்டுமா?

ராம: இரண்டு அர்த்தம் வச்சு பாட்டுப் பாடின காளமேகப் புலவர் கிட்டே நீ போன பிறப்பிலே ட்யூஷன் படிச்சுக்கிட்டியோ, என்னவோ? சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னுல்...!

கண்: சரி, சரி!....வளையலே மறந்திடாதீங்க!.... அத்தோடே, நான் தயாரிச்சு உங்ககிட்டே சமர்ப்பிச்ச அந்த குடும்பப் பட்ஜெட்டையும் மறந்திடாதீங்க!... நீங்க வர்ற வழிமேலே விழி பதிச்சு காத்துக் கிட்டே இருப்பேனுக்கும்!

ராம: (பதட்டமாக) அடடே, அதை மட்டும் செய்திடாதே!....அப்புறம்

அந்த மான் விழியைப் பார்க்காமல் நான் திண்டாடிப் போயிடுவேன். வழிமேலே விழி பதிக்கிற வியவகாரமெல்லாம் கதைகளோடேயே நிற்கட்டும்!...என்ன, சரிதானே, கண்ணம்மா!

கண் : ஓ. கே!

(தம்பதிகள் சிரிக்கின்றனர்)

(காட்சி மாற்றம்)

காட்சி : 2

(அலுவலகச் சூழ்நிலை. 'டைப் ரைட்டர்'களின் 'டக் டக்' ஓசை; இடையிடையே 'காலிங் பெல்'லின் மெல்லிய நாதம்.)

சேகரன் : (உரத்த குரலில்) ஹெல்லோ, மிஸ்டர் ராமனுதன்; என்ன, அதுக்குள்ளே புறப்பட்டுட்டீங்களா?... அப்படியானு, மணி அஞ்சு பத்துன்னு சொல்லுங்க....உங்களைப் பார்த்துத்தான் நான் மட்டும் என் கடிகாரத்தைச் சரி பார்த்துக்கிறது வழக்கம்...!

ராமனுதன் : (தணிவுடனும் சோர்வுடனும்) மிஸ்டர் சேகரன், நீங்க சம்பளம் வாங்கிக்கிட்டீங்க இல்லையா? அப்போ, புறப்படுவோமே?... சைனுபஜார் வரைப் போயாகவேணும்....!

சேக : (சிரித்தபடி) ஏன், உங்க சம்பளப் பணத்தை அந்த ஜேபடித் திருடன்களுக்குக் கொடுக்கிறதாக வேண்டிக்கிட்டிருக்கீங்களோ? போன மாசந்தான் அந்த வேண்டுதலைக்குக் காணிக்கைசெலுத்திட்டீங்களே?

ராம: அட, நீங்க ஒண்ணு! மத்தியானம் லஞ்ச் அவரிலே சொன்னேனே மிஸ்டர் சேகரன்....ஆமாம், அந்த வளையல் விஷயந்தான்...!

சேக : ஓஹோ!....போன காங்கிரஸ் எக்ஸிபிஷனிலே ஒரே ஒரு வளையல் மாத்திரம் கெட்டுப் போனதாகச் சொன்னீங்களே, அதுதானே...?

ராம : ஆமாம்...!

சேக : ஒரே ஒரு சின்ன சந்தேகம்!........அந்த வளையலுக்குத் தற்காலிக உரிமை கொண்டாடின திருடன் இப்போது மனம் திருந்தி, அந்த உரிமையை உங்களுக்கே ட்ரான்ஸ்வர் செய்துவிடுகிறதாய் தபால் போட்டிருக்கானு? சைனுபஜாரிலே தன் முழு விலாசத்தையும் எழுதியிருக்கானு? அப்படியானு, அவனைக் கோயிலிலே வச்சுதான் கையெடுத்துக் கும்பிடணும்!

ராம : உங்க தமாஷ் இன்னிக்கு ரொம்ப ரொம்ப ஒரிஜினலாக அமைஞ்சிருக்குது! டைம் ஆயிடுச்சு.... கெட்டுப்போன அந்த ஒற்றை வளையலுக்கு ஜோடியாக இன்னொன்று வாங்கணும்....!

சேக : பேச்சு வாக்கிலே, என் சொந்த விஷயத்தை மறந்தே போயிட்டேன்!

ராம : நான் சொல்லட்டுமா, அந்த படே விஷயத்தை? நீங்களும் உங்க அல்லியும் நேற்று ரிலீஸான

படத்துக்குப் போகப் போறீங்க; இல்லியா, சேகரன்....?



சேக: அபாரம்! அபாரம்! அப்படியே நீங்களும் உங்க திருமதியும் சினிமாவுக்குப் போகிற திட்டத்தையும் கொஞ்சம் அம்பலப் படுத்தக் கூடாதா? கோபித்துக் கொண்டு விடாதீர்கள்!...குடும்ப அரசியலிலே போராட்டம் எதையும் விரும்பாதவன் நான். உங்க கண்ணம்மாவும், என் அல்லியும் பரிமாறிக் கொண்ட அரைமணித் திட்டத்தின் விளைவு இது.

ராம: ஒஹோ!.... அப்படியா?

சேக: (வேகமான குரலில்) ராமனாதன்!....என்ன அது?....எக்ஸ்பிரஸ் கார்டு மாதிரியிருக்கே?... தம்பதி சமேதராக ஆனித் திருவிழாவுக்கு வந்து போகும்படி உங்கள் மாமனார் இல்லம் செய்தி அனுப்பி, அத்தோடு வந்து போகும்படி என்பதிலே போகும்படி என்கிற வார்த்தையை சிவப்புக்கோடிட்டு எழுதி அபாய அறிவிப்புக் காட்டியிருக்கிறதோ?

ராம: (எரிச்சலுடன்) மாமனார் வீடு இன்னும் பேசக் கற்றுக்கொள்ளவே இல்லே, என்னை வரச் சொல்றதுக்கும், பின்னாலே போகச் சொல்றதுக்கும்! திருச்சியிலேயிருந்து என் அத்தை பெண் லீலா லெட்டர் எழுதியிருக்குது; தன் புருஷனுக்கு டைபாயிடாம்... அவசரமா ஐம்பது ரூபாய் வேணுமாம்.... நானே குடும்பத்தை நடத்துறதுக்குப் படுற பாடு ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். இந்த லட்சணத்திலே இது மாதிரி எதிர்பாராத சங்கடங்கள் வேறே.... தான் ஆடாது போனாலும் தன் சதை ஆடாதா? ம்... சாயந்திரம் டி. எம். ஓ. பண்ணி வச்சேன்....!

சேக: கொடிக்கு காய் கனத்திருக்குமான்னு சும்மாவா பெரியவுங்க பழமொழி சொல்லுறாங்க! மிஸ்டர் ராமனாதன், உங்களைப் பேர் சொல்லி யாரோ கூப்பிட்ற மாதிரி கேட்குதே?.... பேஷ்! பேஷ்! ஸார்! சைனா பஜார்தான் ஸார் உங்களைக் கூப்பிடுது! ஸ்ட்ராங்கா ஒரு டிகிரி காப்பி போட்டுட்டு, உங்களுக்கு—மன்னிச்சுக்கங்க — உங்க மனைவியாருக்கு ஒரு வளையல் வாங்கிக்கிட்டு நேரா நடையைக் கட்டி விடுவோம்...!

ராம: முதல்தரமான யோசனை!

(காட்சி மாற்றம்)

காட்சி: 3

(சைக்கிள் மணி அடிக்கும் சத்தம் கேட்கிறது.)

பால்காரன்: அம்மா! பால் அம்மா!

கண்ணம்மா: சீக்கிரமா ரெண்டு ஆழாக்கு ஊத்தப்பா!.........ஐயா வர்ற நாழி ஆயிடுச்சு!

பால்: இன்னிக்கு முதல் தேதியாச்சே, அம்மா?

கண்: நாளைக்குக் காலையிலே வாப்பா. பாக்கிப் பணத்தை வாங்கிக் கிடலாம்...!

பால்: நல்லதுங்கம்மா!

அல்லி: (மெதுவாக) கண்ணம்மா, கண்ணம்மா!

கண்: ஒ, அல்லியா?

அல்லி: என் குரல் உன்னை ஏமாத்திடுச்சோ? ஒருவேளை உன் அத்தான்னு நெனைச்சியோ....?

கண்: நீ ரொம்ப குறும்புக்காரி: டிக்கா ட்ரெஸ் பண்ணிட்டு தேவியார் படம் பார்க்க ரெடியாயிட்டாப்போலே இருக்கு?

அல்: ஏன், நீ கூடத்தான் அற்புதமாக உடுத்தியிருக்கே? அதோ, உன் அத்தான் வந்திட்டாங்க...ம்! ஜல்தி! அவர் வர்றதுக்கும், நீ காப்பியும் கையுமா வாசலுக்கு வர்றதுக்கும் கணக்கா இருக்க வேண்டாமா?

கண்: (கவலையுடன்) நீ என்னமோ கலாட்டா பண்ணுறே! எனக்

கென்னவேர் பயம் பிடுங்கித் தின்கிறது. கற்பகாம்பிகா, நீதான் இன்னிக்கு என்னைக் காப்பாத்த வேணும், தாயே!

அல்: (மெல்ல) சரி, சரி! நாம் பேசிக்கிட்ட மாதிரியே நாடகத்தை நடிச்சுப்பிடு. அப்புறம் உன் அத்தான் விட்ட வழி!...நான் போயிட்டு வர்றேன்....!

(சிறிது தாமதம்)

ராமனுதன்: (குஷாலாக) கண்ணம்மா! ஏ, கண்ணம்மா!

கண்ணம்மா: அத்தான். ஏன் இவ்வளவு நேரம்?....முதலிலே டிபன் காப்பி சாப்பிட்டுட்டு அப்புறம் பேசலாமே!

ராம: ஆமா, படத்துக்குப் போகணும்னு படிச்சுப் படிச்சுச் சொன்னேனே?... ம்! புறப்படு... கையோடேயே டிபன் காப்பியையும் எடுத்துக்க. க்யூவிலே நிற்கிறப்போவே சாப்பிட்டாப் போச்சு!

கண்: நீங்க வேலை பார்க்கிறது சுருக்கெழுத்து வேலைண்ணுலும், பேசறதை மட்டும் ஒண்ணுக்கு ரெண்டாத்தான் எப்போதும் பேசறீங்க; இன்னிக்குப் படத்துக்குப் போகவேணும்; முதலிலே காப்பி பலகாரம் சாப்பிடுங்க; அப்பாலே, கொடுக்க வேண்டியவங்களுக்குப் பணம் பட்டுவாடா செஞ்சிடுவோம்.

ராம: முதலிலே உன் பெட்டியிலேயிருந்து அந்த ஒற்றை வளையலை எடுத்துக்கிட்டு வா. ஓடு, கண்ணம்மா. ஒரே அச்சிலே வார்த்த மாதிரியே அந்த வளையலுக்கு ஜோடி கிடைச்சது நான் செஞ்ச பூஜாபலன் தான்!

கண்: என் பூஜாபலன் தான் அது, அத்தான்!

ராம: ஊஹூம், அது என்னுடைய பூஜாபலனே தாளுக்கும்! ஜோடி சரியாயில்லாவிட்டால், அப்புறம் திருமதி ராமனுதன் அவர்களின் நெற்றிக்கண் திறந்துவிடாதா...?

கண்: (பொய்க் கோபமாக) போங்க அத்தான், முதல் தேதியும் அதுவுமா நையாண்டி செஞ்சுகிட்டு... என்னமோ நேத்துதான் கல்யாணம் செய்துவந்தது மாதிரி! முதலில் நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க.

ராம: இன்னிக்கு மாத்திரம் லீவு விட்டுடேன்!.... உன்னுடைய இரண்டு தங்கக் கைகளையும் இரண்டு தங்க வளையல்களால் அலங்கரித்துப் பார்த்த பிறகுதான் எனக்கு நல்ல மூச்சு வரும்; இல்லையென்ருல் நீ தயாரித்திருக்கிற ஸ்வீட் கசக்கும்; காப்பி புளிக்கும்!

கண்: அத்தான், அதோ அல்லி வந்துவிட்டாள். இன்னிக்கு எங்க தோழி ஒருத்திக்கு சீமந்தம். போயிட்டு அரை மணியிலே திரும்பி வந்திட்றேன். வந்ததும், வளையலைப் போட்டுக்கிறேன்; ம், சாப்பிடுங்க.... ஸ்வீட்டை முதலிலே சாப்பிட்டுட்டு, காப்பியை அப்பாலே சாப்பிடுவாங்களா?.... உங்களுக்கு மட்டும் வேடிக்கைதான் எல்லாம்....!

ராம: முதலிலே நீ புறப்படு.... சங்ககாலத் தலைவிக்குக் கூடக் கிடைக்க முடியாத தோழியான அல்லி உனக்குக் கிடைச்சிருக்காங்க!.... சீமந்தச் சடங்கைப் பார்த்து, நோட்டுப் புஸ்தகத்திலே குறிச்சிட்டு வரணும்.... மறந்திடப் போறே....?

கண்: போங்க, அத்தான்!

(சிரிப்பு)

(காட்சி மாற்றம்)

காட்சி: 4

(ரேடியோவில் இசைத் தட்டு பாடுகிறது.)

சேகரன்: மிஸ்டர் ராமனுதன்! நோ அட்மிஷன் போர்டு 144 போடுகிறதே? வரலாமா? இல்லை, கூடாதா...?

> இந்த உலகில் உள்ள பல இனத்தவர்களுக்குள்ளே, வேற்று நாட்டின் மீது எப்போதும் படையெடுத்துச் செல்லாதவர்கள் நாம் தாம்.
>
> —விவேகானந்தர்

ராமனுதன் : மிஸ்டர் சேகரனு? வாருங்கள்!.... அந்தப் போர்டுக்கு இடம், பொருள், ஏவல், பண்பாடு எதுவுமே தெரிவதில்லே. நீங்க இங்கே வந்துதானே தீரவேணும்?

சேக : என் அல்லியும் உங்கள் கண்ணம்மாவும் தங்கள் தோழி வீட்டுக்குப் போனதைப் பற்றிச் சொல்றீங்களா? அது கிடக்கட்டும்! உலகத்திலே ரொம்ப ரொம்பப் பயங்கரமானது என்ன தெரியுமா? அதுதான் இந்தப் பாழாய்ப்போன தனிமை!

ராம : சேகர், ஒரு செகண்ட் என்னை மன்னிச்சிடுங்க...உள்ளே போய், பெட்டியிலே யிருக்கிற அந்த ஒற்றைவளையலே எடுத்து வர்றேன். நாம்ப செலக்ட் பண்ணினதுக்கும் இதுக்கும் 'மாட்ச்' ஆகுதான்னு பார்த்திடலாமே! இல்லாதபோனுல், காதும் காதும் வைத்தாற்போலேவேறே ஒண்ணை வாங்கி வந்திடலாமில்லேயா?

சேக : வாஸ்தவந்தான்!

(சிறிது தாமதம் : வளையலேத் தரையில் விசி எறியும் சத்தம் கேட்கிறது.)

சேக : (பதட்டத்தோடு) என்ன ராமனுதன், அப்படி வளையலே விசி எறியிறீங்க...?

ராம : (கோபமாக) உடையவன் பாராத வேலே ஒரு முழம் கட்டைன்னு சொல்றது கணக்காத் தான் பலிச்சிட்டுது...!

சேக : ஏனும்? வளையல் கூனிக் குறுகிப் போச்சுதா, ராமனுதன்?

ராம : அப்படி ஆனுலுந்தான் பரவாயில்லேயே?... தங்கமாவது மிஞ்சுமே? இப்போ அசலுக்கே நஷ்டம் வந்திடுச்சு. கண்ணம்மா கிட்டே கொடுத்திருந்த அந்த ஒற்றை வளையலேப் பெட்டியிலே காணேம்....!

சேக : மூளையை நிதானப்படுத்தித் தேடுங்க, இன்னெரு தடவை.

ராம : இனி மைக்ராஸ்கோப் வச்சுத்தான் தேடிப் பார்க்க வேணும்... அதோ, கண்ணம்மாவே வந்திட்டா....ம்....!

சேக : உள் நாட்டுப் போர் எதுவுமே வந்து விடாமல் செய்யுங்கள்.... மனப்பாடம் செய்திருக்கும் வான் மறையையும் கொஞ்சம் நினைவுபடுத்திப் பாருங்க....உங்க பெண்சாதி வேறே எங்கேயாச்சும் வளையலேப் பத்திரமா வச்சிருப்பாங்க...நின்று நிதானிச்சுக் கேட்டுப் பாருங்க.... நாம் அவசரக் குடுக்கைகள் என்கிறதை அவங்க கிட்டேயே நிரூபிச்சுக் காட்ட சந்தர்ப்பம் தந்திடாதிங்க.... நான் வர்றேன்...!

(காட்சி மாற்றம்)

காட்சி : 5

(கதவு திறந்து சாத்தப்படும் அரவம் கேட்கிறது)

ராமனுதன் : (வெகு கோபமுடன்) கண்ணம்மா, உன் பெட்டியில் வைக்கச் சொன்ன அந்த வளையல் எங்கே...?

கண்ணம்மா : (தயக்கம்) வந்து.... வந்து....!

ராம : (அதே கோபம்) வளையல் எங்கே வந்திச்சு...? இல்லே ஒரேயடியாப் போயேபோயிடுச்சா....?

கண் : (விம்மலுடன்) அந்த வளையலே மத்தியானம் தேடி எடுத்துத் துடைச்சுக்கிட்டிருந்தேன். திண்ணையிலே கைமறதியா வச்சிட்டு மார்க்கெட்டுக்குப் போயிட்டேன். வழியிலே நினைப்பு வந்து ஓடியாந்து பார்க்கையிலே, அதைக் காணவில்லே...!

ராம: (எரிச்சலுடன்) இந்தா, ஜோடி சேர்க்க வாங்கியாந்த இந்த வளையலையும் எங்காச்சும் கெட்டுப் போக்கிடு... இது ஒண்ணு இருந்து நம்ப கண்ணை வேறே எதுக்கு உறுத்திக்கிட்டிருக்கணும்...?

(அந்த ஒற்றை வளையலை மறுபடியும் தரையில் எறிகிருன்.)

(கண்ணம்மா விம்முகிருள்.)

ராம: ம்....! எருதுநோய் காக்கைக்கு எப்படித் தெரியமுடியும்? ஏழை பாழைங்க வீட்டிலே கூட இந்த முதல்தேதி என்ருல் ஆனந்த பைரவி, வசந்த பைரவி ராகம் கேட்கும்....இங்கே என்னடான்னு ஒரே முகாரிதான்!...சே! என்ன வாழ்க்கை இது!

(சாமான்கள் கீழே வீசப்படும் ஒலியும், கண்ணம்மா விம்மும் ஒலியும் கேட்கின்றன.)

(காட்சி மாற்றம்)

காட்சி: 6

(ஆபீஸ் – சாப்பாட்டு வேளை)

சேகரன்: அடடே, என்ன மிஸ்டர் ராமனுதன், சாப்பிடாமல் புஸ்தகத்திலேயே மூழ்கிக் கிடக்கிறீங்க? டிபன் செட்டை எடுங்க, வாங்க சாப்பிடலாம்!

ராமனுதன்: சேகர், நீங்க சாப்பிடுங்க. இன்னிக்கும் நமக்கு ஹோட்டல் சாப்பாடுதான்.

சேக: நேத்திக்கே உள் நாட்டுக் கலகம் சமாதானமாயிடுச்சின்னு சொன்னீங்களே....?

ராம: எல்லாம் பொய்!

சேக: அந்த ஒற்றை வளையல், இந்த நாலு நாள் ஊடலைக்கூடத் தீர்த்துவைக்காமல், இன்னும் நீடிக்கவா ஆசைப்படுகிறது? நீங்கள் சொன்ன பொய்யின் உண்மைக் கதை எனக்குத்தெரிஞ்சிருந்தா...?

ராம: உங்க அல்லி மூலம் தூது அனுப்பி ராசி பண்ணுவீங்க; எனக்குக் கூட அந்தப் பொய்யின் உண்மைக் கதை இப்போதுதான் தெரிஞ்சிது....அதுவும் இந்த முக்காலணு கார்டு மூலம்...!

> சத்தியத்தைப் பேசுவது, சத்தியத்தை எண்ணுவது, சத்தியத்தைச் செய்வது – இவையே சரியான பாதையின் முதல் படிகள்.
>
> —மகாத்மா காந்தி

(சேகரன் அந்தக் கடிதத்தைப் படிக்கிருன்.)

சேக: என்ன அதிசயம்? தனியாக வேறே ஐம்பது ரூபா அனுப்பினதாகவும் எழுதியிருக்கே...?

ராம: அதுதான் ஒன்றுமே புரியவில்லை; ஒருவேளை அவள் வைத்திருந்த அந்த வளையலை விற்று அனுப்பிவிட்டிருப்பாளோ? ஆமாம், அப்படித்தான் இருக்க வேணும்; என் அத்தை பெண் புருஷனுக்கு உடம்புக்கு சரியில்லை என்கிற சேதி அவளுக்குத் தெரியாதே?....எனக்கு ஆபீசுக்குத்தானே எக்ஸ்பிரஸ் லெட்டர் வந்துச்சு? சொல்லப் போனுல் என் அத்தை பெண்ணையோ, அவள் கணவனையோ கண்ணம்மா பார்த்ததுகூடக் கிடையாதே? சரி, நான் இப்போதே கண்ணம்மாவைப் பார்த்து விசாரித்தால்தான் உண்டு....போய் வரட்டுமா?.... இதோ, இந்த லீவ் லெட்டரைத் தயவு செய்து மானேஜரிடம் கொடுத்து விடுறீங்களா....?

சேக: (கேலியாக) ம்!....பட்டவர்க்குத்தான் பலன் உண்டு...! புறப்படுங்கள்.... உங்க தாம்பத்ய ஊடல் நல்ல தீர்ப்பு வழங்கட்டும்! நிரந்தரமாக வாழ்க அது!....

(காட்சி மாற்றம்)

காட்சி: 7

(கோயில் மணி 'கண கண' வென்று ஒலிக்கிறது.)

ராமனுதன்: (மகிழ்வுடன்) கண்ணம்மா!....கண்ணம்மா!

கண்ணம்மா: யார், அத்தானு?.... உடம்புக்குச் சரியில்

தேவை

இவரைத் தெரியுமா?

சோர்வுற்றிருக்கும் இவருக்கு அயர்வைப் போக்க ஒரு சிட்டிகை **ரத்தினம் பொடி** தேவை

T.A.S. ரத்தினம் பட்டணம் பொடி

தபால்பெட்டி - 1151 சென்னை - 21.

லையா?.... ஏன் அதுக்குள்ளே வந்திட்டீங்க...?

ராம: இதோ, இந்த லெட்டரைப் பார், கண்ணம்மா!

(சற்று தாமதம்)

கண்: (பணிவன்புடன்) அத்தான்!... அன்றைக்கே நான் உங்களிடம் உண்மையைச் சொல்லாததற்கு என்னை மன்னிச்சிடுங்க! உங்க அத்தை பெண் லீலாவின் புருஷன் எனக்கு ஒன்றுவிட்ட அண்ணன் முறை வேண்டும். முதல்தேதி நீங்க ஆபீசுக்குப் போன கையோடே, இங்கே வீட்டுக்கு ஒரு எக்ஸ்பிரஸ் லெட்டர் வந்துச்சு....என் அண்ணனுக்கு காய்ச்சல் என்கிற விஷயம் தெரிஞ்சுது....உங்களுக்கு ஆபீசுக்கும் ஒரு லெட்டர் போட்டிருக்கிறதாகவும் எழுதியிருந்துச்சு. பாசம் என்னைப் பைத்தியமாக அடிச்சிட்டுது....பெரிய ஜுரம்போலே என்கிற பதட்டத்திலே என் கிட்டே இருந்த அந்த ஒற்றை வளையலை நம்ப சேட் கடையிலே அடகு வச்சு ஐம்பது ரூபாய் அனுப்பி வச்சேனுங்க... ஐம்பது ரூபாய் கடன் வாங்கி, அந்த வளையலை மீட்டுடலாம்னுதான் அன்னிக்கு சீமந்தம் பார்க்கப் போறதாகப் பொய் சொல்லி நானும் அல்லியும் எங்க தோழிகளிடம் கேட்கப் போனோம். ஒண்ணும் பலிக்கவில்லே .... உண்மையைச் சொன்னா, உங்க கோபம் எப்படி வளருமோ என்னமோன்னு பயந்துதான் வாயை மூடிக்கிட்டே இருந்திட்டேன்.... நீங்க ஒண்ணுந் தேதி வாங்கி வந்த வளையல், நான் சேட் கடையிலே அடகு வச்ச அதே வளையலே தான்!

ராம: (சிரித்தபடி) அந்த ரகசியத்தையும் இப்போதான் வழியிலே சேட் மூலம் அறிஞ்சுகிட்டேன்.... இதோ, இங்கே வாயேன்; வா... கண்ணம்மா. இதோ பார்; ஜோடி வளையல்கள்! ஆஹா, பூங்கரங்கள் பொன்னாக மின்னுகின்றன; பொன் வளையல்கள் பூக்களாக மணம் சொரிகின்றன!

கண்: (ஆச்சரியத்துடன்) இது ஒண்ணுந்தேதி வளையல்!...இது....இன்னொன்று....!

ராம: (கேலியுடன்) இது நாலாந் தேதி வளையல் என்று வைத்துக் கொள்ளேன். அடடே, கோபம் தலை காட்டுகிறதே? இதோ, சொல்லி விடுகிறேன்.... இன்னொரு வளையல்தான், போன எக்ஸிபிஷனிலே காணாமற் போனது....சேட் கடைக்கு விற்பனைக்கு வந்ததாம் ....சந்தேகப்பட்டு அவனைப் பிடித்து வைத்து விட்டானாம்! நான் வந்த வழியில் கதையைச் சொல்லி இதையும் கொடுத்தான் சேட்... வேளை வரும்போது, எல்லாம் சுபமாகவே நடக்கிறது; சரி, முதலிலே நீட்ரெஸ் செய்துகொள். இன்றுதான் நம்ப வரைக்கும் முதல் தேதி. படம் பார்க்கப் போக வேணும். இந்த ஒற்றை வளையல் நம்ப வாழ்க்கை ஏட்டின் பொன் குறிப்பு. நம்முடைய தாம்பத்யத்திலே முதல் ஊடலை ஏற்படுத்திப் பிறகு அதை தீர்த்ததும் இந்த ஒற்றை வளையல்தானே!.... மறக்க முடியுமா?.... வாழ்க அது!

(தம்பதிகள் சிரிக்கின்றனர்) ★

இந்தப் புனைபெயர்

இளம்பாரதி

"ஏன் இந்தப் பித்தலாட்டம்....!"

நான் இதை அன்றும் உணரவில்லை; இன்றும் உணரவில்லை, தம் எழுத்துத் திறமையை கௌரவமாகப் பகிரங்கப் படுத்துவதற்காகத்தான் எழுத்தாளரிடை இந்தப் புனைபெயர்ப் பித்தலாட்டமா?

குழந்தைப் பருவத்தில் காலை ஊன்றிக் கொண்டு வாலிபப் பருவத்தைக் கைகளை நீட்டி வரவேற்றுக் கொண்டிருந்த அந்த வாழ்க்கைப் பகுதி – 'இண்டர் மீடியட்' நிலை – எனக்கு நெல்லையைச் சேர்ந்த வண்ணார்ப் பேட்டையில் கழிந்து கொண்டிருந்தது. தன் மேனியிலும் கரையிலும் என்னை விளையாடச் செய்து என்னை எழுத்தேருழவனுக்கிப் பொருநை தன் காவியப் பெருமையை வெளிப்படுத்திற்று. என்னை எழுத்தாளனுக்கக் காரணமாயிருந்த அந்த வண்ணார்ப்பேட்டைக்கு மறுமலர்ச்சித் தமிழ்க் காவியத்தில் என்றும் அழியாத பெயருண்டு. 'கொட்டுமேள' ஒலி கேட்கிறதா? அதல்ல நான் கூற வந்தது. இனிமேல்தான் 'கௌரவப் பகிரங்கம்' நடக்கயிருக்கிறது.

வண்ணார்ப் பேட்டையில் முதல் பெரிய தெரு முத்தொள்ளாயிரம் தெரு. இதுவே வழக்கிலே சாலைத் தெருவாக இருந்து வருகிறது. இந்தத் தெருவிலேதான் அந்த நாளில்–அதாவது அவரது நெல்லை வாழ்க்கை நாளில் – 'புதுமைப்பித்தன்' குடி இருந்தார். இதற்கு அடுத்து இரண்டாம் தெரு என்ற அப்பர் சுவாமிகள் தெரு. இந்தத் தெருவுக்குப் பெருமை தேடித் தந்து கொண்டிருந்தவர் நண்பர் திரு(!) கோமதி ஸ்வாமிநாதன்.

மூன்ருவதாக இருந்த தெரு கம்பராமாயணத் தெரு. இத்தெருவில் குடியிருக்கும் எழுத்தாளனுக என்னை நியமித்துக் கொண்டேன். முதல் தெருவிலிருந்த இலக்கியப் பித்தமும், இரண்டாம் தெருவிலிருந்த இன்பப் பெருக்கும் மூன்ரும் தெருவுக்கு வந்து சேர வழி இல்லையா? அதுவரை இயற்பெயரில் கதைகளையும், கவிதைகளையும் எழுதி வந்த நான், இப்படிப் புதிய சிந்தனை ஒன்றின் ஆக்கிரமிப்பால் என்மேல் முலாம் பூசிக் கொண்டேன். புனைபெயர் கிடைத்தது, இன்பப் பித்தன் என்று. இதை என் தந்தையிடம் தெரிவித்த போது....

"பிழைச்சிருக்கிற வழியைப் பாருடா; அவனைப் போல நீயும் சாகப் போறியா?"

என் தந்தையின் சொற்களில் கோபம் கலந்திருந்தது. மகன் வளத்தோடு வாழ வேண்டுமென்ற பரிவு கலந்திருந்தது. அவர் அழுத்தமாகக் கூறிய 'அவனை' என்ற சொல் புதுமைப் பித்தனைக் குறிக்கும். இத்தனைக்கும் என் தந்தையும் புதுமைப் பித்தனும் நண்பர்கள். ஒரே கல்லூரியில், ஒரே வகுப்பில் உட்கார்ந்து, ஒரே வாத்தியாரைக் கேலி செய்தவர்கள். அப்படியா

சொந்தப் பெயர்களுக்குத் திரைபோட்டுக் கொண்டு உலவிவரும் பேனக்கள் பல உண்டு – எழுத்துலகிலே புனைபெயர் விளக்கம் சுவைமிக்க வரலாறு; சிலருக்கு அது சிதம்பர ரகசியம்; பலருக்கு அது உண்மைக் கதை. இப்பகுதியில் இதுவரை பங்கெடுத்துக் கொண்ட பெயர்கள் இவை: **மகரம், ஜெகசிற்பியன், வாசவன், மாறன், ஜடாதரன், சுகி, கஜமுகன், நவீனன், கேதாரி. இளம்பாரதி** – சிறந்த கவிஞர்களுள் ஒருவர்; பட்டதாரி; இயற்றிய நூல்கள்: கீதா; முத்த ஏடு. இயற்பெயர்: ரு. துளசிதாஸ்.

ஞல் நண்பனை நினைவூட்டும் 'இன்பப்பித்தன்' அவருக்கு மகிழ்ச்சியைத் தராமல் இருந்தது ஏன்? காரணம் இருந்தது. புதுமைப்பித்தனைப்போல நானும் எழுத்தின் ஆதிக்கத்திஞல் படிப்பென்னும் பாதையில் சறுக்கி விழுந்திருந்தேன்.

தன் மகனை வளமுடன் காண விரும்பாத தந்தை உண்டா? எனவேதான் கோபத்தோடு கோபமாக, ''புனைபெயரை மாற்றிக் கொள்!'' என்று அவர் என்னிடம் கூக்குரலிட்டார்.

''முதலில் வைத்த என் இயற்பெயரை என்னைக் கேட்டுக் கொண்டா வைத்தீர்கள், இன்று என் பெயரை மாற்றி உங்கள் விருப்பம்போல் இன்னென்றை நான் வைத்துக் கொள்ள?'' என்று நான் எதிர்த்து வாதாட விரும்பவில்லை. இளைஞனெனப் புதுப்பித்த விந்தைக்காகவேனும் நான் அவருடைய மனத்தைக் குளிரச் செய்ய வேண்டுமல்லவா? இதைவிட ஒரு மகனுக்கு வேறு என்ன வேலை இருக்கமுடியும்?

'எடுத்த காரியம் யாவினும் வெற்றி கண்ட' பாரதியின் பாடல்களில் என் தந்தைக்குத் தனி பக்தி. என்னைப் போலவோ, புதுமைப்பித்தனைப் போலவோ அவர் படிப்பென்னும் பாதையில் சறுக்கி விழுந்ததில்லை. அவரை நான் என் முன்னெளியாக ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது?

என் தந்தையின் மனத்திருந்து வெளிப்பட்ட புயற்காற்றுச் சூழ்நிலை என்னுள் சில கேள்விகளை எழுப்பியது. ''வளமான வாழ்க்கைக்கு நீ என்ன செய்ய இருக்கிருய்?'' என்ற கேள்விக்கு, ''சாகாத இளமை என்னில் நிலைக்க நான் உழைக்க வேண்டும்!'' என்று நான் தெளிவுறுத்திக் கொண்டேன். இதனை அடுத்து பாரதித்தனமான கவிதைகள் சில என்னிடமிருந்து அவ்வப்போது உருவாயின. வளந்தரும் இளமைக்கு இலட்சிய முன்னெளி பாரதி ஆசி தரவே, இளம்பாரதி என நான் புதுப்பிறவி பெற்றேன்.

என் கைப்பிடியில் சிக்கியது முருங்கைக் கொம்பு அல்ல, புளியங் கொம்பே யென்று அறிந்த போது என் தந்தையின் மூச்சிலே பெருமிதம் கலந்தது. ''பெயரில் என்ன இருக்கிறது?'' என்று கேள்வி கேட்ட ஒரு வகை நண்பர்களுக்கு மறுமொழி சொல்லும் வண்ணம் இன்னெரு வகை நண்பர்கள், ''இந்தப் பெயரில் பொருநை ஆற்றின் கற்பனை வளம் தேங்கிக் கிடக்கிறது!'' என்ருர்கள். எது எப்படியானுல் என்ன? உயர்திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களிடம் சொல்லியதைத் தான் நான் இங்கேயும் திரும்பச் சொல்லவேண்டும் — ''இலக்கியத்தில் என் பெயரைக் காப்பாற்ற நான் முயல்வேன்!'' ○

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும்கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானுலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 3—8—0

ஹிந்தி ஆசான்

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றித் தானே சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபாய் 1–12–0

V. P. செலவு ரூ. 0–12–0.

VANI BOOK DEPOT (U)
Post Box No 239. MADRAS-1.

'உமா கல்லூரி மாணவ–மாணவிகள் சிறுகதைப் போட்டி'யில் பரிசு பெற்ற ஐந்து கதைகள் : 'மனிதனாகிவிட்டேன்!', 'கூடைக்குள்ளே', 'நீதியின் ஆணை', 'மகிழம்பூ', 'அவன் மனிதன்'. இவை கடந்த ஐந்து இதழ்களையும் மணம் பெறச் செய்தன. மேற்படி போட்டியில் பரிசு பெறாத கதைகளுள், பிரசுரத்திற்கென ஒரு சில கதைகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். இவ்வகையில் இக்கதை முதலாவது. திரு டி. எஸ். வேங்கடரமணி, திருச்சி தேசியக் கல்லூரியில் நான்காம் கலை வகுப்பில் படிக்கிறார். 'வேணி' என்ற புனைபெயர் இவருக்குச் சொந்தம்.

முருகு என்பதற்கு அழகு என்று அகராதி பொருள் சொல்லுகிறது. அதனால்தானோ என்னவோ, தமிழ்த் தெய்வம் முருகனுக்கும் அழகான அனைத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் அந்தப் பண்பே ஒரு தனி அழகு. ஈசனுக்குரை செய்து பிரணவனாய் நின்ற விதமே 'தீப மங்கள ஜோதி'யின் அலாதி சௌந்தர்யம். ஆறுமுக வேலவனின் ஆறு படை வீடுகளையும்தான் பாருங்களேன்; அனைத்தும் இயற்கையின் பூரண அழகு அற்புதமாகச் செழிப்பவை.

திருவேரகம் என்று அருணகிரியாரும் நக்கீர தேவரும் பாடிச் சென்ற 'சுவாமிமலை' என்னும் திருத்தலம் முருகனின் எழிலாட்சிக்குக் கட்டியங் கூறும் அழகுச் சிறு பதி. முதிர்ந்த கதிர் முத்துப் பற்கள் தெரிய நில மகளின் எழில் முறுவல்; கண்ணுக்கெட்டிய தூரம் வரை முற்றிய கதிர்கள் பழுப்பு நிறச் சிரிப்பு உதிர்த்துக் கொண்டிருந்தன. இயற்கை என்பது ஒரு தெய்வீக சக்திதான்; பருவந்தோறும் மாறுபடும் எழில் காட்டி, என்றைக்கும் அழகரசியாக நில மகளை வாழ வைத்துக்கொண்டிருக்கிறதல்லவா....? வேர்ட்ஸ்வொர்த்தாகவோ கவிமணியாகவோ நான் இருந்தால், என் சிந்தனைகள் கவிதையாக வெளிப்பட்டிருக்கும்; நான் கவிஞனல்லன்; வெறும் ரஸிகன் – ஆமாம்; அவ்வளவேதான்!

*

"அண்ணா.... அண்ணா....!"

சிந்தனைத் தொடர் இற்றுப் போயிற்று. திரும்பிப் பார்த்தேன்.

"என்னண்ணா, ஊருக்குப் புதிசோ...?"–வயோதிகத்தின் பாவமும் இளமையின் குரலும் இணைந்து வந்து என்னைத் திடுக்கிட வைத்தது. என் எதிரில் நின்றது ஓர் இளைஞன்.

எலுமிச்சை நிறம்; கட்டான உடல்; கலைந்து கிடந்த தலை; அழுக்கின் சுமையும், ஆற்று நீரும் படிந்து காவியாக்கி விட்டிருந்த வெள்ளையுடை; கண்களைச் சுற்றிக் கன்னத்தில் கருமை வட்டமிட்டிருந்தது; மாறாத ஏதோ ஓர் ஏக்கத்தின் முத்திரை – அடையாளச் சின்னம்.

போட்டிக் கதை :

உள்ளமும் உருவமும்

டி. எஸ். வேங்கடரமணி

''ஆம்....'' – சுருக்கமாகப் பதிலளித்தேன் நான். யார் இவன்?

விடை கிடைத்தது. ''பார்த்தாலே தெரிந்தது. இந்த ஊர்க்காரா அத்தனை பேரும் பொல்லாதவா. சின்ன வாண்டுப் பயலிலேருந்து வயதான தாத்தா வரைலே 'கோபு' 'கோபு'ன்னு என்னைக் கேலி செய்யாட்டா பொழுதே போகாது!'' – கோபு விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டான். கோபு அரைக் கிறுக்கென்று தெரிந்து கொண்டேன். அவனைச் சமாதானப் படுத்தி வீட்டுக்கு அனுப்புவதற்குள் பெரும் பாடாகிவிட்டது. கோபு குழந்தை; உருவமும் பருவமும் வளர்ச்சி பெற்றுவிட்டனவே யொழிய, உள்ளம் வளராத குழந்தை.

*

'உன்னதமான தொழில்' என்று சொல்கிறார்களே உபாத்திமைத் தொழிலை, அந்தத் தொழிலாளி தான் நானும். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ச் சிறப்பு இளங்கலைஞனாகப் பட்டம் பெற்றதும், குடந்தை அரசினர் கல்லூரி என்னைத் தமிழாசிரியனாக ஏற்றது. தெய்வ மணம் கமழும் சுவாமிமலையின் கிராமீயச் சூழ்நிலைகளில் இன்பம் அனுபவித்துக் கொண்டு, தினமும் குடந்தைக் கல்லூரிக்கு பஸ்ஸில் சென்று வந்தேன்; கும்பகோணத்துக்கும் சுவாமிமலைக்கும் அதிகத் தூரமில்லை; இயற்கையின் இங்கித எழிலும், 'சூரன் உடலற வாவி சுவரிடச் சுவாமி மலை தனில்' உறையும் கார்த்திகை பாலனின் ஆலயமும் மட்டுமல்ல, என்னை அங்கு வசிக்க வைத்த காரணம். என் ஒன்று விட்ட அத்தை ஒருத்தியும் அவ்வூரில் இருந்தாள்.

*

கோபு என் நண்பனாகி விட்டான். முறுவலிக்கும் அந்தமிகு முகமும் சோகத்தின் சாயை படிந்த ஆழப் பெரு விழிகளும் எனக்கு அவனிடம் அழியாத பாசத்தையும் பரிதாபத்தையும் ஏற்படுத்தி வைத்து விட்டன. என் வீட்டுக்குச் சில வீடுகள் தள்ளித்தான் அவன் இருக்கும் இடமும். தினம் காலையும் மாலையும் அவன் என்னோடு பேசி – இல்லை – பிதற்றி விட்டுப் போகா விட்டால், எனக்கு நாள் நிறைவுற்றது போலவே தோன்றுது. அவனுக்கும் அப்படித்தான் போலும்!

கோபு கிறுக்கு–பிறவிக் கிறுக்கு. செய்திகளைப் புரிந்து கொள்ளத் தெரியும்; ஓரளவு வெளியிடவும் தெரியும்; ஆனாலும் அவனுடைய உள்ளம் குழந்தை உள்ளம்போல. ஏதேனும் கற்பனைகள், நடக்க முடியாத கனவுக் காட்சிகள் தோன்றிக் கொண்டேயிருக்கும். அவற்றை வாய் விட்டு எதிரில் காண்பவரிடம் வெளிப் படுத்திக் கொண்டிருக்க வேண்டும். இது அவனுடைய போக்கு, விசித்திர மான போக்கு. உலகத்துக்குப் புரியாத, புரிந்து கொள்ள முடியாத சுபாவம். இதயவெளி நிகழ்ச்சிகளை வாய்விட்டுக் கூடக் கூற முடியாத அந்தச் சின்னஞ் சிறு அறியாப் பருவத்திலேயே அவனது தந்தை அவனை விட்டுச் சென்று விட்டார். அவர்களது சொந்த ஊர், திருச்சி ஜில்லாவில் மணக்கால் என்னும் சிறு கிராமம். வேலை தேடி வந்த கோபுவின் அண்ணன் ராமு, சுவாமிமலையில் சுமாரான வேலையொன்று கிடைக்கவே அங்கேயே தங்கி விட்டான். மகன் கோபுவைப் பற்றி அஸ்திவாரமற்ற ஆகாயக் கோட்டைகள் கட்டி வந்த அவன் அருமை அன்னை அந்தக் கற்பனைகளோடு கற்பனையாய்ச் சமாதி அடைந்து விட்டாள். தம்பி கோபு, அண்ணன் ஆதரவை நாடிச் சுவாமி மலைக்கே வந்து விட்டான்; ஒரு மாதமாக ஒரு சிறு ஹோட்டலில் வேலைக்கு இருக்கிறான்.

*

கல்லூரியிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தேன்.

''டேய், கோபு! ராஜி என்னடா சொல்று?'' –எதிர் வீட்டுப் பெண் மாலதியின் குரல்தான் இது.

"போடீ, அவ ஒண்ணும் உன்னைப் போலக் கெட்டவ இல்லே; எப்பவும் சிரிச்சிண்டே இருப்பா. நீதான் சிடுமூஞ்சி; அழுமூஞ்சி; வெவ்வெவ்வே!"—கோபு.

"அம்மா, இந்தக் கிறுக்கனைப் பாரும்மா; நான் சிடுமூஞ்சியாம்; போடா, நீதான்........!" அடிக்கக் கையை ஓங்கினாள் மாலதி.

"ஏய் கோபு, என்னப்பா தகராறு.... ....?" என்று விசாரித்துக் கொண்டே நான் சென்றதும், வாலைக் குழைத்து வரும் நாய் போல ஓடிவந்து விட்டான் கோபு. என்னிடம் அவனுக்கு அவ்வளவு பாசம்; பற்று; மரியாதை.

"ஒண்ணுமில்லே, எங்க ராஜியை அவ பழிக்கிறா....!"

"யாருடா அந்த ராஜி....?"

"அவதான் ஊரிலே இருக்கா, மணக்காலிலே. எம்மேலே அவளுக்குக் கொள்ளை ஆசை.... அண்ணா....!"

"அட, இதிலே காதல் வேறேயா....?"

"போங்கண்ணா, நீங்களும் பழிப்புக் காட்டறேள்; அப்புறம் உங்களோட நான் பேச வரவே மாட்டேன்.... ஊ....ம்..."

"டேய், டேய்.... கோபமா? விளையாட்டுக்கல்லவா கேட்டேன்? இன்னும் சொல்லு..."

"எப்போப் பார்த்தாலும் சிரிச்சிண்டேதான் இருப்பா; செக்கச் செவேர்னு இருப்பா அண்ணா. அவ கிட்டப் பேசினா எனக்குப் போது போறதே தெரியாது; அம்மா கூடத் திட்டுவா, எப்பப் பார்த்தாலும் என்ன பேச்சின்னு....!"

"அவ யார் வீட்டுப் பொண்ணு? உனக்கு ஏதும் சொந்தமா...?"

அசடு வழிய விழித்தான் கோபு.

*

சில நாட்களுக்குப் பிறகு, கோபு வந்தான். அவனது முகத்

தில் மகிழ்ச்சி தாண்டவமாடிற்று. ஏதோ ஒரு நிம்மதி!

''கடைக்கு வரமாட்டேன்னு சொல்லிட்டேன் அண்ணு! அஞ்சு ரூபா கொடுத்துட்டு நாள் பூரா 'சட்னி அறை' ன்னு என்னையே சட்னி அறைக்கப் பார்த்தான்.... நானு ஏமாந்த அசடு?...எப்படி?''

''திடீரென்று இன்னிக்கு என்னடா வந்தது....?''

''ராஜிக்கு அனுப்பக் காசு கொடு'ன்னு கேட்டேன். 'போடா, கிறுக்கா' என்று கண்டபடி திட்டினுன். கையிலே தோசை இருந்துச்சு, அதை அவன் முகரையிலேயே தூக்கி எறிஞ்சுட்டேன்....!'' —சாவதானமாகக் கூறி விட்டுக் குழந்தைச் சிரிப்புச் சிரித்தான் கோபு.

''ஏண்டா, இந்த மாசப் பணம் வாங்கிக் கொள்ளவில்லையா...?''

''காசா? எனக்கா? எதுக்கு? ராஜியைப் பார்க்காத வரைக்கும் எனக்குக் காசு வேண்டாம். அவளைப் பார்க்காமலேயே நான் செத்துப்போயிட்டா, என்னண்ணு செய்வா அவ....? அவளைப் போலத் தங்கமானவ இந்த உலகத்திலேயே கிடையாது. எதுக்கும் வாயையே திறக்கமாட்டா.... பாவம் ராஜி....!''

அவன் கண்களில் நீர் முட்டி நின்றது.

''போடா, அசடு! எதுக்கு அழறே? அவளைப் பார்க்கலாம்டா சீக்கிரம்....!''

உண்மையில், காரணம் புரியாமல், என்னுடைய இரண்டு கண்களும் ஏனே முத்தார்த்தன.

*

வேலையை விட்ட பிறகு கோபுவின் வருகை அதிகமாகியது. வரவர எனக்குக் கொஞ்சம் சலிப்பூட்டக்கூடத் தொடங்கிற்று; அவன் கண்ணில் படாமல் ஒளிந்து கொள்ள ஆரம்பித்தேன் நான்.

ஒரு நாள். எங்கள் கல்லூரிக்கு நேரமாகி விட்டதென்று நான் அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருந்தேன். கோபு வந்தான்.

''அண்ணு!''

''வந்துட்டியா....? காலேஜுக்கு நாழியாகிறது. அப்புறம் பார்ப்போம், போ...!''

கோபுவின் கண்களிலிருந்து பொலபொல வென்று நீர் வழிந்தது. 'திட்டாதீங்கண்ணு; இனிமே நான் வரலே; உங்களுக்கும் கூட என்னைக் கண்டாப் பிடிக்கல்லியா?''

''இல்லே, கோபு; அழாதே; காலேஜுக்கு ரொம்ப நாழியாகி விட்டது. இன்னிக்கு காலேஜைப் பார்க்க ஒரு 'கமிஷன்' வருது — உங்க ஓட்டலைப் பார்க்கச் சுகாதார அதிகாரி வருவாரோன்னே, அது போல. சீக்கிரம் போகணும். சாயங்காலம் வாயேன்....!''

சாயங்காலம் கோபு தயங்கித் தயங்கி உள்ளே வந்தான். ''வா கோபு, உட்கார்; காலையில் காலேஜுக்கு ரொம்ப நாழியாகி விட்டது; அதனுல்தான் பேச முடியவில்லே!''

''இன்று காலே எங்கண்ணு அடிச்சிட்டா; உங்ககிட்டச் சொல்லலாம்னு வந்தா, நீங்களும் திட்டினேள்!'' — கண்கள் மடை திறந்தாற்போல் நீரைப் பொழிந்தன. கட்டான உடலுக்குள் இருந்த அவன் மெல்லிய இதயம் எனக்குப் புலனுயிற்று. அன்புக்காக ஏங்குகிறது அந்த உள்ளம்; அன்னையையும் தந்தையையும் ஆசை ராஜியையும் விட்டுப் பிரிந்திருக்கும் அவனுக்கு என் அன்பு ஓர் ஔஷதம். பாவம்...!

கோபு நல்லவன்: அவனது வெள்ளை உள்ளம், மிருதுவான இதயம், இந்தக் கபட உலகுக்கு ஒத்து வரவில்லே. அவனது கோளாறல்ல: சூதும் வாதும் நிறைந்து விட்ட இந்த வஞ்சக உலகின் தவருன போக்கு.

"அழாதே, கோபு. ஏன் அடித்தான் உங்கண்ணு? நீ அவனைத் தொந்தரவு செய்தியா?''

"இல்லேண்ணு: அவனுக்கு வர வர என்னைக் கண்டாலே பிடிக்கல்லே. யாரும் வீட்டுக்கு வந்தால் நான் வெளியே போயிடணுமாம். அவனேடே எங்கும் வெளியிலே போகக் கூடாதாம் ....!''

"சரி, போகாமல் இருந்து விடேன். அதற்கென்ன வந்தது?''

"அப்புறம்... 'நீ வாயைத் திறந்து வளவள வென்று பேசக் கூடாது. 'ராஜி ராஜி' என்று பேத்திக்கொண்டிருக்கக் கூடாது' என்கிறுன். ராஜியைப்பத்தி நினைக்காம எப்படியண்ணு இருக்கட்டும்? பேசாமலிருக்க நானென்ன ஊமையா, ஏண்ணு ....?''

*

வழக்கம்போல, கோபுவின் கூட்டுறவில் நாட்கள் சில கழிந்தன. தினம் தினம் ராஜியைப் பற்றின பேச்சுத்தான். அடிக்கடி அண்ணனைப் பற்றிய புகாரும் உண்டு.

"ராஜி ஜோராய் இருப்பளே! ஆற்று மணல் ஒழுக்குப் போலத் தலைமயிர். கண்ணு ரெண்டுமே அவளுக்குப் பெரிசு; சமுத்திரம் மாதிரி வாய்.... குந்துமணி போல ஷோக்கா யிருக்கும்...!''

"கோபு, நீ கவிஞுய்ப் பிறந்திருக்க வேண்டியவண்டா!''

உண்மையில் இதயத்தின் அடித்தளத்தில் கோபுவுக்குள்ளே பெரிய கவிஞன் ஒருவன்

புதைந்து கிடக்கிறுன் என்று பட்டது எனக்கு. 'கிறுக்கர்களும் கவிஞர்களும் தனி ரகம்; அவர்கள், இதயத்தின் தனிமையில், தாமே அமைத்துக்கொண்ட தனிமையான உலகில் வாழ்கிறுர்கள்!'

*

அன்று இரவு. தடதடவென்று கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. வாசலிலே கோபு நின்றிருந்தான், பரிச்சயமாகி விட்ட அழுகையுடன். பரிதாபமாக இருந்தது.

"என்ன கோபு விஷயம்?"

"வீட்டுக்கு இனி வராதேன்னு அண்ணு துரத்திட்டான்...."

திடுக்கிட்டேன். "கோபு, வா என்னுடன். அண்ணுவிடம் போவோம்!"

"ஊஹூம், வேண்டாம். என்னை மணக்காலில் விட்டுடுங்கோ...! இனிமே பார்த்தா அவன் அடிப்பான். சாயங்காலம் அவன் வரதுக்குள்ளே மணக்கால்லே என்னை ராஜி கிட்டக் கொண்டு விட்டுடுங்க, அண்ணு...!"

அவனுடைய நிலே, மிட்டாய்க்காக அடம்பிடித்து அழும் சிறுவனை நினைவூட்டியது. தெரு முழுதுமே இது வினேதமாகத்தான் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், வீட்டு வாசலில் நின்று வேடிக்கை பார்க்க இதில் என்ன இருக்கிறது? இந்தக் கிறுக்குடன் மாரடிக்கும் என்னைக்கூட அவர்கள் 'ஸெமி' என்று நினைத்திருந்தால் ஆச்சரியப் படுவதற்கில்லே.

"சரி கோபு. நீபோனு ராஜி உன்னை வரவேற்பாளா? அவள் எந்த வீட்டில் இருக்கா? அவ அப்பா அம்மாவெல்லாம்...."

"போங்கண்ணு, உங்களுக்கு எல்லாம் யோசனைதான். எங்க வீட்டிலே எனக்காகத்தான் ராஜி இருக்கா. என்னைப் போலத் தாண்ணு அவளும்.... தனியாகத் தான் இருப்பா; ஒருத்தருக்கும் அவளைக் கண்டாப் பிடிக்காது!"

"சரி கிளம்பு கோபு, மணக்காலுக்குப் போகலாம்."—ஏதோ ஒரு வேகத்தில் கூறினேன் நான். கோபுவுக்கு என் உறுதியான தொனி ஆச்சரியத்தை அளித்தது என்பதை அவனது அகல விரிந்த கண்கள் அறிவித்தன.

*

ரயில் லால்குடியை நெருங்க நெருங்க கோபுவின் முகத்தில் புதுக் களேயும் தென்பும் தோன்றின. லால்குடியில் இறங்கியதும் நான் பின்னுல் வருவதைக் கூட மறந்து, அவன் வேகமாக முன்னேறினுன்.

மணக்கால் அக்கிரஹாரம் வந்தது. ஒப்புக் கொள்கிறேன்; அவன் வேகத்துக்குச் சரியாகப் போக நான் ஓடத்தான் வேண்டியிருந்தது. ஊரில் குறைந்தது ஐம்பது ஜோடிக் கண்கள் இருக்கும், எங்களை விசித்திரமாக நோக்கின.

"அதோ ராஜி!" என்று ஆனந்தம் பொங்கக் கத்தினுன் கோபு. அவன் காட்டிய இடம் ஒரு குட்டி மாளிகை; பெரிய வீடு. பூட்டிக் கிடந்த அந்த வீட்டில் திறந்து கிடந்த ஜன்னல் வழியே நோக்கினேன் — "ராஜி" என்று கோபு ஆசையுடன் சுட்டிக் காட்டியது என்ன தெரியுமா? — அழகாகச் சேலே கட்டிச் சிங்காரித்து விடப் பட்டிருந்த சின்னஞ்சிறு பிளாஸ்டிக் பொம்மை!

உருவமும் பருவமும் வளர்ந்து விட்டனவேயொழிய, உள்ளம் வளராத குழந்தை என்று கோபுவைச் சொன்னேன். ஆனுல், சின்னஞ்சிறு பிளாஸ்டிக் பொம்மையிலே கூட அன்பைக் காணும் அவன் மனப்பாங்கைக் கண்ட பிறகு, உண்மையிலேயே உள்ளம் வளராதது கோபுவுக்குத்தானு என்று குழம்புகின்றேன். ★

197668

அத்தியாயம் – 5

விதி வழியே

குத்தாலிங்கம் பிள்ளையும் சொக்கையாப் பிள்ளையும் 'கு'ளு விலாசம் உண்டியல் கடையிலிருந்து புறப்பட்டபோது, பகல் ஒரு மணி இருக்கும். மழை மேகங்கள் குவிந்து மேற்கே சாரல் கட்டியிருந்தாலும், வெயில் ஒரு பக்கம் கொளுத்திக் கொண்டுதான் இருந்தது. அதிலும் அன்றைய வெயில் கோடைகாலத்து வெயிலைத் தோற்கடித்து விடும் போலிருந்தது. காலில் மிதியடியை மாட்டிக் கொண்டு, மேல்துண்டை மடித்துத் தலையில் போட்டுக்கொண்டு, மச்சினர் பின் தொடர, 'பஜார்' வழியாக மேற்கு நோக்கி நடந்தார் குத்தாலிங்கம் பிள்ளை.

'கு'ளு விலாசம் உண்டியல் கடை சுவாமி சந்நிதித் தெருவில் இருந்தது. "சுவாமி சந்நிதித் தெருவா? அது எங்கே இருக்கிறது?" என்று கேட்கிறீர்களா? ஆம், நம் கதை நான்கு அத்தியாயங்களைத் தாண்டிவிட்டும், அது நிகழ்ந்த ஊரைப் பற்றி எதுவும் சொல்லவில்லை அல்லவா? இதோ சொல்லி விடுகிறேன்:

திருநெல்வேலி ஜில்லாவில் தென்காசி இருக்கிறது. அது ஒரு தாலுக்கா 'ஹெட் குவாட்டர்ஸ்'. பிரசித்திபெற்ற குற்றாலம் நீர் வீழ்ச்சிக்கு மூன்றரை மைல் வட கிழக்கே இருக்கிறது. ஒரு காலத்தில் இங்கே பாண்டிய மன்னர்கள் அரசாண்டனராம். வடக்கே இருக்கும் காசிக்கு இணையாக இத்தென் காசியிலும் ஒரு விசுவநாதர் ஆலயம் இருக்கிறது. தென்காசிக்குப் போயிருப்பவர்கள், இந்த ஆலயத்தைப் பார்த்திருந்தாலும், பாரா விட்டாலும், அதன் மொட்டைக் கோபுரம் மாத்திரம் அவர்கள் பார்வைக்குத் தப்பியிருக்க முடியாது. ஏனென்றால், உச்சியில் கலசமும், இரண்டு பக்கங்களில் சுவரும் இல்லாமல் இருந்தாலும், சுமார் முன்னூறு அடி உயரத்துக்கு நிமிர்ந்து

நிற்கும் இந்த மொட்டைக் கோபுரம், ஊருக்குச் சில மைல்கள் அப்பால் வரும்போதே யாவரையும் நல்வரவு கூறி வரவேற்றுவிடும்.

தென்காசியின் உருவப்படத்தை வரைவது மிகவும் எளிது. நீண்ட வடிவமுள்ள கிளிமூக்கு மாம்பழம் ஒன்றின் படத்தை எழுதிவிட்டால் அதுதான் தென்காசி டவுனின் உருவப் படம். ஊரின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லைக்கோடாக, திருவனந்தபுரம் – திருநெல்வேலி ரெயில் பாதை போகிறது. அதே போல் மேற்கு எல்லையாக, சிவகிரி–குற்ருலம் ராஜபாட்டையும், தெற்கு எல்லையாக குற்ருல மலையில் உற்பத்தியாகித் தாம்பிரபரணி நதியுடன் கலக்க விரைந்தோடி வரும் சித்ரா நதியும் விளங்குகின்றன.

ஊரின் வடமேற்கு மூலையில் ரெயில்வே ஸ்டேஷன். ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சற்று மேற்கே, சுமார் ஒரு பர்லாங் இடைவெளி விட்டு, தெற்கு வடக்காக இரண்டு கற்குன்றுகள் நிற்கின்றன. இவற்றை இடைமலை என்பார்கள். இந்த மலைகளைக் கிழக்கு மேற்குக் கரைகளாகக் கொண்டு ஒரு மானுமாரிக் குளம் இருக்கிறது. இது தான் இடைமலைக் குளம்.

ரெயில்வே ஸ்டேஷனுக்குக் கீழ்புறம் தெலுங்கு பேசும் நாயுடு வகுப்பார் வசிக்கின்றனர். இவர்களைப் பாளையத்தார் என்றும், இவர்கள் வசிக்கும் பகுதியைப் பாளையம் என்றும் வழங்குவார்கள். பாளையத்தைத் தாண்டி ஊரின் கிழக்கு எல்லை வரையிலும், துலுக்கத் தெருக்கள்.

தென்காசி ரெயில்வே ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் இடையே சுமார் ஒரு மைல் தூரம் இருக்கும். முப்பது வருஷங்களுக்கு முன்பு, அதாவது நமது கதை நடந்த காலத்தில், ஊரும் ரெயில்வே ஸ்டேஷனும் துண்டு துண்டாக இருந்தன. இப்பொழுது இடைவெளியெல்லாம் வீடுகளும் கடைவீதிகளும் தோன்றி, ரெயில்வே ஸ்டேஷனை ஊருடன் இணைத்து விட்டன.

தென்காசியின் தாலுக்காக் கச்சேரி, மாஜிஸ்டிரேட் கோர்ட், போலீஸ் ஸ்டேஷன், கஜானு, ஸப்-ரிஜிஸ்த்ரார் ஆபீஸ் முதலியவை ஸ்டேஷன் வட்டாரத்திலே இருக்கின்றன.

ஸ்டேஷனிலிருந்து தெற்கு நோக்கி, ஊரின் மேற்கு எல்லையாகச் செல்லும் சிவகிரி–குற்ருலம் ரஸ்தா, நம் கதையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கரன் கோவிலை அடைந்ததும், இரு கிளைகளாகப் பிரிகிறது. ஒரு கிளை மேற்கே திரும்பி ஆனைப்பாலம் வழியாகக் குற்ருலம் செல்கிறது. மற்றொரு கிளை கிழக்கே திரும்பி, தெற்கு எல்லையான சித்ரா நதியை ஒட்டி, திருநெல்வேலி செல்லும் ராஜபாட்டையாக விளங்குகிறது. இந்தத் தென்காசி – திருநெல்வேலி ராஜபாட்டை, ஊரின் மேற்கு எல்லையிலிருந்து கிழக்கு எல்லை வரையில், ஒன்றன் கீழ் ஒன்ருக அடுக்கப்பட்ட பல 'ட'ன எழுத்துக்களைப் போல் வளைந்து வளைந்து செல்லுகிறது. இந்த வளைவுகளின் ஒவ்வொரு நேர்க்கோட்டிலும் ஒவ்வொரு தெரு இருக்கிறது. இவற்றில் முதலில் இருப்பது மட்டப்பாத் தெரு என்றும், கடைசியில் இருப்பது அணைக்கரைத் தெரு என்றும் அழைக்கப்படும். அணைக்கரைத் தெருவிற்குக் கிழக்கே, ஊரின் கிழக்கு எல்லையிலிருக்கும் பகுதிக்குக் கீழப்பாளையம் என்று பெயர்.

இதுவரையில் ஊரின் நான்கு எல்லைப் பிராந்தியங்களையும் பார்த்தோம். இனி, இந்த எல்லைப் பிராந்தியங்களுக்கு உள்ளடங்கிய பகுதிகளைப் பார்க்கலாம்.

மேற்கு எல்லையிலிருந்து ஆரம்பிப்போம். முதலில் சித்ரா நதியிலிருக்கும் ஆனைப்பாலத்துப் படித்துறை. பிறகு சங்கரன் கோவில். அதன் பிறகு, நாற்புறங்களிலும் நீண்ட ரதவீதிகளைக் கொண்ட

முன் கதைச் சுருக்கம்

குற்றால மலைச்சாரலில் உள்ள தென்காசியில் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு 'கு'னு விலாசம் உண்டியல்கடை மிகவும் பிரபலமாக இருந்தது. அதன் உரிமையாளர் குத்தாலிங்கம் பிள்ளை பெரிய செல்வந்தர். அவருடைய மனைவி அழகம்மை. அவர்களுக்கு இரண்டு ஆண் சந்ததிகள். மூத்தவன் நெல்லையப்பன்; இளையவன் திருமலை. அழகம்மைக் குத் தனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கவில்லையே என்ற ஏக்கம் நிறைய இருந்தது. ஆனால் அவளை இழுப்பு நோய் பிடித்து வாட்டி வந்ததால், பிள்ளைக்கும் அவளுக்கும் தாம்பத்திய உறவு மட்டுப்பட்டு, இனி தனக்குப் பெண் பாக்கியம் கிட்டாது என்ற உறுதி அழகம்மைக்கு ஏற்பட்டுவிட்டது.

குத்தாலிங்கம் பிள்ளையின் ஒரே அருமைச் சகோதரி கோமதி. அவள் கொக்கர் குளத்தில் சொக்கையாப்பிள்ளை என்பவருக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள். கோமதி நெடுங்காலமாக வயிறு திறக்காததால், அவளைத் தள்ளி வைத்துவிட்டு, மகனுக்கு வேறு மணம் முடித்து விட முயலுகிறார் சொக்கையாப்பிள்ளையின் தந்தை. இதனால் கலவரமடைந்த குத்தாலிங்கம் பிள்ளை தங்கச்சிக்குப் பிள்ளைப் பேறு கிட்டுமா என்பதை அறிய, பிரசித்திபெற்ற மேலகரம் சங்கர ஜோசியரிடம் செல்கிறார்.

ஜோசியர் என்ன சொன்னாரோ தெரியாது; குத்தாலிங்கம் பிள்ளை உற்சாகம் குன்றி வீடு திரும்பினார். இது நடந்த சில மாதங்களில் கோமதி கருத்தரித்து ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். ஆனால் குத்தாலிங்கம் பிள்ளைக்கு இதனால் மகிழ்ச்சி ஏற்படவில்லை. அழகம்மைக்குத் தன் கணவரின் விசித்திரப் போக்கு பிடிபடவில்லை. தங்கையின் வயிற்றில் புழு–பூச்சி உண்டாகாதா என்று ஏங்கிக் கொண்டிருந்த அவர், கோமதிக்கு மகள் பிறந்ததைக் கேட்டு விசனமடைந்திருப்பதைக் கண்டு அதன் காரணத்தை அறிய விழைகிறாள். ஆனால் குத்தாலிங்கம் பிள்ளை, சமயம் வந்தால்தான் அதைச் சொல்ல முடியும் என்று மழுப்பி விடுகிறார்.

மகளைப் பார்த்துப் போகக் கொக்கர்குளத்திலிருந்து சொக்கையாப்பிள்ளை வந்தார். குழந்தைக்கு ஜாதகம் கணித்துக்கொண்டு வருவதற்காக, மைத்துனர் குத்தாலிங்கம் பிள்ளையை மேலகரம் சங்கர ஜோசியரிடம் வருமாறு அழைக்கிறார். இதைக் கேட்டு முதலில் திடுக்கிட்ட குத்தாலிங்கம் பிள்ளை, பின்னர் ஏதோ நிச்சயத்துக்கு வந்தவராக, ஜோசியரும் ஜாதகமும் சொல்லப் போவதைத் தாம் சொல்வதாக அறிவித்து, மாப்பிள்ளையை வெளியே கூட்டிச் செல்கிறார்.

கோமதியின் மகள் காந்திமதி வளர்ந்து மணப்பிராயத்தை அடைகிறாள். அவளை முறை மாப்பிள்ளையான குத்தாலிங்கம் பிள்ளையின் மூத்த மகன் நெல்லையப்பனுக்கு மணம் செய்யப் போவதாகவே எல்லோரும் நினைத்திருந்தனர். ஆனால் அப்படி நடக்கப் போவதில்லையென்று தன் தாயாரும் நெல்லையப்பனும் அறிவித்துவிட்டதாக காந்திமதி ஒரு நாள் சவுந்திரத்தாச்சி என்ற தன் தெருக்கிழவி ஒருத்தியிடம் சொல்லி வருந்துகிறாள்.

சவுந்திரத்தாச்சி, தென் காசியிலுள்ள ஆனைப்பாலத்துப் படித்துறையில் இதைப் பறை சாற்றுகிறாள். "ஏன் அப்படி?" என்று அங்கு கூடியிருந்த பெண்டிர் அனைவரும் ஆச்சரியத்துடன் வினவியபோது, சவுந்திரத்தாச்சி சும்மாவானும், நெல்லையப்பனுக்குக் காக்காய் வலிப்பு நோய் உண்டு என்று அடித்து விடுகிறாள்.

அதே சமயம், அடுத்திருந்த ஆண்கள் படித்துறையில் பெரிய பரபரப்பு ஏற்படுகிறது. என்னவென்று எட்டிப் பார்த்த பெண்டிர் சிலர், நெல்லையப்பன் காக்காய் வலிப்பு வந்து மயங்கி விழுந்துவிட்டதாக அறிவித்ததைக் கேட்டு சவுந்திரத்தாச்சி திகைத்துவிடுகிறாள்.

விசுவநாதர் ஆலயம் கிழக்கு நோக்கிப் பிரும்மாண்டமாக நிற்கிறது. ஆலயத்தின் நான்கு ரத வீதிகளையும் முறையே மேற்கு மாசித்தெரு, வடக்கு மாசித்தெரு, கிழக்கு மாசித் தெரு, தெற்கு மாசித்தெரு என்று குறிப்பிடுவார்கள். இவற்றுள் வடக்கு மாசித் தெருவில்தான் நம் குத்தாலிங்கம் பிள்ளையின் காரை வீடு இருக்கிறது.

விசுவநாதர் ஆலயம் இரு பகுதிகளை உடையது. வட பகுதியில் இருப்பது சுவாமி கோவில். தென்

பகுதியில் இருப்பது அம்மன் உலகம்மையின் கோவில். ஒவ்வொரு கோவிலுக்கும் எதிராகக் கிழக்கு நோக்கி ஒரு தெரு போகிறது. இவை முறையே சுவாமி சந்நிதித் தெரு என்றும், அம்மன் சந்நிதித் தெரு என்றும் பெயர் பெறும். சுவாமி சந்நிதித் தெருவின் ஆரம்பத்தில் ஒரு மண்டபம். அதற்கு அனுப்பு மண்டபம் என்று பெயர். சுவாமி சந்நிதித் தெருவின் ஆரம்பத்தில் அதன் வடபுறம் தெப்பக் குளம் இருக்கிறது. இதையொட்டி தெப்பக்குளத் தெரு போன்ற சில தெருக்கள் உள்ளன.

சுவாமி சந்நிதித் தெருஊரின் கீழக் கோடி வரையில் நீண்டு செல்லும் பெரிய தெரு....! இதன் இரு பக்கங்களிலும், குறுக்கும் நெடுக்குமாகப் பல தெருக்கள் உள்ளன. ஆனல் தென்காசியிலுள்ள தெருக்கள் எல்லாவற்றிலும் பெரிதும், முக்கியமானதும் சுவாமி சந்நிதித் தெருத்தான். இது சுமார் ஒரு மைல் நீளமுள்ளது. ஊரின் முக்கிய கடை வீதியாக விளங்குவதும் இத் தெருவே. இந்தத் தெருவின் மையத்திலிருந்த 'கு'னு விலாசம் உண்டியல் கடையிலிருந்துதான், அப்பொழுது குத்தாலிங்கம் பிள்ளையும், சொக்கையாப் பிள்ளையும் வெளிப்பட்டு நடந்து கொண்டிருந்தனர்.

குத்தாலிங்கம் பிள்ளையின் நடை தளர்ந்திருந்தது. வெளியே தகித்த வெயிலுக்குப் பாதுகாப்பாகக் காலில் மிதியடியும், தலையில் துணியும் கிடந்ததால் ஏற்பட்ட சாவகாச நடையல்ல அது. அவர் வேகத்தில் ஏதோ பேசிவிட்டார். எந்தச் செய்தியைத் தமது சொந்த மனைவிக்குக்கூடத் தேவை ஏற்படும் வரையில் வெளியிடக் கூடாது என்ற திட சித்தத்துடன் இருந்தாரோ, அந்தச் செய்தியை, அதனல் முக்கியமாகப் பாதிக்கப் படப்போகும் மச்சினரிடம் அறிவிக்க வேண்டிய நிலையை இப்பொழுது அவர் உண்டாக்கிக் கொண்டு விட்டார். 'நாம சொல்லாட்டிப் போனு, எல்லாத்தியும்



சேத்து சோசியம் பாக்கிறவக சொல்லிடத்தான் போறாக' என்று மனசைத் தேற்றிக்கொண்டாலும், அதை எப்படிச் சொல்வது என்ற தயக்கமும், சொன்னால் ஏதாவது விபரீதமாக நடந்துவிடுமோ என்ற கலக்கமும், அவருடைய நடையைத் தளரச் செய்திருந்தன.

சுவாமி சந்நிதித்தெருவிலிருந்து கிளம்பிய அவர்கள், அதன் மேற்குக் கோடியான அனுப்பு மண்டபம் வரையில் வந்து விட்டனர். அனுப்பு மண்டபத்திலிருந்து கிழக்கு மாசித் தெரு வழியாக வடக்கு நோக்கிச் சென்று, பிறகு மேற்கே திரும்பி வடக்கு மாசித் தெருவிலிருக்கும் பிள்ளையவர்களின் வீட்டை அடையவேண்டும். கடையிலிருந்து புறப்பட்டபோது குத்தாலிங்கம் பிள்ளை, தாம் கூற வேண்டிய விஷயத்தை வீட்டுக்குப் போய்க் கூறிக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தார். ஆனால் பிறகு சிந்தித்ததில் அவ்விஷயத்தை வீட்டில் 'வைத்து, பேசினால் ஒருகால் தமது மனைவிக்கும், தங்கச்சிக்கும் அது எட்டிவிடக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டது. ஆகவே, அவர் வீட்டுக்குப்போகும் வழியில் செல்லாமல் தெற்கே திரும்பினார்.

"அங்கிட்டு எங்கனே போறீக?" என்று கேட்டார் சொக்கையாப் பிள்ளை. ஜோசியரிடம் போக வேண்டும் என்று சொன்னதும் குத்தாலிங்கம் பிள்ளைக்கு ஏற்பட்ட திகிலை சொக்கையாப் பிள்ளை கண்டு கொள்ளவில்லை. உண்மையிலேயே அவருக்கு உடல் நலமில்லை என்றுதான் எண்ணிக் கொண்டார். தவிர, "சோசியரும், சாதகமும் சொல்லப்போறதை நானே சொல்லிவிடுதேன்" என்று அவர் தம்மை வெளியே அழைத்து வந்ததைக்கூட, "தங்கச்சிக்குக் கொளந்தை பொறக்கணுமின்னு தவியாத் தவிச்சுக்கிட்டு இருந்தவுக; நேத்து கொளந்தை பொறந்த ஒடனே சோசியரிட்டே போயி, சாதகம்- கிதகமெல்லாம் கணிச்சுக்கிட்டு, பலன் கூட எளுதி வாங்கிக்கிட்டு வந்திருப்பாக; அதெ வீட்டிலே வச்சிருப்பாக போலிருக்குது; காட்டுதக்காகக் கூட்டிக்கிட்டுப்போறாக" என்று அவர் நினைத்துக் கொண்டார். ஆனால் ...., குத்தாலிங்கம் பிள்ளை



வீட்டு வழியில் செல்லாமல் தெற்கே திரும்பவே, சொக்கை யாப் பிள்ளைக்கு அவர் போக்கின் மர்மம் விளங்கவில்லை. ஆகையால் தான், ''அங்கிட்டு எங்கனே பேரறீக?'' என்ற கேள்வியை அவர் போட்டார்.

குத்தாலிங்கம் பிள்ளை இதற்கு நேரடியான பதில் அளிக்கவில்லை. ''சவத்துப்பய வெயிலு பேயா யில்லா அடிக்குது. அங்கனே வீட் டிலே ஒரே இறுக்கமால்லே இருக் கும். வாங்க, காத்தாட நம்ம அக் கரைத் தோப்புச் சாவடிலே போயி பேசிக்கிட்டிருக்கலாம்,'' என்று மழுப்பிவிட்டார்.

சொக்கையாப் பிள்ளைக்கு இப் பதில் திருப்தியை அளிக்கவில்லை என்றாலும், பேசாமல் மச்சின ரைப் பின்பற்றி நடந்தார். அவர் கள் கிழக்கு மாசித் தெரு வழியே தெற்கே சென்று, போஸ்டாபீஸ் முடுக்கில் நுழைந்து, முழங்கால் அளவு தண்ணீர் ஓடிக்கொண் டிருந்த சித்ரா நதியைக் கடந்து, அதன் தென்கரையில் இருந்த குத்தாலிங்கம் பிள்ளையின் தோப் பில் புகுந்தனர். தோப்புக்கு நடுவே, தென்னங் 'கிடுகு' (கீற்று) வேய்ந்த சாவடி ஒன்றிருந்தது. அறுவடைக் காலத்தில் குத்தா லிங்கம் பிள்ளை இத்தோப்பில் தான் 'களம்' வைத்துக்கொள்ளு வார். அச்சமயம் அவர் இருந்து கதிரடித்தல், பொலி தூற்றுதல் முதலியவற்றைக் 'கங்காணம்' (கண்காணிப்பு) செய்வதற்காக ஏற்பட்டது இந்தச் சாவடி. தளத் திலிருந்து மூன்று அடி உயரத்தில் நன்றாகக் காரை பூசிய திண்ணை கட்டப்பட்டிருந்தது. குத்தாலிங் கம் பிள்ளை, மேல் துண்டினால் சாவடித் திண்ணையிலிருந்த தூசைத் தட்டிவிட்டு, மச்சினரை உட்காரச் செய்து, தாமும் அமர்ந்து கொண்டார்.

வெளியே கொளுத்திய வெயி லுக்கு இத்தோப்பும், இதன் சாவ டியும் மிக இன்பமாக இருந்தன. ஆற்றோரமாயுள்ள நிழலடர்ந்த குளுமையான இடம் என்பதோ டல்லாமல், தோப்பைத் தாண்டிய தும், கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் வயல்வெளியாக இருந்த தால், காற்று ஜிலு-ஜிலு என்று வீசிற்று. அனல் கக்கும் அடுப்படி யிலிருந்து, ஐஸ் போன்ற 'ஏர்-கண்டிஷன்' செய்யப்பட்ட அறைக்கு வந்தால் எப்படி இருக் குமோ, அப்படி இருந்தது இந்த இடம். ஆனால், இந்த இதமான சூழ் நிலைக்குப் புறச்சூட்டைத் தணிக் கும் வல்லமைதான் இருந்ததே யன்றி, அகச்சூட்டைத் தணிக்கும் ஆற்றல் இருக்கவில்லையே!

திண்ணையில் உட்கார்ந்ததும், குத்தாலிங்கம் பிள்ளை தமது உள் ளத்து வெப்பத்தை வெளியேற்று வதேபோல் ஒரு பெருமூச்சு விட் டார்.

பெருமூச்சு! எதற்காக இப்பொ ழுது பெருமூச்சு? விஷயமறியாத சொக்கையாப் பிள்ளைக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒன்றன்பின் ஒன்றா கத் தொடர்ந்து கொண்டிருந்த குத்தாலிங்கம் பிள்ளையின் இந்த நடை விசித்திரங்கள் அவரிடம் ஓர் ஆவலையும், இனமறியாத பீதியை யும் கிளப்பிவிட்டன. ''அதென்ன, நீங்க சோசியரிட்டெ போக வேண்டாமின்னு சொல்லிட்டீக?'' என்று அவர் பேச்சை ஆரம்பித் தார்.

''ஆமா; வெட்டியா அங்கிட்டு ஏன் போகணும்? சவத்தை நான் தான் கேட்டுக்கிட்டு வந்திட் டேனே!'' என்றார் குத்தாலிங்கம் பிள்ளை.

''நானும் அப்பிடித்தான் நெனெச்சேன், நேத்தே நீங்க மேலகரத்துக்குப் போயிட்டு வந் திருப்பீகன்னு.''

''நேத்தில்லே மாப்பிளே; ஒரு வருசத்துக்கு முந்தியே எல்லா ளவையும் கேட்டுத் தெரிஞ்சுக் கிட்டு வந்திட்டேன். ஆயிரங் காலம் தவசிருந்து எங் கோமு பெத்திருக்கற புள்ளெ, நமக்கு சந் தோசத்தைத் தரப் பொறக்கலே, மாப்பிளே......'' — குத்தாலிங்கம் பிள்ளையின் கண்களில் நீர் ததும்

பிற்று. அவர் நெஞ்சிலிருந்து வார்த்தைகள் வெளிவராமல் தடையுற்றன.

"பெறகு...? அது அற்பாயிசிலே போயிடுமின்னு சொல்லிட்டாளா சோசியரு?" என்று திகிலுடன் கேட்டார் சொக்கையாப் பிள்ளை.

"அப்படிச் சொல்லிட்டாக்கூட, சவம் போனுப் போகட்டுமின்னு விட்டுத் தள்ளிப் போடலாமே; பொம்புளெப் புள்ளையாப் பொறந்துட்டு, பொம்புளெப் புள்ளைக்கு எது வேணுமோ, அந்தத் தாலிப் பாக்கியம் இல்லாம இருக்கப் போகுதாமே அது!"

சொக்கையாப்பிள்ளை இதை அறிந்ததும் எப்படித் திடுக்கிட்டிருப்பார் என்பதை விளக்கத் தேவையில்லை. அவர் ஜோசியத்தில் நம்பிக்கை உடையவர்தான். இருந்தாலும், ஜோசியர்கள் கூறும் ஒவ்வொன்றும் பலித்தே ஆக வேண்டுமா, என்ன? எத்தனையோ பிரசித்தி பெற்ற ஜோசியர்கள் கூறியிருந்த எவ்வளவோ பலன்கள் பலிக்காமல் போயிருந்ததை அவர் கண்கூடாகக் கண்டிருந்தார். அதுபோல் இதுவும் பலிக்காது என்று மனசைத் தேற்றிக்கொள்ளும்படி குத்தாலிங்கம் பிள்ளைக்கு அவர் ஆறுதல் கூறினர்.

ஆனுல், குத்தாலிங்கம் பிள்ளை உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, "ஆமா, நாங்கூட அப்பிடித்தான் நெனெச்சுக்கிட்டிருந்தேன், மாப்பிளே; ஆனு இப்பொம் அந்த நெனெப்பு காத்தாப் பறந்திடிச்சு!" என்று கூறினர்.

"அதென்ன அவ்வளவு தீர்மானமாச் சொல்லுதீக?"

"பின்னெ என்னவாம்? அவுக சொன்னது ஒண்ணெண்ணும் நடந்துக்கிட்டுத்தானே வந்திருக்குது?"

"அப்பிடீன்னு?"

"ஆமா மாப்பிளே; இன்னம் ரெண்டே மாசத்திலே நெனப்பில்லாம ஒங்க 'ஐயா' (தந்தை) 'செல்லாயிடுவாக'ன்னு (இறந்துவிடுவார்களென்று) சொன்னுக. எளுதி வச்சாப்பிலே அவுக அப்படியே செல்லாயிட்டாக. அவுக போனபெறகுதான்கோமு, பிள்ளை கொள்ளுமின்னு சொன்னுக. அதுவும் அப்பிடியேதான் நடந்திருக்குது. பொண் கொளந்தைதான் பொறக்கப் போகுதுன்னுக. பொண்ணுதான் பொறந்திருக்குது. இப்பிடி லயன் புடிச்சாப்பிலே ஒண்ணெண்ணும் நடந்துக்கிட்டு வந்திருக்குதே; அப்பொம் அதுபோலே, அவுக சொன்ன பாக்கி விசயங்களும் நடக்கத்தானே வேணும்?"

சொக்கையாப் பிள்ளைக்கு இதைக் கேட்டதும் மெய்யாகவே கலக்கம் ஏற்பட்டுவிட்டது. நெடுங்காலத்துக்குப் பிறகு பிறந்த தலைக் குழந்தை தாலிப் பாக்கியமில்லாமல், சிறு பிராயத்திலே 'அறுத்து' விட்டு மூலையில் உட்கார்ந்துகொள்ளப் போகிறது என்ற செய்தி எந்தத் தந்தைக்குத்தான் கலக்கத்தை அளிக்காது? அவர் கேட்டார்: "ஆமா, இதுக்கு ஏதேம் பரிகாரம்—கிரிகாரம் செய்திட்டாச் சரியாப் போயிடுமின்னு சொன்னுகளா?"

"பரிகாரமாவது, எளவாவது! அதுங் களுத்திலே தாலியே விளாதுன்னுட்டில்லா அடிச்சுச் சொல்லிட்டாக. எந்தப் பய அதெக் கட்டிக்கிடணுமின்னு வந்தாலும், அவன் பட்டுன்னு செல்லாயிடுவானுமில்லே?"

அடிமேல் அடி விழுந்தாற்போல் இருந்தது சொக்கையாப் பிள்ளைக்கு. இது வேறு சங்கடமா? அப்படியென்றுல் அவர் மகள் வாழ்நாள் முழுவதும் கன்னியாகவே இருக்க வேண்டியதுதானு?

மச்சினரும், மச்சினரும், துயரமும் சிந்தனையும் வாட்டச் சிறிது நேரம் மௌனமாக இருந்தனர். பின்னர் குத்தாலிங்கம் பிள்ளை மாப்பிள்ளையைத் தேற்றும் தோரணையில் பேசலானர்: "சவம்,

அப்பிடித்தான் இருக்கணுமின்னு அதுன் தலையிலே எளுதி வச்சிருந் துதுன்னு, நாம என்ன சங்கடப் பட்டு என்ன பெரயோசனம், மாப் பிளே? அறுதலியா வீட்லே இருக்குதெவிட, இந்த மட்டும் கன்னி களியாத பொண்ணுத் தானே இருக்கப் போகுது? இருந்தா இருந்திட்டுப் போகட் டும்.''

''அதென்ன அப்பிடிப் பேசிட் டீக? நாம, இருந்தா இருந்திட்டுப் போகட்டுமின்னு இருந்திட்டாலும், ஊர்க்காரங்க, பந்து சனங்க சும்மா இருப்பாகளா? மொறை மாப்பிள்ளையா ஒண்ணுக்கு ரெண்டு இருக்குதபோது, அவங்க ளுக்கு இதெ வீட்டுப்போட்டு வேறே பொண்ணெக் கட்டிக் கிட்டா சிரிப்பா சிரிச்சுப் போடு வாகளே!''

''அதுக்கு நாம என்ன செய்யு துங்கேன்? இதுன் தலையெளுத்து இப்பிடி இருக்குதே!''

''எனக்கு ஒண்ணு தோணுது; அப்பிடிச் செய்திட்டா என்ன?''

''என்ன செய்யணுமிங்கறீக?''

''நம்ம பயக, நெல்லைக்கும் திரு மலைக்கும் சாதகம் இருக்குதில்லே; அதுகளுக்குப் பொருந்தாத சாத கமா ஒண்ணெ இந்தப் புள்ளைக்கு எளுதச் சொல்லி வச்சுக்கிடு வோம். அப்பாலே, இது சமஞ்சு–சிமஞ்சு பெரியவளான பெறகு, சாதகம் பாக்குது போலே பாத்து, பொருந்தலேன்னு சொல்லிட லாம்!''

''அதுக்கென்ன, அப்பிடியே செய்துக்கிடுவோமே, ஆன, ஒண் ணில்லே மாப்பிளே, இப்பிடிச் செய்திருக்கோமிங்கற விசயம், நம்ம கோமுவுக்கோ, என் வீட்டுக் காரிக்கோ தெரிஞ்சுடக் கூடாது. தெரிஞ்சு போச்சின்னு, மூதிக இப்பொமிருந்தே அளுதுக்கிட் டிருக்கத் தொடங்கிடும்!''

''ஆமா, ஆமா; இது நம்ம ரெண்டு பேருக்குள்ளேதான் இருக் கணும். அப்பொம் இந்தச் சாதகத்

இவர்கள் வாழ்கிறார்கள்:

காந்தி பொன் மொழி

'உதயபாலா'

காந்தியடிகளும் கவியரசி சரோஜினி தேவியாரும் ஒரே சிறையில் தங்க நேர்ந்த பொழுது ஏற்பட்ட ஒரு வேடிக் கையான சம்பவம்.

ஒரு நாள் சரோஜினியம்மை யார், காந்தியடிகளிடம் ''நான் பல பிரசித்திப் பெற்ற பேச் சாளிகள், எழுத்தாளர்களின் வாக்கியங்களைக் கூறுவேன்; அவை யாருடையது என நீங் கள் கூறவேண்டும்'' என்றார். காந்தியடிகளும் ஒப்புக் கொள்ள, அம்மையார் பல் வேறு பொன்மொழிகளைக் கூறிக்கொண்டு வந்தார். காந்தி யடிகளும் பதிலளித்துக் கொண்டே வந்தார்.

'''கடவுள் ஏழைகளுக்கு ரொட்டி உருவத்தில் காட்சி யளிக்கிறார்' என்பதை யார் கூறியது?'' என சரோஜினி தேவியார் கேட்டபொழுது, காந்தியடிகள் வெகுநேரம் பதி லளிக்காமல் யோசித்தார்.

பிறகு புன்முறுவலுடன் கவி யரசி சொன்னார்: ''இதைக் கூறியவர் மோஹனதாஸ் கரம் சந்திர காந்தி என்பவர்!....''

துக்கு ஒருத்தரைப் புடிச்சு எழுதித் தரச் செய்திடணுமே?"

"அதுக்கென்ன? அதெல்லாம் நான் பார்த்துக்கிடுதேன்; நீங்க கவலைப் படாதிக. சதி, அப்பொம் நேரமாகுது; நாம வீட்டுக்குப் போவோமா? காப்பி–கீப்பி குடிச்சுப் போட்டு, நீங்க அஞ்சு மணி வண்டிக்குக் கௌக்கே போகுதுக்குச் சதியாயிருக்கும்," என்று எழுந்தார் குத்தாலிங்கம் பிள்ளை.

விதி என்று ஒன்று இருக்கிறது. அதன் உத்திரவுப்படிதான் மனிதரின் மதி வேலை செய்கிறது. 'மதியினால் விதியை வென்று விடலாம்' என்பதெல்லாம் வெறும் பேச்சுத்தான். இதோ, குத்தாலிங்கம் பிள்ளையையே எடுத்துக் கொள்ளுங்களேன். அவர் மேலகரம் ஜோசியரிடம் 'குறி' கேட்டதில் எவ்வளவோ விஷயங்களை அறிந்து கொண்டார். அவற்றில், அன்றைப் பிரச்னைக்குத் தேவையானதை மட்டுந்தான் தமது மச்சினரிடம் கூறினார். பாக்கியைக் கூறவில்லை; கூறத் துணிவுகொள்ளவில்லை. அவை, மச்சினருக்கு இன்னும் அதிகமான அதிர்ச்சியை அளிக்குமென்று சொல்லாமல் விட்டுவிட்டார். அதாவது, அவருடைய மதி, விதியின் பாதையில் தான் வேலை செய்தது. அவர் மாத்திரம் மேலகரம் ஜோசியர் கூறிய இதர விஷயங்களையும் சொல்லியிருந்தால், ஒருகால், சொக்கையாப் பிள்ளை எச்சரிக்கையடைந்து, அவை நடைபெறு முன்னணை கட்டிக் கொண்டிருப்பாரோ, என்னவோ ....?

அத்தியாயம் – 6

நெல்லையப்பா! நீ நல்ல பிள்ளையப்பா!

நெல்லையப்பனுக்குக் கையையும் காலையும் வெட்டி வெட்டி இழுத்தது. நிலை தவறி விழுந்ததில் மண்டையிலும் வலதுகால்

சிந்திக்க அல்ல – சிரிக்க:

கூண்டோடு கைலாசம்!

சி. பி. மைதிலி

குழந்தைகளின் தொந்தரவு பொறுக்கமுடியவில்லை; சுதர்சன் தன் அறைக்குப் போய்க் கதவைத் தாளிட்டுக் கொண்டார். எதிரொலி கேட்டது:

"இப்பொழுதே உங்களைக் கூண்டோடு கைலாசத்திற்கு அனுப்பாவிட்டால், என் பெயர் சுதர்சன் இல்லை.... ம்! எத்தனை நாட்களுக்கு உங்கள் அக்ரமத்தைப் பொறுத்துக்கொண்டு சும்மா யிருப்பது? இனிப் பொறுக்கவே மாட்டேன்."

தன் கணவர் ஆத்திரத்துடன் பேசிய பேச்சு சீதா, பாட்டி, குழந்தைகள் எல்லோரையும் பயங் கொள்ளச் செய்தது.

"கதவைத் திறங்க. யார் மீது உங்களுக்கு இவ்வளவு கோபம்? பயமாயிருக்கே!...." என்று கத்தினாள் சீதா.

"என்ன சீதா, பயந்துவிட்டாயா? மூட்டைப் பூச்சிகள் படுத்துகிற பாடு சகிக்கவில்லை. மண்ணெண்ணெயை ஒரு கிண்ணத்தில் வைத்துக் கொண்டு, மூட்டைபூச்சிகளை அதில் போட்டு விட்டேன். எல்லாம் கூண்டோடு கைலாசம் போய் விட்டன!" என்றார் சுதர்சன்.

'முட்டாஞ்சில்'லிலும் காயம் பட்டு ரத்தம் கசிந்தது. காலை நேரம் ஆதலால், ஆனைப்பாலத்துப் பெண்கள் படித்துறையைப் போலவே ஆண்கள் படித்துறையிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

அங்கு கூடியிருந்த அனைவருக்கும் நெல்லையப்பனைத் தெரியும். ஆனால் அவனுக்குக் காக்காய் வலிப்பு உண்டு என்பது அவர்களுக்கு இப்பொழுதுதான் தெரிய வந்தது. அவனையும் அவனுக்கு வந்துள்ள இந்தக் கொடிய வியாதியையும் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பேசிக் கொண்டனர்.

இடையே வேறு சிலர், கரையில் கொண்டு வந்து போடப்பட்ட நெல்லையப்பனின் கையில் இரும்புச் சாமான்களைக் கொடுப்பதும், அவனுடைய உள்ளங்காலைத் தேய்ப்பதும், 'ஈருள்ளி'யை (வெங்காயத்தை) நசுக்கி மூக்கருகில் பிடிப்பதுமாகச் சுசுருஷை செய்தனர். இவர்கள் செய்த சிகிச்சைகளினால் தானோ என்னவோ, சிறிது நேரத்தில் நெல்லையப்பனின் வலிப்பு நின்று விட்டது. ஆனாலும் அவனுக்கு நினைவு வரவில்லை.

நெல்லையப்பனோடு ஆற்றுக்கு வந்து, குளித்துக் கொண்டே ஆவலுடன் பேசிக்கொண்டு இருந்தவன் குமாரசாமி. குமாரசாமி நெல்லையப்பனின் வயதுடையவன் தான். அவனோடு படித்தவன். அவனுடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவன். தற்சமயம், தென்காசி முனிஸீப் கோர்ட்டில் குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தான். தினந்தோறும் காலையில் இவ்விருவரும் ஒன்றாக ஆற்றுக்கு வந்து, பல் விளக்கிக் குளித்துவிட்டுச் செல்லுவார்கள். நெல்லையப்பனின் அந்தரங்கங்களை அறிந்தவர்கள் எவராவது உண்டு என்றால், அது குமாரசாமிதான். இருந்தாலும், அவனுக்குக்கூட நெல்லையப்பனுக்கு வலிப்பு வரும் என்பது தெரியாது. குமாரசாமிக்கு மாத்திரம் என்ன? நெல்லையப்பனின் வீட்டுக்காரர்களுக்கே இது தெரியாதே! ஆம், அவனுக்கு வலிப்பு வந்திருப்பது இதுதான் முதல் தடவை.

குமாரசாமியைத் தவிர்த்து நெல்லையப்பனின் மனிதர் என்று சொல்லும்படியாக இன்னொருவரும் அச்சமயம் அதே படித்துறையில் ஒரு பக்கம் குளித்துக் கொண்டிருந்தார். அவரை மேலத்தெருச் செல்லம் பிள்ளை என்பார்கள். மேற்கு மாசித் தெருவைத்தான் சாதாரணமாக இதர மாசித் தெருவாசிகள் மேலத்தெரு என்று குறிப்பிடுவார்கள். செல்லம் பிள்ளை ஐம்பது வயதுக்கு மேலானவர். தலை தும்பையாக நரைத்து, பற்கள் விழுந்து, முகம் கிழடு தட்டிப் போயிருக்கும் அவருக்கு. அவர் பலகாலம் 'கு'ளு விலாசம் உண்டியல் கடையில் வசூல்காரராக வேலை பார்த்து வந்தவர். குத்தாலிங்கம் பிள்ளை காலத்திலிருந்து அவர் குடும்பத்தில் ஒருவர் போல் பழகிக் கொண்டிருப்பவர்.

இந்த மேலத்தெருச் செல்லம் பிள்ளையும், குமாரசாமியுந்தான், வழியே சென்ற ஒரு வாடகை வண்டியை நிறுத்தி, நினைவற்றுக் கிடந்த நெல்லையப்பனை அதில் தூக்கிப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு எடுத்துவந்தனர். வண்டியில் வந்து கொண்டிருந்தபோது அநுபவஸ்தரான செல்லம் பிள்ளை குமாரசாமியிடம், ''ஏலே ஐயா குமாரு! என்ன கருமமோ தெரியலே, குத்தாலிங்க அண்ணாச்சி மகனுக்கு இந்த வலிப்பு நோயி வந்திடிச்சு. இருந்தாலும், நம்ம வாயாலே இதெப் போயி அவன் வீட்டிலே சொல்லிக்கிட்டிருக்க வேண்டாம். சும்மா, மயங்கி விளுந்துட்டான்னு சொல்லு, போதும்!'' என்று எச்சரித்தார்.

''ஏன் பாட்டையா! நாம சொல்லாம இருந்துட்டோமின்னா, இவன் வீட்டுக்காரங்களுக்கு இது தெரியாமலா போயிடப் போகுது? நீங்க என்னமோ பேசுதீகளே?'' என்று விவாதித்தான் குமாரசாமி.

"ஏலே! அதுக்கில்லேலே. இது ஊரெல்லாம் தெரிஞ்சு போச் சின்னு இவனுக்கு எந்தப் பயலே பொண்ணைக் கொடுப்பான்?"

"ஆமா, ஒண்ணுக்குள்ளே ஒண்ணு, மொறைப் பொண்ணே இல்லேன்னு ஆயிடிச்சாம். இப் பொம் ஊர்க்காரன் பொண்ணு குடுக்கல்லேன்னுத்தான் முளுகிப் போயுடப் போகுதாக்கும். அது வும் ஆத்திலே, இத்தனி பேரு இவ னுக்கு வலிச்சுக்கிட்டு போகுதைப் பார்த்துட்ட பெறகு, நீங்களும் நானும் மூடிமறைச்சுப் போட்டோ மின்னு, ஊருக்கே தெரியாமப் போயிடப் போகுதாக்கும். நான் சொல்லுதேன் பாட்டையா, இவன் காந்திமதியைக் கட்டிக்கிடப் படா துன்னு எண்ணிக்கு அந்த அத்தை சொல்லிச்சோ, அண்ணி மொதலே நெல்லையப்பன் மனசு ஒடைஞ்சு போயிட்டாங்க. இவனுக்கு இண் ணிக்கு வலிப்பு வந்திருக்குதின்னு, அதுக்கெல்லாம் அந்த அத்தை யின் கொரங்குப் பிடிவாதந்தான், பாட்டையா, காரணம்."

"ஏலே! அதெல்லாம் கெடக் கட்டும்லே, பளங்கதை. என்ன தான் இருந்துட்டாலும், கோம திட்டே இதெ சமயம் பாத்து மொள்ளமாத்தான் சொல்லணும். புள்ளையை நெனெவில்லாமத் தூக் கிக்கிட்டு வருதைப் பார்த்துட்டு அலறிப் பொடைக்கப்போற அவ கிட்டெ, அவனுக்கு வலிப்பின்னும் சொல்லிட்டோமின்னு, அவ அப் பிடியே ஏக்கம் புடிச்சுப் போயி வாயைப் பொளந்துடப் போரு. அதுக்காகல்லாலே சொல்லு தேன்," என்று விளக்கினுர் செல் லம் பிள்ளை.

"ஆமா, அத்தை தானே? அவ ளுக்கு இருக்குத நெஞ்சு ஒரப்புக்கு இது போலே ஆயிரம் இடி விளுந் தாலும் தாங்கிக்கிடுவாளே! சதி, சதி. இப்பொம் எனக்கென்ன? எல்லாத்தையும் நீங்களே சொல் லிக்கிடுங்க. என்னெக் கேட்டா, மயங்கி விளுந்திட்டான்னே சொல் லிட்டுப் போறேன்!" என்ருன் குமாரசாமி.

வண்டி நெல்லையப்பனின் வீட்டு வாசலில் வந்து நின்றது. இன்னுங் கூட அவனுக்கு நினைவு வரவில்லை. குமாரசாமி அவனை எடுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டு வீட்டுக்குள்ளே சென்ருன்.

வீட்டில் முதலில் எதிர்ப்பட்ட வள் காந்திமதிதான். வாசலில் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டு, யார் வந்திருக்கிருர்கள் என்று பார்க்க வந்த அவள், நெல்லையப்பனை அலங்கோல மாகத் தூக்கி வரும் காட்சியைக் கண்டதும், "ஐயோ!" என்று அலறி விட்டாள்.

மாடியில் பள்ளிப் பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தான் நெல்லையப்பனின் தம்பி திருமலை. அடுக்களையில் பலகாரம் சுட்டுக் கொண்டிருந்தாள் அவனுடைய அத்தை கோமதியாச்சி. அவ்விரு வரும் காந்திமதியின் கூக்குரலைக் கேட்டு ஓடி வந்தனர். அவர்களை யும் இக்காட்சி உயிரற்றவர்க ளாக்கிற்று.

"பாட்டையா! அண்ணச்சிக்கு என்ன?' என்று திருமலை கதறி ஞன்.

"ஏ குமாரசாமி, என்னடா பண்ணிப் போட்டே என் புள் ளையே?" என்று அலறி, அப் படியே சுவரில் சாய்ந்து விட்டாள் கோமதியாச்சி.

"ஒண்ணுமில்லே, அத்தே. பதரு தீக. ரெண்டு பேரும் பல்லு வெளக்க ஆனப்பாலத்தடிக்குப் போனேம். படி பாசி பிடிச்சுப் போயிருந்திச்சு. நெல்லையப்பன் பாக்காம அதிலே காலெ வச்சு வளுக்கி விளுந்துட்டான்," என்று பாடம் ஒப்புவித்தான் குமாரசாமி.

"அட ஐயா, ரெத்தமாக் கொட்டுதேடா. மூச்சுப் பேச்சில் லாமக் கெடக்கானே. பாவிப் புள்ளே, இதுக்காடா வெடியனே வந்து அவனைக் கூட்டிக் கிட்டுப் போனே?" என்று பெரிதாக அழ ஆரம்பித்தாள் கோமதியாச்சி.

திருமலை ஓடிப்போய் ஒரு மெத்தை–தலையணையை எடுத்து வந்து கூடத்தில் ஓரமாக விரித்தான். அதில் நெல்லையப்பனைக் கிடத்தினார்கள். இதற்குள் அங்கே ஊர்க்கூட்டம்–தெருக்கூட்டம் கூடிவிட்டது. "என்ன?" என்ற கேள்விகள் எங்கும் எதிரொலித்தன.

"ஒண்ணுமில்லே. படி வளுக்கி விளுந்திட்டான். போங்க, போங்க; காத்தெ மறைச்சுக்கிட்டு நில்லாதிங்க," என்று செல்லம் பிள்ளை கூடியிருந்தவர்களை விலக்கினார். பிறகு அவர் திருமலையை நோக்கி, "ஐயா திருமலை, அந்தப் பண்ணைக்காரப் பய மாடசாமியை வண்டியைக் கட்டிக்கிட்டு வரச் சொல்லி, ஒரு எட்டிலே அணைக்கரைத் தெருவுக்குப் போயி ஆசுப்பத்திரி டாக்டர் ஐயாவைக் கையோடெ இளுத்துக்கிட்டு வா. குமாரசாமி, ஏ ஐயா, நீயுந்தான் செத்தெக் கூடப் போயிட்டு வந்திடேன். அது சிறிசு; போயிக் கூப்பிட்டா, டாக்டர் வருதாரோ, என்னமோ?" என்றார்.

குமாரசாமியும், திருமலையும் புறப்பட்டுச் சென்ற பிறகு, அங்கே ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்த கோமதியையும், காந்திமதியையும் அவர் அதட்டி அடக்கினார். "ஏட்டி கோமு! இப்பொம் என்ன நடந்திடிச்சின்னு இப்பிடி ஒப்பாரி வைக்கியாம்? வளுக்கி விளுந்திட்டான். லேசா அடி பட்டிடிச்சு. டாக்டர் வந்து மருந்து வச்சுக் கட்டிட்டாரின்னா சதியாப் போகுது. ஏ காந்தி.... மூதி, நீ வேறே அளுதுக்கிட்டிருக்கியா? உள்ளெ போங்கட்டி ரெண்டு பேரும்."

அவர்களைச் சமாதானப் படுத்திவிட்டு, இங்கிருந்த கூட்டத்தையும் கலைத்து வெளியேற்றினார் அவர். பிறகு மெல்ல, "ஏட்டி கோமு! என்னட்டி நடந்திச்சு ராவு இங்கனே?" என்று கேட்டார்.

"ஒண்ணும் நடக்கலியே, மாமா!"

"ஏட்டி, என்னெப் பாருட்டி. நான் ஒங்க வீட்டிலே ஒருத்தன், தெரியுமாட்டி? குத்தாலிங்க அண்ணாச்சி எறந்து போன பெறகு, அவுக உப்பெத் தின்னிருக்கதுக்காக இந்த ஒடலிலே உசிரு இருக்குத வரைக்கும் ஒங்களுக்கு ஓடா ஒழைக்கணுமின்னுட்டுத்தான், ஒங்க வீட்டு வெவகாரங்களிலே தலையை நொழைச்சுக்கிட்டிருக்குதேன், தெரியுமாட்டி? ஏங்கிட்டெ ஒண்ணையும் ஒளிக்காதே. ஒங்களுக்குள்ளே என்னமோ கச–முசா நடந்திருக்குது; அதினாலே தான்...."

"அட நீங்க என்ன மாமா, என்னமோ நெனெச்சுக்கிட்டு...."

"நான் ஒண்ணும் நெனைக்கலைட்டி. ஒன் மருமகன் போக்கு சொல்லுது. ஒனக்குத் தெரியுமாட்டி, அவன் காலு வளுக்கி விளலே; தலை சுத்தி விளுந்தான்னு?"

"ஆ! தலை சுத்தியா விளுந்திரிச்சு என் புள்ளே!"

"ஆமாமிட்டி, ஆமா. ஒன் மொரட்டுக் கொணம் இருக்குதே, அதுக்கு நீ எள்ளும் தண்ணியும் விடலே, ஆமா சொல்லிப் போட்டேன். அவுக குத்தாலிங்க அண்ணாச்சியின் குடும்பமே குட்டிச் சொவராப் போயுடப் போகுது. மொறைப் பொண்ணு காந்தி, அதெக் கட்டிக்கிடணுமின்னு கொள்ளை ஆசையோடே இருந்திச்சு அந்தப் புள்ளே. காரணம் சொல்லாம அதுக்கு முடியாதுன்னிட்டே. சதி, வயசுப் பொண்ணு அது; வேறேயாவது மாப்பிள்ளை கொண்டு வாரேன்னிச்சு. மூதி, அதுக்கும் ஒத்து வரலே. அது தான் என்னட்டி செய்யும்? ஊரிலே நாலு சனங்க மொகத்திலே அது முளிக்க வேண்டாம்? சொல்லுட்டி. முளிக்கிதெப்பாரு, ரெண்டாட்டிலெ ஓராடு முளிச்சாப்பிலே! நேத்து ராவு நான் போனப் பெறகு கல்யாண விசயமா எதேம் பேசித்தா இந்தப் புள்ளே?"

இப்படி அவர் பலவாறு கடிந்து கொண்ட பிறகு, கோமதியாச்சி வாய் திறந்து நடந்ததைக் கூறினாள். "முந்தா நேத்து நடந்த சங்கதியெ வச்சிக்கிட்டு, இந்த மூதியை இப்பிடி வச்சிக்கிட்டிருக்கப்படாது; ஊர்க்காரங்க என்ன பேசினாலும் பேசிட்டுப் போகட்டுமின்னு வெளியிலே எவருக்காவது கட்டி வச்சிடணுமின்னு மல்லுக் கட்டினான்."

"ம்.... அதுக்கு நீ என்ன சொன்னியாம்?"

"நான் என்னத்தைச் சொல்லுது? இப்பிடி இந்த மூதி இருந்தாலும் சங்கடம், போனாலும் சங்கடமின்னு இருக்கதெப் பாத்துப் போட்டு, 'சதிப்பா! ஒன் பிரியம் போலே செய்'யின்னேன். ஆமா, அதுக்கும் இதுக்கும் என்னவாம்?"

செல்லம் பிள்ளை ஏதோ பதில் பேச ஆரம்பித்தார். ஆனால் அதற்குள் டாக்டரைக் கூட்டிக்கொண்டு திருமலையும் குமாரசாமியும் வந்து விட்டதால், பேச்சை நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

டாக்டர் நெல்லையப்பனின் காயங்களைக் கட்டி, 'ஊசி குத்தி'னார். ஏற்கனவே குமாரசாமி அவரிடம் ரகசியமாக, நெல்லையப்பன் வலிப்பு வந்து விழுந்து விட்டான் என்றும், அவ்விஷயத்தை அவன் வீட்டுக்காரர்களுக்கு மறைத்து விட வேண்டும் என்றும் எச்சரித்திருந்ததால், அவர் அதுபற்றி எதுவும் பேசவில்லை. "ஏம் புள்ளே பொழைச்சுக்கிடுமா டாக்டரையா, இப்பிடி மூடின கண்ணெ முளிக்காமக் கெடக்குதே?" என்று புலம்பிய கோமதியாச்சிக்கு அவர், "அடிலேசுதான் அம்மா. அதிர்ச்சிதான் பலமா இருக்கும் போலிருக்கு. பையனும் 'வீக்'கா இருக்கான். அதனாலே மயங்கிக் கெடக்கான், அவ்வளவுதான். கவலைப்பட ஒண்ணுமில்லே. இன்னம் கொஞ்சநேரத்திலே மூர்ச்சை தெளிஞ்சிடும். சூடா காபி, டீ, எதேனும் கொடுங்க. நான் சாயங்காலம் வந்து பார்க்கறேன், அநாவசியமா அவனைத் தொந்தரவு படுத்த வேண்டாம். நல்ல 'ரெஸ்ட்' வேணும்" என்று மாத்திரம் கூறிவிட்டுப் போனார்.

டாக்டரைக் கொண்டு விட்டு வர, திருமலையும் அவருடன் சென்றான்.

"புள்ளெ கண்ணெத் தொறக்காமக் கெடக்கு, இவரு பயப்படாதீங்கன்னுட்டுப் போயிட்டாரே? சாலையடி மாரியாத்தா! நீதான் ஏம் மருமகனெக் காப்பாத்தணும், தாயே. வெள்ளிக்கெளமை ஒனக்குப் 'படைப்பு' வைக்கச் சொல்லுதேன். ஆத்தா, ஏம் புள்ளைக்கு ஒண்ணுமில்லாம ஆக்கிப்போடு," என்று மறுபடியும் பிலாக்கணம் வைக்க ஆரம்பித்தாள் கோமதியாச்சி.

"ஆமா, நீ பண்ணுத அட்டுளியத்துக்குச் சாலையடி ஆத்தா என்னட்டி செய்யுவா? அது மானமாப் பொளைக்கற புள்ளெ. வீட்டிலே 'சமஞ்ச' பொண்ணெ வருசக் கணக்கா வச்சுக்கிட்டிருக்கோமேன்னு ஏக்கமில்லாத ஏக்கமா ஏங்கி ஏங்கி இப்பிடி ஆயிடிச்சு" என்று கடுகடுத்தார் செல்லம் பிள்ளை.

"பாவிப் புள்ளெ, இப்பிடி மருகுமின்னு நான் கண்டுக்கிட்டா இருந்தேன்? இந்த எளவெடுத்தவ மூஞ்சிக்குப் புருசன் ஒருத்தன் இல்லாமத்தான் வாளுதோன்னு இருந்திட்டேன். அதான் பெறகு நேத்து சதின்னு சொல்லிவிட்டேனே? அப்பறமும்...."

"நெறுத்திக்கட்டி ஒன் அளுகையை. புள்ளைக்கு 'ரெஸ்ட்' வேணுமின்னு டாக்டரு சொல்லிட்டு போயிருக்காரு. வா, வா வெளியே. அங்கனே வந்து ஒன் அளுகையெல்லாம் அளுதுக்கிட்டி" என்று கோமதியாச்சியையும், காந்திமதியையும் பட்டகசாலைக்கு அழைத்துச் சென்றார் செல்லம் பிள்ளை.

இப்பொழுது கூடத்தில் குமாரசாமியும் நெல்லையப்பனும் மட்டுமே இருந்தனர். குமாரசாமிக்

குப் பத்தரை மணிக்குக் கோர்ட். இருந்தாலும், காயத்தைக் கட்டி ஊசி போட்ட பிறகும் தன் நண்பனுக்கு நினைவு வராததால் கவலை கொண்ட அவன், அன்று கோர்ட்டுக்குச் சிறிது 'லேட்'டாய்ப் போய்க் கொள்ளுவதென்று தங்கி விட்டான்.

செல்லம் பிள்ளை, கோமதியாச்சி முதலியோர் உள்ளே போய் ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு நெல்லையப்பன் மெல்லக் கண்களை விழித்தான். குமாரசாமி சந்தோஷத்தோடு, பட்டகசாலையிலிருந்தவர்களுக்குக் குரல் கொடுக்கப் போனான். ஆனால் நெல்லையப்பன் 'சட்'டென்று எழுந்து உட்கார்ந்து, அவன் வாயை இறுகப் பொத்தி, "ரொம்பப் பயந்திட்டயோடே!" என்று கூறிக் கல-கலவென நகைத்தான்.

"அட பாவி! 'பாவலா' (பாசாங்கு) பண்ணிக்கிட்டா இருந்தே?" என்று வியப்புடன் கேட்டான், குமாரசாமி.

"எல்லாமே பாவலாத் தாண்டே, அந்த வலிப்பு மொதக் கொண்டு," என்று மீண்டும் சிரித்தான் நெல்லையப்பன்.

"எதுக்காகடே?"

"எல்லாம் காரியமாத்தாண்டே. ஒரு வளியா அத்தெ சம்மதிச்சிட்டா, காந்தியெக் கட்டிக் கொடுக்க. ஆனா, மொறெப்புள்ளெ நானிருக்க, அவளெ வெளியே கொடுத்தா, ஊர்க்காரங்க சிரிக்க மாட்டாங்களா? இப்பொப் பாரு. இன்னிக்குப் பண்ணின பாவலாவிலே, எல்லாரும் எனக்குக் காக்கா வலிப்பு இருக்குதுனாலே தான் அவளெ வெளியே கட்டிக் கொடுக்கப் போறோமின்னு நெனெச்சுக்கிடுவாங்க!"

"நல்ல ஆளுடே நீ! இதுக்காக இப்படியா செய்யுவாங்க? கொஞ்சமாவது யோசனை வேண்டாண்டே? நீ ஆடின இந்த ஆட்டத்தாலே நாளைக்கு ஒரு பயக்கூட ஒனக்குப் பொண்ணைக் கட்டிக் குடுக்க மாட்டானேடே. சே! என்ன வேலை பண்ணிப்போட்டே!"

"பொண்ணு? எனக்காடே? நான் கட்டிக் காத்துக்கிட்டிருந்த காந்திமதி இல்லேன்னு ஆனப் பெறகு, சாமியாணையாச் சொல்லுதேண்டே, எனக்குக் கல்யாணம் என்னெக் கட்டேலே அடுக்குதபோதுதான்!"

இதைச் சொன்னபோது நெல்லையப்பனின் குரலில் தொனித்த தீவிரத்தைக் கண்டு திகைத்து நின்றான் குமாரசாமி.

(தொடரும்)

விவாத அரங்கம் :

வை. தட்சிணாமூர்த்தி

நான் விரும்பும் எழுத்தாளர்

ம. பொ. சி.

“எழுத்துத் தொண்டால் நாட்டில் எதையும் சாதிக்க இயலும்,” என்பார் டாக்டர் மு. வ. ஆம், இது முற்றிலும் உண்மை. தொல்காப்பியம் கூறுவதொத்து நிறைமொழி மாந்தராய எழுத்தாளர்கள் ஆணையில் உருவாகும் மறை மொழிகளே மந்திர சக்தியைப் பெற்று, மாக்களை மக்களாக்குகின்றன. எண்ணியதை எண்ணியவாறு எழுதும் ஆற்றல் பெற்ற எழுத்தாளன், எண்ணற்ற மனித உள்ளங்களை ஆட்டிப்படைக்கும் பொறுப்பினை உடையவனாகின்றான். உள்ளத்தில் உண்மை ஒளியுள்ள எழுத்தாளர்களால் தான் மக்களைத் தம் வழியில் ஈர்க்கும் தன்மையைப் பெற முடியும். இத்தகைய அமரத்துவம் பெற்ற எழுத்தாளர்கள் என்றென்றும் மக்கள் இதயங்களில் நிரந்தரமாக வாழ்கின்றார்கள்.

நான் விரும்பும் எழுத்தாளர் இலக்கியத்தையே ஓர் இயக்கமாக வைத்து நடத்துபவர். அவர் தமிழ்த் தொண்டர் மட்டுமல்ல, தலைவருமாவார். ‘நான் புலவனல்ல; இலக்கியத்தை நன்கறிந்த டாக்டரல்ல’ என்றல்லாம் அடிக்கடி தன்னைத் தாழ்த்திக் கூறிக் கொள்ளும் இப் பேனா மன்னர், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் எழுந்த இலக்கியக் கருத்துக்களை இருபதாம் நூற்றாண்டு மக்களோடு உறவாட விட்டு, உளங் களிக்கும் உண்மைத் தொண்டர்.

‘இராமாயணம் கொளுத்தப்பட வேண்டும்’ எனப் பிரச்சாரம் செய்து வந்தாரின் போக்கைக் கண்டிக்கும் முறையில், அவர்கள் எழுதிய கட்டுரைகள், நொந்த உள்ளத்தோடு இருந்த தமிழ்ப் புலவர்கட்கு ஊசி கொண்டு மருந்தேற்றியதொப்ப தெம்பினை ஈந்தன. தளபதி சிதம்பரனார், மேதினப் புரட்சி, தமிழன் குரல் முதலிய நூல்களில் இவர் எழுதியுள்ளவை பொருள் பொதிந்தவையாக மட்டுமன்றி, ஆக்கப் பயன் தருவனவாகவும் அமைகின்றன. ‘தமிழ் நாட்டில் தமிழரெல்லாம் சம உரிமை பெற்று வாழ வழி இதோ என்னிடம் உள்ளது’ என வழிகாட்டுவது போன்று அமைகின்றது இந்நூல்களில் தரப்படும் வழிவகைகள். தமிழ், ஆட்சிமொழியாக வந்தால் தமிழ் நாடு எய்தும் சிறப்புப் பற்றியும், எல்லை மீட்சியின் அவசியம் பற்றியும் அவர் தெளிவு படுத்திய முறைகள் அவருக்கே உரித்தான சிறப்புடையனவாகும். சென்னை பறிபோகயிருந்தகாலத்து அவரின் ஆவேசக் கட்டுரைகள், பேடிகளையும் ஆண்களாக்கும் ஆற்றல் பெற்றன. திருத்தணி மறியலின் போது ‘வடக்கெல்லைப் போர்’ என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய சிறு நூலில், எல்லைப் பிரச்னை எல்லோருக்கும் எளிதில் புரியுமாறு விளக்கப்பட்டிருந்தது. இன்றும் எல்லைப் போர் என்றால் ‘எங்கே ம.பொ.சி?’ என்று தானே கேட்கின்றார்கள்!

அண்மையில் சிறை சென்று, மீண்டும் அறப்போர் தொடங்கி எல்லை மீட்கப் போராடும் தமிழ்ச் சிங்கத்தின் ஆற்றலுக்கு எல்லை கூற இயலுமா?

'சிலப்பதிகாரக் கண்ணகி குற்றமேதும் அற்ற குணவதியாவாள்' என்ற தொடர், தலைவர் ம. பொ. சி. அவர்கட்கே உரித்தானது. பல அறிஞர்கள் சிலம்பு பற்றி எழுதினுலும், சிலம்புச் செல்வர் ம. பொ. சி-யின் கட்டுரைகள் தனிச் சிறப்பையே பெறுகின்றன. 'சிலப்பதிகாரமும் தமிழகமும்' என்ற நூலில், இளங்கோ ஒரு தேசிய கவி, புரட்சிக் கவி என்றெல்லாம் மெய்ப்பிக்கும் ஆற்றல் இவரையன்றி யாவரே பெற்ருர்? இரண்டாம் நூற்ருண்டில் எழுந்த இலக்கியத்தில் கவிஞன் தன் காலச் சூழ்நிலையைக் காட்டுகின்ருன். அச் சூழ்நிலையை இருபதாம் நூற்ருண்டோடு பொருத்தி இன்பம் காண்கிருர் ம. பொ. சி. மக்கட்குப் பயன்படும் கண்ணேட்டத்தில் இலக்கியத்தைப் பயன் படுத்தும் இவரின் ஆற்றலால் தமிழகம் பெரும் பேறு பெற்றது, பெற்று வருகின்றது.

''இலக்கியம் இன்றி அரசியல் இல்லை; அரசியல் இன்றி இலக்கியம் இல்லை. ஆட்சியாளருக்கு இலக்கிய இதயம் தேவை,'' என்ற கருத்தை முதன் முதல் நாடறியச் செய்த நல்லறிஞர் ம.பொ.சி-யே யாவார். 'தாலி'யைப் பற்றி வாதங்கள் எழுந்த போது, இவரது தர்க்க ரீதியான வாதப்பேச்சு எனக்கு மிகப் பிடித்திருந்தது. தர்க்க ரீதியாக இலக்கியங்களின் பட்டியல்களைத் தந்து அஞ்சா நெஞ்சொடு எதிர் வாதமிட்டது நக்கீரரை எனக்கு நினைப் பூட்டியது.

அண்மையில் 'செங்கோல்' இதழிலே, 'இரு கையாலும் இரக்கிறேன்' என்ற தலைப்பில் எழுதியுள்ளதைப் படிக்கும்போது, தமிழுணர்ச்சியே உருவாக வந்து, தியாகத்தை ஓடாகக் கொண்டு பிச்சை எடுக்கும் உண்மைத் தொண்டர் ம. பொ. சி-யை நாம் நமது கண் முன் காண்பது போலவே இருக்கிறது.

''கண்ணகி என்னும் பெண்ணெருத்தி பிறந்தாள். அவளுடைய புகழையும் புண்ணிய நெறியையும் உலகுக்கு அறிமுகப் படுத்த வேண்டி, அதே நகரில் நடனமாடும் கணிகையர் குலத்தில் சித்திராபதி என்பவளிடம் மாதவி என்னும் மங்கை நல்லாளும் தோன்றினுள்'' என்று அவர் எழுதும் ஆற்ரெழுக்கான நடை, அறிவு நிறைந்த எழுத்து நடை என்பதைக் காட்டுகின்றது. ''கண்ணகி வழிபாடு'' என்ற அவரது சிறு நூலைப் படிக்கும் ஒவ்வொரு தமிழனும் கண்ணகியை வழிபடாமல் இருத்தல் இயலாது. மறைந்தொழிந்த தமிழகத்தின் மாண்புமிக்க பத்தினி வழிபாட்டை மறுபடியும் வழக்குக்குக் கொண்டு வருபவர் ம. பொ. சி-யே யாகும். தமிழகம் என்ற பெயர் பழமையானது என்பதைக் காட்ட பரிபாடல் முதலாக பதிற்றுப் பத்து ஈருக, இலக்கியங்களைச் சான்றுக் கழைக்கும் இவர் தன்னை புலவரல்லாதார் எனப் புகன்ருல் யார் ஒப்புக் கொள்ளுவார்கள்? தமிழகம் படும்பாட்டைப் பார்க்க பாரதி இல்லை எனப் பகர்வதும், மற்றும் வள்ளுவர் குறட்பாக்களை வழங்கி தமிழ் நாட்டிற்கு நீதி கேட்பதும் இவரது இலக்கியப் பயிற்சிக்குச் சான்றுகள்.

தலைவர் ம. பொ. சியின் நூல்களைப் படிப்பதன் முன்னர் நான் தமிழுணர்வே யற்ற மாணவனுகவே இருந்தேன். ம. பொ. சி-யின் எழுத்தும் பேச்சும் என்னை ஒரு விஞ்ஞான மாணவனுவதினின்றும் தடை செய்தன. புத்தகப் புழுவாக உணர்ச்சியற்ற பிண்டமாக இருந்த என் உடலிலே பெருமளவு தமிழ்க் குருதி ஓடச் செய்தது போன்று, எத்தனை பேருக்கு உணர்ச்சியை ஊட்டினவோ தண்டமிழ்த் தலைவர் ம.பொ.சி-யின் மங்காப்புகழுடை மாணிக்க எழுத்துக்கள்! ★

இனம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கருத்து, எப்பொழுதுமே கருமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1|15. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5|-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்ஸி கை கடியாரமும், ஒரு மோதிரமும் (நியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்ஸி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (நியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Nakodar. (Pb.)



Retail Branches :

281, China Bazaar Road, G. T.

71, Pondy Bazaar, T. Nagar.

இந்தியன் பாங்க் லிட்

(ஸ்தாபிதம்: 1907)

தலைமை ஆபீஸ்: வடக்கு பீச் ரோட், சென்னை. 1

உள்ளூர் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மவுண்டு ரோட், ராயப்பேட்டை, ஆள்வார்பேட்டை-தேனும்பேட்டை, மைலாப்பூர், காந்திநகர், தியாகராயநகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், பெரியமெட் & ராயபுரம்.

தென்னிந்தியா முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டெல்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்களிருக்கின்றன.

மூலதனம்

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	62,02,615
ரிசர்வு மற்றும் இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டிபாசிட்டுகள் (30-6-56)	...	ரூ.	32.08 கோடி

வெளிநாட்டு பரிவர்த்தனையுள்பட சகலவிதமான பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி,
B.A. (Hons.), B.L.
ஆக்டிங் செக்ரடரி.

பரீக்ஷித்தீர்களா !

இல்லையேல் ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள் !

ஜெர்மோகில்

(ஆயுர்வேதிக்)

சர்ம ரோக நிவாரணி

D.D. CHEMICAL WORKS.

MADRAS-1.

சேத்துப் புண், தீப்புண், வெட்டு, தேம்பல், புண், படை, சொறி, கொதிப்பு, குஷ்டம், கொட்டு விஷம், தேய்வு, முகப்பரு, மேகரணம், கரப்பான், யானைக்கால் முதலிய சரும வியாதியை போக்கும் கை கண்ட மருந்து.

ஸ்டாகிஸ்ட் ஏஜண்டுகள் விண்ணப்பிக்கவும்:

*

டி. டி. கெமிகல் ஒர்க்ஸ்,
3, பொம்மல் அய்யர் தெருவு,
சென்னை-1.

என்று காண்பேன்?

"சுகி"

காலத்திற்குள்ள ஒரு பெருமை, எத்தனை பெரிய துன்பமாக இருந்தாலும், அது துடைக்கப்பட்டு விடும். ஆனால், காலஞ் செல்லச் செல்லத்தான் அந்தத் துன்பத்தின் பெருமையே எனக்குத் தெரிகிறது.

ஆண்டு தோறும் தீபாவளி என்ற சொல் காதில் விழும்போதெல்லாம், சிறுபிராயத்தில் நடந்ததே, அந்த எண்ணக் கலவையில் நான் முங்கி மூழ்கிப் போவேன்.

ஒவ்வொரு ஆண்டும், எனக்கு அக்காட்சி வரவர பிரமாதமாகத் தோற்றுகிறது. நான் வளர வளர, எனக்கு அந்தத் தாபம் அதிகமாகிறது. பிறருக்குச் சிறு சம்பவந்தான். என் ஆயுளில் எத்தனை தீபாவளியைக் காண்பேனோ? அதிலே அந்த இளஞ் சிறுவனைக் காண முடியுமா?

அவன் எங்கே இருக்கிறான்; என்னமாக இருக்கிறான் என்பது தான் எனக்குள்ள வேதனை. அவனுடைய கருணை உள்ளத்தைப் போன்று வாழ்க்கைப் பாதையில் நான் யாரிடம் காண முடியும்? தன்னலமற்றவர்களைப் பற்றிப் படிக்கிறேன்; பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. கிடைத்தபோது, என் சிறுபிராயம் அதைப் பெரிது படுத்தவில்லை.

எனக்குப் பத்து வயதாக இருந்த போதுதான் இந்தச் சம்பவம் நடந்து மறைந்தது. இன்றைக்கும் தீபாவளியை எண்ணும்போது என் மனத்துள்ளே நடக்கிறது.

*

தெருவில், புழுதி பறக்கக் காற்றடித்த சமயம், என் கண்ணிலே தூசி விழுந்தது. எனக்கு அதை எடுக்கவேண்டுமென்ற நினைப்பின்றி, அமர்ந்திருந்தேன். என் கண்ணிலும், என் சகோதரி—சகோதரர்கள் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டு என் தாய் காலமாகி விட்டாள். அம்மா போன காரணத்தால் வீட்டிலே தீபாவளி கொண்டாட மாட்டார்கள்; அந்தக் கவலைதான் என் இளம் உள்ளத்தைப் பிடுங்கித் தின்றது. எனக்குக் கோடி வேட்டியோ, புதிய வர்ணச் சட்டையோ கிடையாதாம். புதிய புதிய சட்டைகள் தைக்கிறார்கள்; வேட்டும் மத்தாப்பும் கொளுத்துகிறார்கள். எங்கு பார்த்தாலும் சிரிப்பு, வேடிக்கை, தமாஷ்....!

நான் மட்டும் நாலாவது தெருவில் நண்பன் ஒருவனின் வீட்டுப் படிக்கட்டில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தேன்.

திடீரென்று வானம் கறுத்தது. எங்கும் ஐப்பசி மாதத்து அழுகை. மழை சரஞ்சரமாகப் பெய்திருக்க வேண்டும். நான் அசையாத கல்லுச் சிலைபோல நகராது படிக்கட்டில் உட்கார்ந்தவன் யோசனையில் ஆழ்ந்தேன். மழையின் ஈரம், காற்றின் வாடை எதுவும் என் மனசைத் தொடவில்லை. மழை நின்றதும், தெருவிலே போவோர்கள் வருவோர்கள் சாய ஆரம்பித்தனர். அழுகின்ற என்னைப் பார்த்து ஆறுதல் சொல்ல அன்புள்ளம் யாருக்கு வரும்?

என் நண்பன், வாய்கொள்ளாதபடி ஏதோ பண்டம் நொறுக்கிக் கொண்டே வருகிறான். அவனது சட்டைப் பை நிறைய இன்னும் பண்டங்கள். அவன் கால் சராய்க்குள், வெடியோ? துப்பாக்கியோ, படுபாவிக்கு என்ன சிரிப்பு வேண்டியதிருக்கிறது? அவன், ''டேய் தீபாவளிக்கு எங்கள் வீட்டுக்கு வந்துவிடு.'' என்று உபசாரம் சொல்லுகிறான். எனக்குப் பற்றி எரிந்தது. யானைமேல் இருப்பவனிடம் சுண்ணாம்பு கேட்ட கதை எனக்கு நினைவில் எழுந்தாலும், ''...ம்'' என்று சொன்னேன். நனைந்த உடைகள் உடம்பின் உஷ்ணத்தில் உலர்ந்து காய்ந்து கொண்டிருந்தன.

''டேய், என்னுடைய புதிய சட்டையைப் பார்க்கிறாயா?''

உலகத்திலேயே இவன் ஒருவனுக்குத்தான் சட்டை இருப்பதைப் போல ஜம்பம். முட்டாள்கள் பிற மனிதன் கஷ்டத்தை உணர்வதில்லை. என் அம்மா இருந்தால்? இருக்குமிடம், பிறர்வீட்டுத் தெருப்படி என்பதை மறந்து, ''அம்மா'' என்று கதறினேன்.

என் ஆருயிர்த்தோழன், படித்த பாட்டைச் சொல்லி தத்துவ ஒத்தடம் கொடுப்பான் போன்று, ''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்'' என்ற பாட்டைச் சொன்னான். எனக்கு நெருப்புக்குள் அழுத்துவதைப் போன்றிருந்தது. அம்மா இருக்கும் வரை, அவள் செய்துள்ள அன்பைப் பற்றி நான் எண்ணவில்லை; அவள் மறைந்ததும் எண்ணுகிறேன். அதுவும் எனக்கு ருசியான பண்

டங்கள், உடைகள் கிடைக்காமற் செய்து விட்டாளே என்பதற்காக எண்ணுகிறேன். அம்மாவென்று நான் கதறியதைக் கேட்டு என் ஆருயிர்த் தோழன் சிரித்தான். என் அழுகை அவனுக்கு தெரியும் காலம் வரும்போது, அவன் தாய்.... அதைச் சொல்வானேன்?

"இந்த ஆண்டு தீபாவளிக்குக் குழந்தைகள் அத்தனை பேருக்கும் துணிமணி எடுத்து ஒட்டலில் பட்சணங்கள் வாங்கியாவது கொடு. என்ன செய்கிறது?''

பாட்டியின் வாக்கை அப்பா ஆமோதித்தாரா, இல்லையா?

எங்களுக்கு எவ்விதமான துணியும் வராது என்று முடிவு கட்டிவிட்டோம். முக்கியமாக அந்த வருடம் எனக்கு அப்பா பட்டுச்சட்டையும் கோட்டும் தருவதாகச் சொன்னார்கள். நான் பட்டுச் சட்டை பெற்று விடக்கூடாது என்பதற்காகத் தான் அம்மா போய்விட்டாளோ? சை, எவ்வளவு மட்டமான புத்தி! அம்மாவின் பெருந்தன்மை எனக்குத் தெரியும். சுயநலம் குறுக்கிடும்போது, பெற்ற தாயும் எதிரியாகத் தோன்றுகிருள்!

உடம்பிலே உஷ்ணம் பட்டு சட்டை காய்ந்து விட்டது. உட்கார்ந்து கால் மரத்துப் போய் இருந்தது. நான் சோம்பல் முறித்துக்கொண்டிருந்த போது, என் ஆருயிர் நண்பன் ஐந்தாறு லட்டுகளை விழுங்கிக் கொண்டிருந்தான். அதன் நெய் வாசம், 'கம்' என்று மூக்கைத் துளைக்கிறது. அதிலே உள்ள முந்திரிப் பருப்பைக் கடிக்கும்போது அவன் முகம் அடையும் பேரானந்தம்; நாக்கினுல் பல்லுக்கு ஒதுக்கிக் கொடுத்து அதை வெடுக்கென்று கடிக்கும் வெறி — ஆகா, அவன் பாக்கியசாலி!

எங்கள் இருவருக்கும் பேச்சு இல்லை. அந்தச் சமயம் சந்துக்குள்ளிருந்து நாலைந்து சிறுவர்கள் வந்தார்கள். அதிலே ஒரு சோதா— அவன் துணியெல்லாம் கரி, பிசுக்கு, எண்ணெய்ப் பிணுக்கு. தொட்டாலோ நம்மீது திப்பிடிக்காது; அத்தனை அழுக்கு. அவனும் ஒரு சிலரும் வந்தார்கள். வந்தவர்கள் கோலி ஆட ஆரம்பித்தார்கள். கோலியென்ருல், எனக்கு உயிர். எனக்கும் ஆடவேண்டுமென்ற ஆசை. அவர்களோடு ஆட யாராவது கூப்பிட்டால்? என்னுடைய துக்கம் அறிந்ததால் யாரும் கூப்பிடவில்லை. அவர்கள் ஆட்டத்தின் சுவாரஸ்யம், என் மனத்திலே புதைந்த துக்கம் சிறிது அமுங்கி விட்டது. அவர்கள் ஆட்டம் மேலே நடக்கவொட்டாமல் தனக்கு வெடி வாங்க ஒரு பயல் செட்டு சேர்த்துக் கொண்டு போனுன்.

என் பக்கம் அந்தச் சிறுவன் வந்தான். என்னை விட இரண்டு வயது அதிகம். ''என்ன, நீ வெடி வாங்கப் போகலையா? சட்டை தைக்கப் போகலையா?'' என்று உரிமையோடு கேட்டான். என்மீது கருணை அவன் உள்ளத்துள் பிறக்க வேண்டுமா? அவன் எளிய நிலையை

அழகிற்கும் கவர்ச்சிக்கும்

நறுமணமுள்ள

ஷோபா ஸ்னோ

உங்கள் அழகை அதிகரித்து,
பாதுகாக்கவும் செய்கிறது

*

SHOBHA COSMETICS,
3247, Ediga – Mysore.

எண்ணி நான் கேட்கவேண்டும். அவன் அறையில் துண்டு கூட இல்லை. சிறு துணி. அதுவும் பழசு; கிழிசல். மேலே ஓர் அழுக்குத் துணி. வாடைக்கு அதுதான் போர்வை.

''எனக்கு....''

என் நாக்கு குழறிற்று. என் துக்கத்தைக்கேட்க ஓர் ஆள் வந்த போது, மனத்திற்குத் தெம்பு இல்லாமற் போவானேன்? அழுது விட்டேன்.

''ஏஞ்சாமி அழுவுறீங்க'' என்ருன். நான் அவனுக்கு சாமியா? எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. என் உடைகள் அத்துணை கௌரவத்தைத் தேடித் தந்தன.

''நீ கேட்டு என்ன பிரயோசனம்? என் அப்பா கண்டிப்புக்காரர். அவர், தீபாவளிக்கு ஒன்றும் தரமாட்டார்.''

''ஏன்?''

''எங்கம்மா இறந்துபோச்சு.''

''அதனுலே என்ன?''

''கொண்டாடக்கூடாது.''

''உனக்கு என்ன வேணும் சாமி?'' என்று என் பதிலை எதிர் பாராமலே அவன் போய்விட்டான்.

ஆருயிர் நண்பனின் தாயார் ஒரு காகிதத்தில் என்னென்னவோ பட்சணங்கள் போட்டு, ''இந்தாடா ராசா, இதை நீ தின்னு பார்'' என்று கொடுத்தாள். அவள் மனம் தங்கம். பொட்டலத்தை என் அருகாக வைத்துக் கொண்டு அந்தப் படிக்கட்டில் இன்னும் உட்கார்ந்திருந்தேன். சிறு சிறு பயல்கள் பகலில் வாணம் கொளுத்தித் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டினுர்கள்.

''சாமி என்னங்க?'' என்ற குரல் கேட்டது.

அந்தச் சோதாப் பையன் என்னருகாக வந்து நின்ருன். அவன் கையிலே பெரிய பொட்டலமாக ஏதோ இருந்தது.

''இந்தா சாமி. நானும் உன்னைப் போலத் தாயை இழந்தவன். ஆனு தெருவிலே இறங்கிட்ட சோதா. நீ இன்னும் வீட்டுக்குள்ளே இருக்கிற புள்ளை.''

அவன் என் அருகாக வைத்த பொட்டலம் என்ன? ஏதேனும் ஓட்டல் சாதமா? அவன் வாங்கி வந்தானு? என் வயிறு பகீர் என்றது. நான் சோற்றுக்கு இல்லாமல் பட்டினி என்று எண்ணி விட்டான்....!

''உன்னை யார் இதை வாங்கி வரச் சொன்னது?''

''வாங்கறத்துக்குக் காசு ஏது? ஒரு தினுசா வந்தது. வெடி சாமி. உள்ளாற என்ன இருக்குதோ, ஆண்டவனுக்குத்தான் தெரியும். மத்தாப்பு வாணம் அது இது இருக்கும், வீட்டுக்குக் கொண்டு போய்ப் பாரு,'' என்ருன்.

''இதைத் திருடிக்கொண்டு வந்தியா ....?''

அவன் பதில் சொல்லவில்லை. அவன் திருடியிருக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு. அவன் சொல்லாமற் போகவே, அதைப் பிரித்துப் பார்க்கவேண்டும் என்ற சிறுபிராயத்து ஆசை. பிரித்துப் பார்க்க முயன்ற போது, அவன் வெடுக்கென்று பறித்தான்.

''உனக்கு இந்தப் பொட்டலத்தை வைத்துக்கொள். இதிலே லாடு, முறுக்கு இருக்கிறது,'' என்று பலகாரப் பொட்டலத்தைக் கொடுத்தேன்.

''வெடியைக் கொடுத்திடு சாமி. நல்லதுக்குச் சொல்லறேன்.''

இருவரும், இழுபறியாக அந்தப் பொட்டலத்திற்கு வாதிட்டோம். எனக்கு அதை விட்டுவிட மனம் இருக்கிறதா? அது பத்து ரூபாய் பெறுமானமுள்ள வெடிக் கட்டு; மத்தாப்பும் டசன் டசனாக இருந்தது.

அவன் திமிறிப் பிடுங்கிக் கொண்டு அங்கே நின்றதுதான் ஆச்சரியம். இதற்குள் அங்கே வந்த போலீஸ்காரன் தாவி வந்து என்னையும் அவனையும் பிடித்துக் கொண்டு ''வாருங்கள் தம்பிகளா; நடவுங்கள்!'' என்றான். எனக்கு அழுகை வந்துவிட்டது.

''அவரு திருடலே. நான்தான் திருடினேன்,'' என்றான் சோதா.

''ஆமாம். இது என்னுடையதில்லே,'' என்று கௌரவமாகப் பின் வாங்கினேன். போலீஸ்காரன், ''ஏண்டா சோதாப் பயலே, வெடிக் கடையிலே இப்படி எத்தனை நாளாகத் திருடுகிறாய்? அந்தக் கடை முதலாளி அதோ ஓடி வருகிறார்'' என்று சொன்னார். வெடிக்கடை முதலாளி வந்தவர் நாலு அறை அறைந்தார். என் முதுகில் நெருப்புப் பந்தம் கொழுத்துவதாய் உணர்ந்தேன்; அந்த ஏழை உடம்பை நெளித்தான்.

''கொண்டு போங்க ஸ்டேஷனுக்கு.... அயோக்கியக் கழுதை,'' என்றவர், ''யாருடா நீ? அவன் திருடறதை விலைக்கு வாங்கிவிடற பயலா?'' என்று கையை ஓங்கினார். நான் பயந்து போனேன்.

''அவரு அப்பாவி,'' என்று ஓங்கிய கையைத் தடுத்தான் ஏழைப் பையன். அது, ஒருமுறை அம்மா என்னைத் தடுத்து ஆட்கொண்ட காட்சியை நினைவூட்டியது.

''இது என்னடா பொட்டலம்?'' என்று போலீஸ் எடுத்தபோது நான் சும்மா இருந்து விட்டேன். அதையும் எங்காவது திருடியதாகச் சொன்னால் என்ன செய்வது என்று பயம் எனக்கு....!

"அது என்னுடையது," என்று அந்த ஏழைப் பையன் சொன்ன போது எனக்குத் திகில் பிடித்தது.

நான் எவ்விதமான ஆபத்து மில்லாமல் தப்பிக் கொண்டேன். பரபரப்பாக ஓடிப்போய், "ஐயா, அந்தப் பையன் திருடவில்லை. நான் அழுவதைப் பார்த்து அவன் இரக்கப்பட்டு வெடி, மத்தாப்பு பொட்டலம் எடுத்து விட்டான். அவனை விட்டுவிடுங்கள்," என்று அசட்டுத் துணிச்சலோடு சொல்லப்போன போது, "ஏன் தம்பி, நீயும் உள்ளே வரணுமா, வா" என்று கையைப்பிடித்தார் ஜவான்.

"பாவம், விட்டுடுங்க போலீஸ் கார ஐயா, அது நல்ல பிள்ளை."

நான் திரும்பிப்பார்க்காமல் வீட்டுக்குள் ஓட ஆரம்பித்தேன். நாலு தெருக்களும் நிற்காமல் ஓடினேன். வீட்டுக்குள் வந்தபோதுதான் பயம் அடங்கிற்று.

தீபாவளிக்கு முதல் நாள், என் அப்பாவின் நண்பர் வந்தார். அவர் "குழந்தைகள் எல்லோரும் நம் வீட்டுக்கு நாளைக் காலையில் வந்துவிட வேண்டும். பலகாரம் நம்ம வீட்டில். நீங்களும் வரலாம்" என்று சொன்னபோது எனக்கும் சந்தோஷமாக இருந்தது.

"எதற்கு எல்லோரும்?.... வேண்டுமானால் இரண்டு குழந்தைகள் மட்டும்...." என்று நிறுத்திய போது, "சரி சரி. இங்கேயே கொடுத்து அனுப்பி விடுகிறேன். அதுதான் சரி. நேற்று ஒரு விநோதமான கேஸ் நடந்தது. உங்களுக்குத் தெரியுமோ?" என்றார் அவர்.

"என்ன?"

"கோர்ட்டிலே நடந்த கேஸ் இது தான். ஒருசிறுபயல் வெடியும் மத்தாப்பும் திருடிவிட்டானாம்."

"தீபாவளி சமயம் அதைத் திருடுவார்கள்; பொங்கல் சமயம் கரும்பு திருடுவார்கள்..." என்று அலுப்பாகச் சொன்னார் அப்பா.

"அவன் முகத்திலே நல்ல களை இருந்தாலும் சட்டம் அப்படிச் சொல்லும்போது நாம் என்ன செய்ய?"

"நீங்கள் மாஜிஸ்டிரேட்....என்ன செய்யமுடியும்? என்ன கேஸ்?"

"அந்த ஏழைச்சிறுவன் தனக்காகத் திருடவில்லையாம். யாரோ ஒரு பையன் அம்மா இறந்துவிட்டதால், அவன் வீட்டில் தீபாவளி இல்லையென்பதைக்கேட்டு அந்தப் பையனுக்குச் சமாதானம் சொல்லிச் சந்தோஷம் ஊட்டுவதற்குத் திருடினேன் என்று சொன்னான். அவன் வார்த்தையைப் பார்த்தால் நம்பிக்கை இருக்கிறது. கூலி வேலைசெய்து பிழைக்கிறபயலாம். எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? அவன் அவ்வாறு சொன்னதைக் கேட்டபோதுதான், எனக்கு உங்கள் நினைப்பும் நான் செய்ய வேண்டிய கடமையும் நினைப்பு வந்ததால் ஓடி வந்தேன்..." என்று முடித்தார்.

எனக்கு ஆவல் கொப்புளித்து வந்தாலும், "அவனை என்ன செய்தீர்கள்?" என்று உதட்டளவில் கேட்டுக்கொண்டேன். இந்தப் படுபாவிக்கு நெஞ்சுத்துணிவு ஏற்படவில்லை. உரத்துக் கேட்டிருந்தால்....?

*

வருடா வருடம் தீபாவளி வரும் போது இதே காட்சி என் உள்ளத்தே ஓடுகிறது. ஓர் அதிசயம் என்னவென்றால், வருடத்திற்கு வருடம் என் அறிவு, உலக அனுபவம் அதிகமாக ஆக என் நெஞ்சுள்ளே அந்தப் பையன் விசுவரூபம் எடுத்துக்கொண்டு வளர்கிறான். அவனைக் காண்போமா, இனி காண்போமா?

இதுதான் தீபாவளிக்குத் தீபாவளி என்னுடைய எண்ணம். அந்த முகத்தை என்றைக்குக் கண்டாலும் நான் செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கேட்பேன். இன்றோடு முப்பது ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் முப்பது வருடங்கள் கழிந்தாலும் என்னால் மறக்க முடியாது. என்று காண்பேன்....? ★

எமது வாடிக்கைக்காரர்களுக்கும்
பொதுஜனங்களுக்கும்
நண்பர்களுக்கும்

குதூகல தீபாவளி வாழ்த்துக்கள்

Pilot
WORLD FAMOUS
PILOT INK
PILOT INK
FOUNTAIN PEN
AND INK
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE: CATHOLIC CENTRE, ARMENIAN ST. MADRAS-1. FACTORY: RED HILLS, MADRAS.

ஆஸ்த்மாவா?
ஒரு நொடியில் அதை ஒழிப்பது
மல்ட்டிமிக்ஸ்
தாராளமாக மூச்சு வரச் செய்து,
தொண்டைக்கு இதமாக இருந்து,
மூச்சடைப்பையும் இருமலையும்
போக்குகிறது.
MULTIMIX
MULTIMIX
இந்தோ-ப்ரெஞ்ச் பார்மஸூடிகல் கோ.,
காதோலிக் ஸென்டர், மதராஸ்-1

பகுதி – இரண்டு

ரோஜா

1. சிரிக்காத ரோஜா சிரித்தது!

முள் இல்லாத அந்த ஒற்றை ரோஜா சந்தம் சேர்த்து, கந்தம் இணைத்து, அந்தமாகச் சிரித்துக் கொண்டிருந்தது. ரோஜாவிற்கு இதயம் இருந்தது. பேசவும் தெரிந்தது—அதிசயமாக இருக்கிறதா?

நிலைக் கண்ணாடியின் முன் நின்று அழகு பார்த்துக்கொண்டிருந்தாள் அழகி. வராந்தா கைப்பிடிச் சுவர் மேல் பூத்தொட்டியிலிருந்த ரோஜாப்பூ அவளிடம் என்னவோ சொல்லத் துடிப்பது போலத் தோன்றியது அவளுக்கு. அவள் கேட்டாள். பூவின் மனத்தைப் புரிந்துக் கொண்டாள்; கதை எழுதுபவள் அல்லவா?

'இன்று மாலை என் நாவலுக்குப் பரிசளிப்பு விழா நடக்கப் போகிறது; என் சந்தோஷத்தில் இதற்குப் பங்கு கேட்கவில்லை; அதன் சந்தோஷத்தில்தான் எனக்குப் பங்குகொடுக்கிறது; ரோஜாப் பூவாக வேணும் உருமாறி விட்டால் தேவலாம் போலிருக்கிறது; கூடு விட்டுக் கூடு பாய எனக்குக் கற்றுத் தர யார் இருக்கின்றார்கள்?... பழைய விக்கிரமாதித்த மகாராஜா அரசாண்ட அதிசய காலங் கூட இப்போது மாறிப் போய் விட்டதே?......ரோஜாவாக மாறி விடுவது சரி; ஆனால் முள் முளைக்காமல் இருக்க வேண்டாமா? விசித்திரமான சிந்தனைதான்; ஆமாம்; சிந்தனை மனிதனை வாழ வைத்து 'கெட்டிக்காரன்,' என்ற பட்டமும் சூட்டுகிறது; இதே சிந்தனைதான் மனிதனை வீழ

வைத்து, 'பைத்தியக்காரன்' என்ற பட்டமும் கொடுக்கிறது...! இதே கதைதான் எங்கள் குலத்திற்கும்!....... அந்த நாள்! ஓடுகிறது மனம். அக்டோபர்–1954! பொன்னுக அமையுமென்று கனவு கண்டேன்; கண் விழித்த போது, நான் மண்ணுகிப்போயிருந்தேன். அக்கினி சாட்சி சொல்லிற்று; அருந்ததி சாட்சியம் கூறினுள்—நான் திருமதி அழகேசன் என்று! ஆனுல் என் இதயத்தின் இதயம், மனச்சாட்சியின் மனம் ஒப்ப வேண்டாமா? அன்றைக்கே நான் 'அவரு'டைய உள்ளத்தில் கூடுவிட்டுக் கூடுபாய்ந்திருக்கவேண்டும்; ஆனுல் அவர் என்றைக்கோ யார் யாருடைய உள்ளத்திலெல்லாமோ கூடு விட்டுக் கூடு பாய்ந்துவிட்டாரே? ஆனுல், இன்று என்னுடைய எழுத்துலக வாழ்க்கையின் புனித நாள். மாலையில் எனக்குப் பரிசு கொடுக்கப்போகிருராம் கல்வி மந்திரி! ... என் பேனுவை நான் மறக்க முடியுமா? ... கீழ்ப்பாக்கத்திலே பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே இருக்க வேண்டிய நான், இவ்வாறு செம்புதாஸ் தெருவில் நல்லபடியாக வசித்து வருவதற்கு வழி வகுத்துக் கொடுத்தது என் பேனுவேயல்லவா? அன்பில்தான் ஆண்டவனைக் காண முடியும் சிலருக்கு; எனக்குத் துன்பத்தில் தான் ஆண்டவனைக் காணத் தெரியும். என் போக்கு இப்படி. நான் இங்கே இருக்கிறேன்; என் உயிர் மைலாப்பூருக்கு அடிக்கடி பறந்து சென்றுவிடுகிறதே? நான் 'அவருடைய' மறுபாதி என்பதனுலா? ஒருமண்ணுங்கட்டியும் இல்லை; நான் பாழ்; என் கனவு பாழ்; எல்லாமே பாழ்!....சே, சே....!'

பிறைவடிவில் துண்டுபோடப்பட்டிருந்த தங்கப்பாளம் போன்றிருந்த நெற்றியின் எல்லையில் தொல்லை தந்து கொண்டிருந்த கேசச் சுருள்களை 'தாஜா' பண்ண வேண்டித் தூது வந்த சீப்பைத் தூக்கி வீசி எறிந்தாள் அழகி. உச்சி வெயில் அதை இரண்டாக்கி விளையாடிக் கொண்டிருந்தது.

மெல்லிய பாதம் வைத்த வெள்ளை பூட்ஸ் சத்தம் யானை அடிக் கல்லில் பதிந்து பிரியும் போது ஏற்படுமல்லவா ஒருவகை மெல்லிய நாதம், அது இப்போது கேட்டது. கண்களுக்கு இதயம் உண்டு; இதயத்திற்கும் கண்கள் உண்டு. நர்ஸ் செந்தாமரை நின்று கொண்டிருந்தாள்.

உதட்டோரத்துப் பனிச் சிரிப்பு முகமன் மொழிந்தது.

"அழகி, சாயந்திரம் விழா. அதற்கு இப்பொழுதிருந்தே டிரஸ் செய்து கொள்ளத் தொடங்கி விட்டாயா? பேஷ்!..." என்று கேலி பண்ணியவாறு, அவளை ஒருமுறை பார்த்தாள் தாமரை. தாலி தெரிந்தது. அன்றொரு நாள் – போலீஸ்காரர்கள் துரத்தி வந்த முரளியை காப்பாற்றிக் கொடுத்த பிறகு, அவன் கையில் வைத்திருந்த அந்த விளம்பரம் திரும்பவும் ஒரு முறை தெரிந்தது – கண்ணிலே, கருத்திலே, கனவிலே!

"'தமிழ்த் தொண்டு' நாவல் போட்டியில் பரிசு பெற்ற அழகிக்கு அழகேசன் தலைமையில் பரிசு வழங்கப் போவதாக விளம்பரம் போடப்பட்டிருந்ததே? என்ன அதிசயம் இது?' என்று எண்ணங்களைத் தன்னுள் தொடர் சேர்த்துப் பார்த்துச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், அழகி அவளைக் கூப்பிட்டாள். தன் கையிலிருந்த விளம்பரத்தாளை மருத்துவப் பணிப் பெண் செந்தாமரையிடம் காண்பித்தாள். கல்வி அமைச்சரின் தலைமையில் 'அந்தி நிலா' பரிசு பெறப் போவதைப் பற்றிய செய்தி இருந்தது.

தாமரையின் மனம் அழுதது. அழ அழச் சொல்லுவார்கள் தம் மனிதர்; சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார்கள் மற்றவர்கள்.

சிலநாட்களுக்கு முன்னர் நடந்த இந்த விளம்பர விசித்திரத்தைப் பற்றி—அழகியின் அத்தான் முரளியின் எதிர்பாராத சந்திப்பு குறித்து – அவளிடம் சொல்ல வேண்டுமென்று ஆணை பிறப்பித்

த்து தாமரையின் நெஞ்சு. 'ஐந்து நாட்களாக என் இதய அடிவாரத்தில் புதைத்து விட்டிருக்கும் விஷயங்களை இப்போது எப்படிச் சொல்வது?...ஊஹூம், கூடாது; கூடவே கூடாது; அழகேசனின் தந்திரங்களிலே இதுவும் ஒன்ருய்த்தான் இருக்க வேண்டும்; இல்லையென்ருல், அழகேசன் தலைமையில் எப்படி இலக்கிய விழா நடைபெறும்?....இல்லை, அழகிதான் பரிசைப் பெறுவாளா?...மேலும், 'தமிழ்த்தொண்டு' ஆசிரியர்தான் அழகியின் கதை முழுமையையும் அறிவாரே!...நான் ஒருத்தி குழம்புவதுடன் நிற்கட்டும்; பாவம், அத்தி பூத்த மாதிரி இப்போதுதான் அழகி சிரிக்கக் காண்கிறேன் நான்!'

ஒலிப்பதிவு செய்யப்பட்ட 'டேப் ரெகாடர்' விசை அழுத்தம் பெற்றதும், திரும்பவும் தன்னுடைய இதய ஒலியை அஞ்சல் செய்யுமல்லவா, அதுபோலத்தான் இப்போது தாமரையின் மனம் பேசியது.

சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் வாடை பிராட்வேயில் வீசியது.

சாப்பாட்டுக்கு அழைத்தாள் சுசிலா. உடனிருந்த தாமரையும் அழைக்கப் பட்டாள். இருவரும் சுசீலாவைப் பின் தொடர்ந்தபோது, "அழகி...." என்ற குரல் கேட்டது.

அழகி மட்டுமல்ல, செந்தாமரையும் திரும்பினுள்.

'அனுமதியின்றி உள்ளே பிரவேசிக்கக் கூடாது' என்ற எச்சரிக்கைப் பலகையில் பார்வையை முளையடித்து விட்ட மாதிரி முரளி நின்றுகொண்டிருந்தான்.

அழகி தன் அத்தானையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சில மாதங்களுக்கு முன்னே நடந்த அந்தச் சந்திப்பை எண்ணினுள். கண்களில் எரிமலை வெடிக்க, சினம் தேக்கி அவனிடம் பேசின வார்த்தைகள் நினைவில் தலை தூக்கின.

முரளியின் விழிகளில் பனித்துளிகள் இடம் மாறித் தவித்தன.

அழகி பெருமூச்செறிந்தாள். மேல்ச் சேலையைச் சரி செய்ய விரைந்தது வலது கை. பிறகு, செந்தாமரையைத் திரும்பிப் பார்த்தாள்.

நர்ஸ் செந்தாமரை சில அடி தூரம் தள்ளி நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய கையிலிருந்த புத்தகம் அவளுடைய கண்விழியே பலன் பெற்றிருக்க முடியாது.

ஒரு சமயம், அழகி நர்ஸ் விடுதியில் தங்கியிருந்தபோது, செந்தாமரையின் புத்தக மொன்றில் தன் அத்தான் முரளியின் புகைப் படத்தைப் பார்த்த காட்சியை அவள் எண்ணத் தவறுவாளா? அல்லது, 'முரளி என்னை மறந்தார்; நான் இந்த உலகத்தையே மறந்து விட்டேன்!' என்று தாமரை தன் நெஞ்சம் திறந்து ஒருநாள் கூறின சொற்களைத்தான் மறப்பாளா?

செந்தாமரை பார்வையைத் திருப்பினுள்; முரளியின் பார்வையும் திரும்பியது.

'மைலாப்பூரில் அழகேசன் விலாசம் பங்களாவில் முரளியைத் துரத்திக் கொண்டு போலீஸ் ஜவான்கள் வரக்காரணம் என்ன?' என்ற கேள்வியை தாமரையின் மனச்சாட்சி கேட்டது; அதைத் திருப்பி அவள் அவனிடம் கேட்க முடியவில்லை. அன்று, பைத்தியக்காரன் மாதிரி விரக்தியுடன் சிரித்தபடியே திடீரென்று மறைந்துவிட்ட முரளியின் போக்கைப் பற்றியும் தாமரை அனுமானம் ஏதும் செய்ய முடியவில்லை.

கையிலிருந்த பத்திரிகையை மடித்துக் கொண்டே முரளியை நெருங்கினுள் அழகி; அவன் சட்டைக் காலரை நெருடி விட்டுக் கொண்டு புதிர்ச் சிரிப்புடன் அழகியிடமிருந்து விலகினுன்.

அழகி தீ என்பதைப் புரிந்து கொண்டு விட்டானு?

தீ சிரித்தது: ''தாமரை, இவர் தான் என் அத்தான். பெயர் முரளி. அன்று என் கனவுக்கெல்லாம் வடிவம் தந்தவர்; இன்று இவரே கனவின் வடிவாக ஊசலாடுகிருர். விதி பிழை செய்து விட்டது, தாமரை; விதி பிழை செய்து விட்டது!''

தீயின் இரண்டாவது சிரிப்பொலி இதோ: ''அத்தான், என்னுடைய உயிர்த் தோழி இவள். செந்தாமரை என்று பெயர்; நான் மறந்து விட்ட ஒரு முடிவை இவள் ஆரம்பமாக்கி விளையாட ஆசைப்படுகிருள். என்னுடைய வாழ்க்கைச் சீட்டாட்டத்தில் துருப்புச் சீட்டு இடம் மாறி, கைமாறிப் போய் விட்டதே! தெய்வம் வஞ்சித்துவிட்டது, அத்தான்; தெய்வம் வஞ்சித்து விட்டது!''

மறுபடியும் உணவு வேளைக்கு நினைவுக் குறிப்பு வந்தது.

தன் அத்தானை உணவுக்கு அழைக்க விரும்பித் திரும்பினுள். அங்கே முரளி இருந்தால்தானே? அடுத்த விஞடி, வீட்டு வாசலை எட்டிப் பார்த்து மறைந்த சில சிவப்புத் தொப்பிகளையும் அழகி பார்க்கத் தவறவில்லை. அவள் மனம் குழம்பினுள். கண் கலங்கினுள்.

அப்பொழுது—

அழகியின் பெயருக்குத் தபால் ஒன்று வந்தது.

அவசரம் அவசரமாக அதைப் பிரித்துப் படித்தாள்.

ஆட வந்த பொற்பாவை ஆடாமல் சிலையாகிவிட்டாள்.

அவளுடைய கண்ணீர்த்துளிகள் உறையின் மீது தெறித்து விழுந்தன. உள்மனம் பெயரை உச்சரித்தது: ''....அழகேசன்!....''

பொய்யாய், கனவாய், பழங்கதையாய் ஆகிவிட்ட சூன்யவெளியிலே நின்று 'விதி' ஊழிக் கூத்து ஆடிக் கொண்டிருந்தது. இதயம் இழந்த அதற்கு இதைத் தவிர வேறென்னதான் தெரியும்?



2. 'அந்தி நிலா'வும் அந்தி நிலாவும்!

'தமிழ்த் தொண்டு' பத்திரிகை நடத்திய நாவல் போட்டியின் பரிசளிப்பு வைபவம் தமிழ்த்திரு விழாவைப்போல அப்படிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், நட்சத்திரங்கள்-இவ்வாறு இலக்கியத்தையும் கலையையும் இணைத்துப் பார்க்கும் பிரமுகர்கள் பலர் வந்திருந்தனர். 'ஜே, ஜே' என்றிருந்தது அரண்மனைக்காரத் தெரு.

'தமிழ்த் தொண்டு' ஆசிரியர் பரிமேலழகர், பரிசு பெற்ற நாவலாசிரியையை அறிமுகம் செய்தார்; கல்வி அமைச்சர் பரிசுவழங்கினார்.

கையிலிருந்த ரோஜமாலை உதிர்த்துவிட்ட இதழ்கள் சில 'ஜிகினா'க்கம்பிகளில் செப்பிடுவித்தை செய்து கொண்டிருந்தன. 'அந்திநிலா' பரிசுபெற்ற ஐயாயிர ரூபாய்க்குரிய 'செக்' அழகியின் இடது கையில் பத்திரமாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

சுசீலா, செந்தாமரை இருவரும் பின்பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள்; அடிக்கொருதரம் அவர்கள் அழகியைப் பார்ப்பதும் சிரிப்பதுமாக இருந்தார்கள்.

முன்வரிசை ஆசனத்தில் இருந்த பணக்கார அம்மணி ஒருத்தி வெளியேறினாள். அந்த இடத்தில் வேறு பெண் வந்து உட்காரலானாள்.

"அழகி, என் வாழ்த்துக்கள்!" என்ற குரல் கேட்டு வலது பக்கமாகத் திரும்பினாள். அவள் அழகியின் பள்ளித்தோழி. பெயர் சூடாமணி; நல்ல பெண். கெட்டிக்காரி.

"அழகி, உன் கல்யாண விவரத்தை பத்திரிகையில் நீ

சுருக்கம் : பகுதி — ஒன்று

முள்

அழகி, திருமதி அழகேசன் ஆனுள்; ஆக்கப்பட்டாள் — மைலாப்பூரிலே!

இரும்புப் பாலத்தில் மயங்கி விழுந்திருந்த அழகியைக் கண்ட கரிகாலன், அவளைச் சைக்கிள் ரிக்ஷாவில் வைத்துத் தன் தமக்கை சுசீலாவின் வீட்டிற்கு அழைத்துச் சென்ருன். அழகியைக் காண வந்த அழகேசன், அவளுடைய எச்சரிக்கைக் கடிதத்தைத்தான் காண முடிந்தது.

அழகியின் உயிர்த் தோழியான செந்தாமரை என்ற நர்ஸ், ஆஸ்பத்திரியில் அவளுக்கு ஆதரவு தந்தாள். பிளவுபட்ட தன் வாழ்க்கைப் பாலத்தைச் செந்தாமரை செப்பனிட ஆயத்தம் செய்து வருவதை அறிந்த அழகி, அவளிடமிருந்தும் தப்பிச் சென்று விட்டாள்.

தன்னை மயக்கித் தன்னை வலுவில் திருமணம் புரிந்து கொண்ட தன் புருஷன் அழகேசன் பேரில் அழகி வழக்குத் தொடுக்கப் போகும் சேதி அறிந்து அப்படியே மலைத்து விட்டாள் செந்தாமரை.

அழகி, செந்தாமரைக்கும் ஒரு கடிதம் எழுதியிருந்தாள்; கடைசியில் அழகேசனைச் சந்தித்து ஆவன செய்யவேண்டுமென்ற முடிவுடன் மைலாப்பூருக்குப் புறப்பட்டாள் செந்தாமரை.

அப்பொழுது, அழகேசனைத் தோளில் சாய்த்தவாறு வந்த அழகியைக் கண்டு திகைத்தாள் செந்தாமரை. ஆனுல், அழகேசனைப் படுக்கையில் சேர்த்த மறுவினடி, தன் அத்தான் முரளியுடன் வெளியேறி விட்டாள் அழகி!

வழியில் அழகியைச் சந்தித்து நிறுத்தினுள். வலுக்கட்டாயப் படுத்தி அவளைத் தன் விடுதிக்கு அழைத்துச் சென்ருள் செந்தாமரை.

'அந்தி நிலா' என்ற தன் நவீனம் ஐயாயிரம் ரூபாய் பரிசு பெற்றுள்ள செய்தியை அறிந்தாள் கதாசிரியை அழகி.

அழகேசன் ஜவுளிக் கடையில் கொள்ளை போன விஷயமாக, கரிகாலன் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடப்பட்டான்; கஜேந்திரனிடமிருந்து கரிகாலனுக்குக் கிடைத்த ஆறு புகைப் படங்கள் அழகியிடம் புதிர் போட்டன — எல்லாம் அழகேசனைப் பற்றித்தான்!

அழகேசனின் தலைமையில் அழகிக்குப் பரிசளிக்கப்படும் என்பதாக முரளியின் கையிலிருந்த விளம்பரம் சொன்னது. 'முள் இல்லாமல், ரோஜாப் பூக்களைப் படைக்கப் பழகிக் கொள்ளக் கூடாதா, ஐயனே!' என்று வேண்டினுள் தாமரை.

போட்டிருந்த போட்டோவைக் கண்டதும் தான் அறிந்து கொண்டேன்; ஆமாம், உன் புருஷன் உன்னேடு வரவில்லையா?...''

''சூடா, அவருக்குக் கொஞ்ச நாளாக உடம்பு குணமில்லை....'' என்ருள் அழகி, தாழ்குரலில்.

சீனு வெடி வெடித்தது போல 'கைதட்டல்' எழுந்தது.

'வாழிய செந்தமிழ்!
வாழ்க நற்றமிழர்!
வாழிய, பாரத மணித்திருநாடு!'

ஆசனத்திலிருந்து எழுந்து பின் பக்கம் திரும்பினுள். மூன்ருவது வாசற்படியில் நின்ற ஓர் உருவத்தைப் பார்த்ததுதான் தாமதம், அழகிக்குத் தலை சுற்றியது.

அவள் பார்த்த உருவம் வேறு யாருமல்ல—சாட்சாத் திருவாளர் அழகேசன்!

''போகலாமா அழகி?'' என்று கேட்டபடி, சுசிலாவும் நர்ஸ் தாமரையும் வந்தார்கள்.

''ஒ...போக வேண்டியதுதான்... இந்த செக்கை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், அக்கா!'' என்று சொல்லிப் பரிசை சுசீலாவிடம் சேர்ப்பித்த பிறகு, மேடையின் பாதத்தில் போய் நின்ருள். ஆசிரியரிடம் விடை பெற்ருள். சிவப்பு ரோஜா இதழ்கள் இரண்டை உதட்டு நுனியில் வைத்து மென்ற வண்ணம், நாலு பக்கங்களிலும் பார்வையை நழுவவிட்டவளாக மெல்ல நடந்து வந்தாள் அழகி.

மூவரும் புறப்பட்டார்கள்.

அழகியின் மனம் மாத்திரம் 'டக் டக்'கென்று அடித்துக்கொண்டது.

அரமனைக்காரத்தெருவில் கச்சாலீஸ்வரர் சந்நிதியைத் தாண்டினுர்கள். அழகியின் இடது காலில் முள் குத்தி விட்டது. பின் தங்க வேண்டியவளானுள் அழகி; சுசீலா, தாமரை இருவரும் கொஞ்சம் முன்னே நடந்தார்கள்.

முள்ளை எடுத்துவிட்டுத் திரும்பின வேகத்தில், எதிர்ச் சந்தில்

மடங்கித் திரும்பி வந்த அந்தப் பிளஷரை அழகி கவனிக்க முடியவில்லை. கார்மீது மோதிய அவள், மறுகணம் நினைவு தப்பித் தரையில் சாய்ந்துவிட்டாள்.

''அழகி!'' என்று கூப்பிட்டுக் கொண்டே திரும்பி வந்த சுசீலாவும் செந்தாமரையும் அழகியின் அவல நிலையைக் கண்டதும், பதைபதைத்துப் போய்விட்டார்கள்.

அதே சமயம்—

''ஐயோ, என்னுடைய அழகியா?'' என்ற வார்த்தைகளுடன் காரிலிருந்து இறங்கி வந்த அவ்வுருவத்தைப் பார்த்ததும், பெண்கள் இருவரும் பெண் பதுமைகளாயினர். 'அழகேசன்....!' என்ற குரல்கள் புறப்பட்டன.

அழகியின் நெற்றி, மூக்கு, கண் இவற்றிலெல்லாம் ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது.

இரவின் தொடுவளையத்தில் நின்று அந்திநிலா 'ஜதி' தவறுமல் சதிராடிக் கொண்டிருந்தது.

சுற்று முற்றும் பார்த்தான்; பிறகு, கைச்சட்டையை மடக்கி விட்டுக் கொண்டு, அழகியைத் தூக்கிக் காரின் பின்ஸீட்டில் கிடத்தினன் — அழகேசன்.

''அழகி, அழகி!'' என்று சத்தமிட்டார்கள் தாமரையும், சுசீலாவும். கரிகாலன் வேறு வந்து சேர்ந்தான்.

அதற்குள் அழகேசனின் 'ப்யூக்' கார் பறந்துவிட்டது.

பாதை ஓரத்தில் நழுவிக் கிடந்த அழகியின் தாலி, யார் கண்ணுக்கும் தென்படாமல், தன்னை மறைத்துக் கொள்ள எத்தனம் செய்து கொண்டிருந்தது. சுசீலா, தாமரை, கரிகாலன் ஆகிய மூவரின் கண்களிலும் அந்தத் தாலி தென்பட்டது.

''அழகி, அழகி!'' என்று நெஞ்சு வெடிக்கப் புலம்பிக் கொண்டிருந்தன — மூன்று உள்ளங்கள்.

(ஆமாம்; வளரும்)

தத்துவம்

வல்லிக்கண்ணன்

ஒரு செடியில் மலர்கள் குலுங்கிச் சிரித்து அழகாக மின்னின. முன்பு பூத்த மலர்கள் வாடியும், வதங்கியும், கருகி வீழ்ந்தும், சூலுற்று விதை பெற்ற நிலையிலுமாகத் தோற்றம் அளித்தன.

புத்தம் புதிய அழகு மலர் ஒன்று விதை பெற்ற மலரைப் பார்த்தது. முகம் சுளித்தது. 'அழகை அழித்தது வித்து' என்று முனங்கியது.

'அழகை அழிப்பதாவது! நான் தான் அழகைக் காப்பாற்றுகிறவன். அழகு என்னுள் அடக்கம். நான் இல்லையெனில் செடி ஏது? பூ ஏது? நீதான் எப்படி இருக்க முடியும்?' என்றது வித்து.

'அகம்பாவி! கர்வி! முட்டாள்!' என்று முனங்கினது புஷ்பம். வேறு சில மலர்களும் ஒத்துப் பாடின.

'வித்து இல்லையென்றால், செடி இல்லை' என்றது விதை.

'மலர் இல்லையேல், வித்தும் இல்லை' என்று சீறியது பூ.

'நான்தான் முதல்!' என்றது வித்து.

'இல்லை. நானேதான்!' என்றது பூ.

வாக்குவாதம் பலத்தது.

'ஏ அசடுகளா! என்றுமே புரியாத— புரிந்துகொள்ள முடியாத தத்துவந்தான் அது. எது முதல் என்கிற உண்மை இன்னும் கண்டு பிடிக்கப்படவேயில்லை. அதற்கு அவசியம்தான் என்ன? வீணுகச் சண்டை போடாமல் அவரவர் வேலையை ஒழுங்காகக் கவனியுங்கள்!' என்றது இயற்கை.

அட்டைப்படப் போட்டிப் பரிசு

வீணையினின் றெழுகின்ற நாதம்கேட்டு,
விழியசைக்க மனமின்றி இன்பமுற்று,
ஊனனைத்தும் உருகும்நிலை எய்தி ; விழியால்
உவகையொடு நோக்குகின்ற காட்சி என்னே !

தியாகன், இரங்கூன்.

கரங்களிலே இசைக்கருவி ; விழியில் பக்தி ;
கன்னியவள் மெய்மறந்தாள் ; காளை நோக்கும்
இரண்டுகயல் விளையாட்டைக் காண்பான் கொல்லோ !
அன்றியவன் இசையைத்தான் சுவைப்பான் கொல்லோ ?

சு. இலக்குமிபாய் பி. ஏ, மதுரை.

இன்ப இயல், நாடகம், இசையினேடு செந்தமிழ்
அன்பு ஞானம் கொண்டு நம் அன்னையிங்கு வந்துளாள் ;
கன்னலான வாழ்விலே களிப்புமிகக் கடவுளர்
புன்னகையா லருள் தரப் போற்றினரில் வாழ்வினர்.

வித்துவான் ச. சுந்தரேசன், சிதம்பரம்.

யாழுக்குத் தூதுசொலும் இசையின் இன்பம் !
ஏந்திழையாள் விரல்வண்ணம் கலையின் சிற்பம் !
கூழுக்கு வாடுகின்ற வறியன் முன்னர்
கொடுக்கின்ற அமுதந்தான் அஃது என்பேன் !

ப. தாமரைச்செல்வன், உடுமலைப்பேட்டை.

அந்தமில் ஆண்டவன் தன்னையே ஏத்தி யெம்
அன்னைத் தமிழினிற் பண்ணிசைக்க
செந்தமிழ்ச் செல்வியின் செங்கையில் இன்னிசை
சேரத் துடிப்பதை நோக்குவோமே !

இ. நாகராஜன், இலங்கை.

நீலமயில் வேலவனை நீள்சிலையி ராமனை யாம்
கோலக் கொலுவைத்துப் போற்றுகிறோம் – காலமெலாம்
பக்திச் சுடரேற்றிப் பண்பாட் டிசைமீட்டித்
தித்திக்க வாழ்வோம், அருள்.

டி. எஸ். பத்மநாபன், திருச்சி–2.

எழில்நலம் காட்டியோ இன்னிசை மீட்டியோ
விலைக்கு இதயமோ வேண்டினள் ? கேட்டாள் !
தங்க விழைந்தானே ? தன்னையும் விற்ருன் !
தங்கச் சிலையோ அவள் ?

மூவேந்தன், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.

கொலுப்பாவை அடுக்கிவைத்துக் கொண்டானை அருகிருத்தி,
கோலநகை புரியாது பாவையவள் பண்ணிசைக்க,
[illegible] பார்த்திருக்கும் சிங்காரக் காதலனும்
[illegible] வை ஆனுனே, பக்திப் பரவசத்தால் !

மின்மினி, வடலிவிளை.

147668



இதும்

மறந்துவிடாதீர்கள்! 'ஓ.கே.' வனஸ்பதி டின்களில் பரிசுக் கூப்பன்கள் உள்ளன. அவற்றிற்குப் பதிலாக அழகான அமைப்புடன் கூடிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை வெகுமதியாகக் கொடுக்கிறோம். ''ஓ. கே.'' வனஸ்பதி கூப்பன்கள் சேருங்கள், உங்களுக்குப் பிடித்த பரிசைப் பெறுங்கள்.

மேலும் விவரங்கள் அறிய, உங்கள் அருகில் உள்ள 'ஓ. கே.' வியாபாரியிடமிருந்து படங்களுடன் கூடிய 'போல்டரை' வாங்கிப் பாருங்கள்.

OK ஓ.கே வனஸ்பதி

ஒரு அவுன்ஸிற்கு 700 I.U. வைட்டமின் 'A' கொண்டது
1, 2, 5, 10 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.

தயாரிப்பவர்கள்:

தி ஈஸ்ட் ஏஷியாடிக கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.

EP

எங்கும் புகழ்பெற்றது!

வினாயகர்

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18. அண்ணா பிள்ளை தெரு, சென்னை. 1.

புதியதும், ருசி
யுடன் கூடிய.

ராதாஸ்

குளுகோஸ் பிஸ்கட்டுகள்
கேக்குகள், பன், ரொட்டி
மற்றும் பல..

புரொப்ரைடர்: T.P.G. சாமி

ராதா பிஸ்கட் பாக்டரி

பேக்கர்ஸ் & கன்பெக்ஷனர்ஸ்

161, தங்கசாலை தெரு... மதராஸ்-1.

சென்னையில் சிறந்து விளங்குவது!
அசோகா மார்க்
பட்டணம் பொடி
ஒரே சிமிட்டா பொடியில் உற்சாகமளிப்பது
காரம், மணம், குணம் நிறைந்தது.
தயாரிப்பவர்: M. சின்னப்பா,
2/278, தங்கசாலை தெரு, சென்னை-1.
KING ASOKA

உமது தினசரி
வேலைகளை பெங்கால் காலிகாட் பல்பொடியுடன்
துவங்கி ரின்டான் தாம்பூல மாத்திரையுடன்
முடியுங்கள்
UNIVERSAL BENGAL Kalighat DENTAL POWDER
RINTAN THAMBOOL PILLS
UNIVERSAL CHEMICAL INDUSTRIES
UNIVERSAL CHEMICAL INDUSTRIES, MADRAS-1.

குடும்பக் கட்டுப்பாடு
கர்ப்பத்தடை
இம்மாத்திரைகளை 12 தினங்கள் உட்கொண்டால் கர்ப்பக்கட்டுப்பாட்டுக்குப் பாதுகாப்பளிக்கிறது
முழு சிகிச்சைக்கான 21 பில்லைகள் பாக்கிங் விலை ரூ 12/- வி.பி.பி. தனி
SPECK TABLETS
FOR CONTRACEPTION IN ITS EASIEST AND MODERNISED FORM
SEENU & CO.
இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமிருந்து, பலதுறைகளிலுமுள்ள, இதை உபயோகித்த எண்ணற்றவர்களிடமிருந்து ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் கிடைத்துள்ளன.
அரங்கில் "ஸ்பெக் டாப்லெட்டுகள்" (ரிஜிஸ்டர்டு) வெண்மணிகள் வாயில் போட்டு சாப்பிடுவதற்கு வழங்கப்படுகிறது.
எங்கும் கிடைக்கும்
தந்தி "ORCAS" (ஸ்தாபிதம் 1946) போன் 55357
சீனு அண்ட் கோ., 28, R. தாண்டவராய கிராமணி தெரு, மதராஸ்-21.
கிளை சிங்கப்பூர்-8. (சிலோன்) ஏஜண்டுகள் N. C. M. ஸ்டோர்ஸ் 82 மெயின் தெரு, கொழும்பு-11. (ADVT. PERMITTED UNDER G. O. MS. NO. 1121 HEALTH)

M. M.

பெருங்காயம் &

சாம்பார் பவுடர்

M. M. & N. C.

ஜவ்வாது

பத்திகள்

55 & 555

மயில் மார்க்

சீயக்காய்த்தூள்

உபயோகியுங்கள்

மயில் மார்க் நிலையம்

சென்னை - 21.



& O. R. C. Bar Soaps

தி. தி. ஏகப்ப செட்டி அண்டு ஸன்,

(உலோக வியாபாரம்)

அரசாங்கப் பதிவு செய்யப் பெற்ற

இரும்பு எஃகு விற்பனையாளர்

துவக்கம் : 1860

செயலகம் : 116, நைனியப்ப நாய்க்கன் தெரு,
சென்னை - 3.

உரிமையாளர் :

தி. தி. குப்புசுவாமி செட்டியாரும் அவர் புதல்வர்
தி. தி. சண்முக வடிவேலும்

எல்லா வகைப்பட்ட இரும்பு, எஃகு, கம்பி, தகடு, முதலியவைகளும், செம்பு, பித்தளைத் தகடுகளும் எங்களிடம் கிடைக்கும்.

உங்கள் அதிருஷ்டம் 1956-57க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில் ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1-4-0-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிறோம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிறோம்.

Shree Swami **SATNARAIN JYOTISH ASHRAM**
(U.M.) NAKODAR (Pb.)

தந்தி : அருள்மார்ட் போன் : 2407

ஸ்ரீ ஜோதி

வேஸ்ட் பேப்பர் கம்பெனி,

21, அண்ணா பிள்ளை தெரு,

மதராஸ் - 1.

ஆபீஸ் நியூஸ் பேப்பர்

பேல் நியூஸ் பேப்பர்

மலிவான விலையில் கிடைக்கும்.

வெள்ளை, காக்கி, டைலர் கட்டிங் துணி தேவை.

எங்களிடம் கட்பீஸ் பேப்பர் கிடைக்கும்.

மாய மோதிரம்! ரொக்கப் பரிசு ரூ. 1,000!

(அபூர்வ சக்தியுடையது)

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும், மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது, உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்தேவதைகள் உங்களிடம் அணுகாது. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள். இவர் பெயரைக் கேட்டாலே நடுங்குவர். காணாமற் போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும், உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றி யடைவீர்கள். சுருங்கச் சொன்னால் இம் மோதிரம் ஒரு பாதுகாப்பாளனைப் போன்றது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0. ஸ்பெஷல் அதிக சக்தி வாய்ந்தது ரூ. 3-15-0. தபால் செலவு தனி. பலன் இல்லை யென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Principal: THE BENGAL MESMERISM HOUSE

(U. M.) NAKODAR, (P. B)

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர்: ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன்: 2200.


அன்னையின் உற்ற தோழி
ஐயோ பாவம்! குழந்தைக்கு மறுபடி சளிப்பு
அச்... அச்... அச்
நல்ல முடக்கு வாதம்! வலி தாங்கமுடியவில்லை இன்றைக்கு ஆபீஸுக்குப் போனாற்போல் தான்.
அம்மா! என் கால் சுளுக்கிண்டுடுத்தே. இன்னிக்கி எப்படி மாட்ச் ஆடுவேன்.
டாக்டரின் அறையில
ஆமாம். அம்மா! தலைவலிக்கு மட்டுமல்ல. லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம், சுளுக்கு, பிடிப்பு, வாதம் மற்றும் எல்லா வலிகளுக்கும் மிகச்சிறந்தது. சளிக்கும், இருமலுக்கும், இணையற்ற நிவாரணி. நீங்கள் எப்பொழுதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.
ஓரியண்டல் பாம் தான் உங்களை இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தியது.
ஆமாம். நான் ஆபீஸுக்குக் கிளம்பியாச்சு! இலையைப்போடு
நானும் கூட இன்றைக்கு மாட்சிலே சக்கை போடு போடப் போகிறேன் அப்பா!
ஒவ்வொரு வீட்டிலும் லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் அவசியம் இருக்க வேண்டும்
ORIENTAL BALM
லிட்டில்ஸ்
ஓரியண்டல் பாம்
எல்லா சளி, வலி, நோவுகளுக்கும்

Regd. No. M 6309. UMA November 1956
Registere as a Newspaper in Ceylon.

Edited, Printed and Published by G. Umapathy, at Uma Printers,
" Uma House " 4/32, Thathamuthiappan Street, Madras-1. (Tamil Nadu.)